# பெண்

தொகுதி : 4 இலக்கம் : 2



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்

தொகுதி: 4 இலக்கம் : 2

**1999**

R. Sivalingam's Books Collections
No: 10, Buntings Lane,
Batticaloa.
Date .................... No ....................

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
**மட்டக்களப்பு**

**பெண்**

**சூரியா பெண்கள்** அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
46/2, பழைய வாடிவீட்டுத்தெரு,
மட்டக்களப்பு

**THE WOMAN** - A Journal Published by
Suriya Women's Development Centre
46/2, Old Rest House Road,
Batticaloa.

கௌரவ ஆசிரியர் : நதிரா மரியசந்தனம்

அட்டை வடிவமைப்பு : நதிரா

Printed by :**New Karthikeyan Printers (Pvt) Ltd.,**
**501/2, Galle Road.,**
**Colombo - 06**
**Tel : 595875**

விலை ரூபா 30/=

**வாசகர்களுடன்......**

'பெண்' சஞ்சிகையின் இவ்வருடத்திற்கான அடுத்த இதழை உங்கள் முன் கொண்டுவருவதில் மகிழ்ச்சியடைகிறோம். மீண்டும் மீண்டும் தாமதம் பற்றியும் அதற்கான காரணம் பற்றியும் குறிப்பிடுவதைவிட, பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் மாற்றுக்கருத்தியலை மனதிற் கொண்டதான இச்சஞ்சிகையை தொடர்ந்தும் வெளியிடுவது என்ற கொள்கையில் உறுதியாகவே இருக்கிறோம். அதே வேளையில் வாசகர்களிடமிருந்து விமர்சனங்களையும் கருத்துக்களையும் எதிர் பார்க்கிறோம்.

பெண்களை எழுத்துத் தளத்திற்குக் கொண்டுவருவதும் பெண்ணெழுத்தாளர்களை ஊக்குவிப்பதும் பெண்ணெழுத்தாளர் பாரம்பரியத்தை உருவாக்குவதும் எமது நோக்கமாக அமைகிறது. இந்தவகையில் 'பெண்'ணினூடாக புதிய எழுத்தாளர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளமை எமது வெற்றியே எனினும் இது சார்ந்த செயல் வாதத்தில் ஈடுபடும் பொழுது (கருத்தியல் ரீதியான சிந்தனைத் தெளிவுக்கோ அல்லது எழுத்துத்துறையில் ஊக்குவிப்பதற்கான பயிற்சிப் பட்டறைகள் நடத்தும் பொழுதோ) பெண்களது வாழ்வில் பலவித பிரச்சினைகள் இருப்பதை இனங்காண முடிந்தது. இவற்றுள் முக்கியமானது அவர்களது வறுமை நிலை. பெண்கள் வறுமை நிலையில் உள்ளமையானது எமது கருத்துக்கள் அவர்களைப் பலமானவையாகச் சென்றடையத் தடையாக உள்ளது. இதை இங்கு நான் குறிப்பிடுவதற்கான காரணம் தம் உணவு, உறையுள் போன்ற அன்றாடத் தேவைகள் பற்றியே சிந்திக்க முடியாதிருக்கும் இப்பெண்களிடம் நாம் பெண்விடுதலை பற்றிய கருத்துக்களை முன்வைப்பதென்பது சாத்தியமற்றதாகிறது என்பதனாலாகும். எனவே பெண்கள் பொருளாதார ரீதியாக வலுவானவர்களாக ஆவதென்பது அத்தியாவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது.

பெண்களுக்காக வேலை செய்யும் நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்படும் சஞ்சிகை என்ற அடிப்படையிலும், இவ்வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்ற சூழ்நிலை என்ற அடிப்படையிலுமே இக்கருத்தினை இங்கு குறிப்பிடுகின்றேன். இந்நிலைமைகளுக்குள்ளும் நாம் படிப்படியாக வெற்றியடைந்து கொண்டு வருகிறோம் என்பதும் உண்மையே.

தொடரும் யுத்தத்தால் வாழுகின்ற சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றம், நெருக்கடிகள், இடம்பெயர்வு, புலம்பெயர்வு என்பவற்றால் அனைவரின் வாழ்க்கையும் நெருக்குவாரத்திற்குள்ளாகியிருக்கின்றது. இங்கும் பெண்கள் 'பெண்' என்ற வகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவாறாக உள்ளன. இப்பிரச்சினைகளுள் ஏதோ ஒரு வகையில் பாதிப்புற்றவர்கள் என்ற வகையில் அவர்களுக்காக வேலை செய்வதென்பது மிக முக்கியமானது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அக்கறையுடன் செயல்வாதத்தில் ஈடுபடுவோரின் பங்களிப்பு என்பது பற்றிச் சிந்திப்பது அவசியமானது. இதனை விடுத்து மீண்டும் மீண்டும் பெண்கள் நிறுவனங்கள் என்ன செய்கின்றன? பெண்நிலைவாதிகள் என்ன செய்கிறார்கள்? என்று குறைகூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இக்கேள்விகள் பெண்கள் பிரச்சினைகள், இதனைத் தீர்ப்பதற்கான செயல்வாதத்தில் ஈடுபடுவோர் தொடர்பான புரிந்துணர்வுடன் கேட்கப்படுகின்றனவா?

விமர்சனங்கள், விவாதங்கள் என்பவை வரவேற்கத்தக்கவையே. ஆனால் அந்த விமர்சனங்களும் விவாதங்களும் ஆரோக்கியமானவையாக அமைவதென்பது முக்கியமானது. அடுத்த நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நாம் ஒவ்வொருவரும் இனியாவது காத்திரமான விவாதங்களை முன்வைப்போம். எமது விமர்சனங்கள் எழுத்துத் துறையில் பெண்களை ஊக்குவிப்பதாகவோ பெண்களுக்கான மாற்றுக் கருத்தியலை அடிப்படையாகக்கொண்ட சஞ்சிகைகளின் உருவாக்கத்திற்கோ வழிவகுப்பதாக அமையட்டும்.

அடுத்ததாகப் பெண்களது எழுத்துப்பாரம்பரியத்தினை நிறுவுவதன் அவசியம் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இதுவரை இருந்து வந்த வரலாறுகள் பெண்களை எழுத்துத் துறையில் ஊக்குவிப்பதை விடுத்து, அவர்களது எழுத்துக்களை நிராகரித்து இருட்டடிப்புச் செய்தவையாகவேயுள்ளன. ஏனெனில் பெண்கள் எழுதுவதென்பது ஆணதிகாரத்துவப் போக்குடைய சமூகத்தில் தடையாகவே உள்ளது. அவ்வாறு சமூகத்தில் ஒரு ஆக்கம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின் அவ்வாக்கம் ஆண்முதன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே எழுதுகின்ற பெண்கள் தெரிந்தோ தெரியாமலோ ஆண்முதன்மைச் சமூகக் கருத்தியலுக்குத் தம்முடைய அனுபவங்களை மொழிபெயர்க்க வேண்டியுள்ளது. அதாவது பெண் நிலை சார்ந்த அனுபவங்களை ஆண்நிலை சார்ந்த பொதுவான, நிலைபேறுடையவையாக்கப் பெற்ற மொழி, கற்பனை, மற்றும் கருத்தியல் என்ற ஊடகத்திற்கு மாற்றவேண்டியுள்ளது.

சம உரிமையைப் பெறுவதற்கும் அதனை நிலை நாட்டுவதற்கும் பலவிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஆண்வழி மரபு, கலாசாரத்தினால் கட்டுண்டிருக்கும் பெண்களை முழுமையாக விடுவிப்பதென்பது சற்றுத் தாமதமாகவே சாத்திய மாகும். ஏனெனில் பெண்களது சுயம், இருப்பு என்பவற்றை நிலை நிறுத்திக்கொள்வதற்குக் குடும்பம் என்ற அதிகார மையம் தடையாக வுள்ளது. ஆணதிகாரத்துவ சமூகம் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கு, பெண்களது பிரச்சினைகளையும் சமூகத்தில் அவர்களுக்குள்ள பால்நிலை சார்ந்ததான முரண்பாடுகளையும் வெளிக்காட்டாமல் ஆண்மையக் கருத்தடிப்படையில் இயங்கிவருகின்றது. பெண்களது சமஉரிமைக் கோரிக்கைகள் பல கொச்சைப்படுத்தப்படுகின்றன.

பெண்நிலைவாதிகளைச் சமூகத்திலிருந்து வித்தியாசப்படுத்தி படிமைப்படுத்தப்பட்ட உருவமாகப் பார்ப்பதும், பெண்நிலை வாதத்தைக் குறைத்து மதிப்பிட்டு வேண்டாத ஒன்றாக வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பதும் சமூகத்தின் இயல்பாகிவிட்டது.

இவ்வாறான கருத்துக்களை இல்லாதொழிக்க முக்கியமாகச் செய்ய வேண்டியது சமூகத்தின் ஆணதிகாரத்துவக் கருத்தியலை மாற்றியமைப்பதாகும். இதனைப் பெண்களும் பெண் நிலைவாதக் கருத்தியல் கொண்ட ஆண்களும் மேற்கொள்ள வேண்டும். அப்படியாயின் இதுவரை நாம் முன்வைத்த கருத்துக்கள் அதிகாரத்துவக் கருத்துக் கொண்ட ஆண் வர்க்கத்தின் சிந்தனை மாற்றத்திற்கு எவ்வளவு தூரம் உதவியுள்ளன? என்பது அடுத்த வினாவாகும்.

அவ்வாறாயின் வரலாற்றில் வெகு ஆழமாகப் பதிந்துள்ள 'பெண் இரண்டாம் பாலினம்' என்ற உணர்வை மாற்ற வேண்டும். அதைக்களைவதற்கான செயல்வாதத்தில் ஈடுபட வேண்டும். ஆணாதிக்கக் கருத்தியலை ஒழிக்கச் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்று சமூக நிகழ்வுகளின் புரிதல் பற்றிய பெண்நிலைவாதப் பார்வையை வளர்த்தலும் கூர்மைப்படுத்தலும் ஆகும். எனவே பால்நிலை சார்ந்ததாக ஒரு சமூகத்தின் கருத்தியலை அறிந்து கொள்வதென்பது பெண்நிலைவாதத்திற்கு அவசியமானதொரு செயற்பாடாகவுள்ளது. ஆணாதிக்கம் எல்லாக் கலாசாரங்களுக்கும் பொதுவானது என்றாலும் பெண்ணடிமை முறை கலாசாரத்துக்குக் கலாசாரம் வேறுபடுகின்றது. இவ்வாறே பெண்களின் எழுத்துக்களில் கால, பிரதேச வேறுபாடின்றிக் காணப்படுகின்ற தனித்தன்மையானது அவர்கள் ஆணாதிக்க சமூகங்களின் அரசியல், பொருளாதார கலாசார சாதனங்களால் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதன் விளைவேயாகும்.

படைப்பாற்றல் என்பது ஆண்நிலை சார்ந்த தொழிற்பாடாகக் கருதப்பட்டதால் கடந்த காலங்களில் பெண்கள் எழுத முற்பட்டபோது பல சிக்கல்கள் தோன்றின. பெண்கள் படைப்பாற்றல் அற்றவர்கள் என்று கருதப்படுவதற்குக் காரணம் லிங்க முதன்மைக் கோட்பாடாகும். ஆனால் தற்பொழுது பெண்கள் எழுத்துத் தளத்தில் ஓரளவு கால் பதித்துள்ளனர்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது பெண்ணுக்கென்று தனிவரலாறு உண்டு. ஆனால் அவ்வாறு பார்க்காது பெண்களது வரலாறு தொலைந்துபோன இருட்டடிப்புச் செய்யப்பட்ட வரலாறாக

வேயுள்ளது. எனவே இந்த வரலாற்றை மீள் கண்டுபிடிப்புச் செய்வதும் அல்லது பெண்களுக்கென ஓர் எழுத்துப் பாரம்பரியத்தைப் புதிதாக அமைத்தலும் அவசியமாகின்றது. பெண்களின் இலக்கியப் பாரம் பரியத்தை மீளமைத்தல் என்பது ஆணாதிக்கச் சர்வாதிகாரத்திற்குச் சவால்விடுவதாகும்.

கலாசார, இலக்கியப் பாரம்பரியத்திற்கு பெண் எழுத்தா ளர்களின் பங்களிப்புப் பற்றிய தெளிவு மிக அவசியமானது. அத் தோடு பெண்கள் ஊமைகளாக்கப்படுவதால் சமூகத்தின் அரைவா சிப்பகுதியினரின் குரலைக் கேட்க முடியாது போய்விடும். ஒரு குறிப்பிட்ட மொழியானது இலக்கியமரபு அல்லது பாரம்பரிய மொன் றினை எழுதுகின்றபோது பெண்களது ஆக்கங்களும் பங்களிப்புக் களும் கணிப்பிடப்படாமல் போனால் முழுமையான பாரம்பரிய மொன்றினை நிறுவ முடியாது போய்விடும்.

எனவே பெண்களை நிராகரித்த இலக்கியப் பாரம்பரிய த்திலிருந்தும் பெண்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட 'மாதிரிய ங்களிலிருந்தும்' (Models) விடுபட்டுப் பெண்களுக்கென அவர்களு டைய கருத்து நிலைப்பட்ட எழுத்துப் பாரம்பரியமொன்றை நிறுவ வேண்டும்.

எனவே பெண்களை எழுதத் தூண்டுவதும், பெண்களை ஒடுக்குமுறைக்குள் இருந்து விடுபடவைப்பதற்கான அல்லது விழிப்ப டையச் செய்வதற்கான மாற்றுக் கருத்தியல்களை அவர்களைச் சென்றடையத்தக்கவாறு சஞ்சிகைகளினூடாக முன்வைப்பதும் அவசியமாகும். இவற்றை ஓரளவு பூர்த்தி செய்வதாக 'பெண்' தாங்கி வரும் ஆக்கங்கள் அமையும் என்று நினைக்கிறேன்.

-ஆசிரியர்-

# சுதந்திரத்திற்குப் பின் பொருளாதாரத்தில் பெண்களின் வலுவாக்கம்

- சேபாலி கோதாகொட -

இக்கட்டுரையில் சமூகவியலாளாரான சேபாலி கோதாகொட சுதந்திரத்திற்குப் பின் பொருளாதாரத்தில் பெண்களின் வலுவாக்கம் எனும் தலைப்பில் இலங்கையின் பல்வேறு அரசாங்கங்களினால் பின்பற்றப்பட்ட அபிவிருத்திப் பாதையை விமர்சிக்கின்றார்.

## இலங்கையின் அபிவிருத்தி செயன்முறையில் பெண்கள்

அண்மைக் காலத்தில் அபிவிருத்தியோடு தொடர்புடைய கொள்கைகள் யாவும் பெண் தொழிலாளர் ஆளணியின் பங்களிப்பில் பாரிய கவனத்தைச் செலுத்தியுள்ளன. அத்துடன் பால் நிலையுடன் தொடர்புடையனவான பெண் தொழிலாளர்களின் பிரச்சினைகளையும் இனங்கண்டுள்ளன. ஆகவே பெருமளவு தொழிலாளர்கள் தேவைப்படுகின்ற தொழிற்றுறைகள், தொழில்நுட்பங்கள் யாவும் பெண், தொழிலாளர்களை மையமாக வைத்தே கருத்திட்டமிடப்பட்டுள்ளன. மொத்தத் தேசிய உற்பத்தியோடு தொடர்புடைய புடவைக் கைத்தொழில், தோட்டத் தொழிற்றுறை, மேற்காசிய வருமானம் ஆகியவை யாவும் பெண்களின் உழைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளன.

தொழிலாளர் ஆளணியின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான பாரம்பரிய வரைவிலக்கணங்களின் அடிப்படையில் பார்க்கும்பொழுது இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் தேசிய பொருளாதாரத்துக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பெண்கள் அளப்பரிய பங்காற்றியுள்ளமை தெரிய வருகின்றது.

தேசிய அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்புச் செய்தவர்களாகப் பெண்கள் கருதப்படுவது, 'அபிவிருத்தியில் பெண்கள்'

என்ற எண்ணக்கரு 1970 களில் தோன்றிய பின்பும் 1975 இல் பெண்களுக்கான அனைத்துலக மாநாடு இடம்பெற்ற பின்பு பெண்களுக்கான தசாப்தம் ஐ.நா. வினால் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னரும் மேலும் வலுப்பெற்றது.

இது பல தசாப்தங்களாக அபிவிருத்தி தொடர்பான பலவிதமான கோட்பாடுகளும் நடைமுறைகளும் ஆராயப்பட்டதையடுத்து ஏற்பட்ட ஒன்றாகும். இதன்படி பார்க்கும் பொழுது, ஒரு நாடு பொருளாதார, சமூக மேம்பாடுகளை அடைய வேண்டுமாயின் பொருளாதார உற்பத்தித் திறன்படைத்த அந்நாட்டின் குடிமக்களின் உழைப்பை நன்கு பயன்படுத்துவதோடு அவர்களுக்கான போதிய நலன்கள் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியில் பெண்களின் பங்கு தொடர்பான இக்கருத்து, வீடுகளில் பெண்கள் செய்யும் வேலைகள் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் அளிக்கும் பெரும் பங்களிப்பாகக் கருதப்படுவதற்கு வழிவகை செய்தது. அவர்கள் இதற்காகச் செலவிடும் நேரத்தையும் அதன் பெறுமதியையும் கணிப்பீடு செய்து பார்க்கும் போது இவர்கள் தொடர்ச்சியாக இடையறாது வீட்டிற்கு மட்டுமல்லாது தேசிய பொருளாதாரத்திற்கும் பங்களிப்புச் செய்வது தெரியவந்துள்ளது. பெண்களது வேலைகள் மாற்றீடு செய்ய முடியாதவையாக (தாய்மார்களாக/மகளாக/சகோதரிகளாக) உள்ளதோடு வீட்டிற்குள்ளே ஆண்களும் பெண்களும் செய்யும் வேலைகளின் பெறுமதி பால்நிலை அடிப்படையில் வேறுபடுவதும் அவதானிக்கப்பட்டது.

இப்புதிய கண்ணோட்டம், வரலாற்று ரீதியான பதிவுகளும் சமூக நடைமுறைகள் பற்றிய சான்றுகளும் இலங்கையில் பெண்கள் சமூகமேம்பாட்டிற்கு, பொருளாதாரத்துறைக்கு ஆற்றியுள்ள பங்கினை மிக முக்கியம் வாய்ந்தவையாகக் குறிப்படுகின்ற போதும் அவர்களது உற்பத்தித் திறன் சந்தையில் அவர்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை அடிப்படையாக வைத்தே கணிப்பிடப்படுகின்றது. எனவே ஒரு நாடு முதலாளித்துவ பொருளாதார சித்தாந்தங்களைக் கடைப்பிடிக்கும் போது சந்தையே தொழிலாளரையும் மூலதன வளங்களின் பெறுமதி

யையும் தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கின்றது என்பதே இதன் மூலம் பெறப்படுகின்றது.

ஐ.நா வின் அனுசரணையின் கீழ் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தமது தேசிய பொருளாதாரத்திட்டங்களில் பெண் தொழிலாளர்களின் உள்ளார்ந்த ஆற்றலை கூடுதலாக ஈடுபடுத்துகின்றமை ஊக்குவிக்கப்படுகின்றது. 1978ல் மகளிர் பணியகம் அமைக்கப்பட்டது. அத்தகைய தேசிய அமைப்பொன்றின் மூலம் பொருளாதார உற்பத்தித்திறன் கொண்ட நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு ஊக்குவிக்கப்படுகின்றது.

1983ல் மகளிர் விவகார அமைச்சு அமைக்கப்பட்டதோடு பொருளாதாரத்துறையில் பெண்களின் பங்கு, ஆற்றல்கள் பற்றிய அரசின் அவதானம் அதிகரிக்கப்பட்டது. 1980 களில் ஐ.நா போன்ற அமைப்புகளிலும் கற்றவர்கள் மத்தியிலும் பெண்களது அபிவிருத்தியுடன் அவர்களது வலுவாக்கம் இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்து அங்கீகரிக்கப்பட்டது. பெண்களை வேலைக்கமர்த்துவது அவர்களுக்கு வலுவூட்டுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவென கணிக்கப்பட்டது. அது பெண்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடு நாட்டின் அபிவிருத்திக்கான அவர்களது பங்களிப்பையும் மேம்படுத்துகிறது. 1993 இல் பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை நீக்குவதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் மகளிர் சாசனம் இலங்கையில் உருவாக்கப்பட்டது. பெண்களது உரிமை தொடர்பான ஐ.நா. சாசனமும், இன்னும் சட்டமாக்கப்படாத மகளிர் சாசனமுமே பெண்களின் கொள்கை தொடர்பான ஆவணங்களாக இலங்கையிலுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்கள் கீழ்மட்ட தொழிற்றுறைகளிலேயே அதிகமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை ஆய்வுகளின் மூலம் அறிய முடிகின்றது. 1995ல் (முதலாவது காலாண்டில்) தொழில் வழங்குனர்களில் 1.1% மானவர்கள் மட்டுமே பெண்களாக இருந்துள்ளனர். 67.6% மான பெண்கள் தொழிலாளர்களாகவும் 15.1% மானவர்கள் சுயமாகத் தொழில் செய்பவர்களாகவும் 16.2%

மானவர்கள் ஊதியம் வழங்கப்படாத குடும்ப வேலைகளைச் செய்ப வர்களாகவும் இருந்துள்ளனர். இந்த விபரங்கள் பொருளாதார வளங்களோடும் பெண்களது வலுவாக்கத்தோடும் தொடர்புடைய அவர்களது பங்களிப்பை புரிந்து கொள்ள உதவுகின்றன.

வருமானம், தொழில் நுட்பத்திறன், சமூக அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது தீர்மானம் எடுப்பதில் பெண்கள் புறந்தள்ளப்பட்டிருப்பதும் தெரியவருகிறது. இது அபிவிருத்தியில் பெண்களது வலுவாக்கத்தினை கேள்விக்குரியதொன்றாக ஆக்கியுள்ளது.

தற்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள், தொழிலாளர் உழைப்புச்சக்தியின் பங்களிப்பு என்பவற்றுக்கான வரைவிலக்கணத்தின் அடிப்படையில் நோக்கும் போது தொழிலாளர் ஆளணியில் பெண்கள் பங்கேற்பது மிக முக்கியமான ஒன்றாகப் புலப்படுகின்றது. கடந்த மூன்று தசாப்தங்களில் உழைப்போராக பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது. குறிப்பாக 20-45 வயதிற்கிடைப்பட்டோரே கூடுதலாக இதில் ஈடுபட்டுள்ளனர். இது 1970 க்குப் பின் அரசின் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதாக உள்ளது. தொழிற்றுறைகளில் பெண்களின் பங்களிப்பு 1981 இல் 1.6 மில்லியனாக இருந்து 1996 இல் 2.3 மில்லியனாக உயர்ந்துள்ளது.

## சக்தியும் வலுவாக்கமும்

'வலுவாக்கம்' என்பது சமூக வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டது என்பதை அவதானித்தல் வேண்டும். பட்லிவெல (Batliwala) என்பவர் குறிப்பிட்டது போல வலுவாக்கம் என்பதில் 'வலு' என்ற சொல் பொதிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே வலுவாக்கம் என்பது 'வலு' அல்லது 'சக்தி' தொடர்பான சமநிலையினை மாற்றியமைப்பதைக் குறிக்கிறது.

ஒவ்வொரு சமூகத்திலும் 'அதிகாரம்' அல்லது 'சக்தி' சமூக, பொருளாதார, அரசியல் தொடர்புகளில் தனிப்பட்டோருக்கும்

குழுக்களுக்குமிடையில் பிரயோகிக்கப்படுகின்றது. வலுவடைந்த வர்களாக ஆவதென்பது பொருளாதார அடிப்படையிலும் கருத்தியல் ரீதியாகவும் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவதைக் குறிக்கின்றது. அதாவது தனி நபர்களும் சமூகமும் குறிப்பிட்ட வலையமைப்பு களுக்குள்ளும் வலு தொடர்பான விதிகளுக்குள்ளும் தமது அதிகார த்தைப் பிரயோகிக்கின்றனர்.

நிதி, பொருட்கள் போன்ற வளங்கள் மீதான ஆதிக்கம் செலு த்தல் என்பது அடிப்படைத் தேவைகளான உணவு, உறையுள், கல்வி, தொழில், சுகாதாரம் என்பவற்றைப் பெறுவதைக் குறிக்கிறது. பெண் கள் இவ்வாறு ஆதிக்கம் பெறும்போது குடும்பத்தோடு சமூகமும் வலுப்பெறுகின்றது. ஆகவே பொருளாதார வலுவாக்கத்தை ஆய்வுக் குட்படுத்தும் போது பொருளாதார அம்சங்களை மட்டும் ஆய்வு செய்வது பொருத்தமானதல்ல. பெண் தொழிலாளர்களின் தொகை, பொருளாதார நடவடிக்கைகள், வேலையற்றோர் எண்ணிக்கை என்பவற்றுடன் பாரம்பரியமாக வரையறுக்கப்பட்ட தொழிலாளர் ஆளணியில் பெண்களுக்குரிய இடமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். எத்தகைய வேலைகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதும் பால்நிலை அடிப்படையில் வேலையிலுள்ளோர், வேலைய ற்றோர் என்பன பற்றிய கருதுகோள்களையும் ஆய்வு செய்தல் வேண்டும்.

பொருளாதார வலுவாக்கத்தின் அளவினை மதிப்பீடு செய்யும் போது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் பெண்களுக்கும் ஆண் களுக்குமிடையில் பொருளாதார வலு பகிரப்பட்டுள்ளது என்பத னைக் கருத்திற் கொள்ள வேண்டும். பெண்கள் பொருளாதார ரீதியாக வலுவடைந்துள்ளமையை பொருளாதாரத்துக்கு அவர்கள் ஆற்று கின்ற பங்களிப்பின் அடிப்படையில் கணிப்பீடு செய்ய வேண்டும். அத்தோடு தமது சொந்த வருமானத்தின் மீது அவர்களுக்குள்ள ஆதிக்கமும் தேவைகளை வெளிப்படுத்துவதிலுள்ள ஆற்றல்கள், தீர்மானங்களை எடுப்பதில் அவர்களுக்குரிய ஆற்றல்கள் என்பனவும் கணிக்கப்பட வேண்டும். (தனிப்பட்ட, பொது வாழ்க்கையோடு தொடர்புடையனவுமான தீர்மானங்கள்)

மேற் சொல்லப்பட்ட ஆய்வுகள் 'அபிவிருத்தியில் பெண்கள்' (WAD) என்ற அணுகுமுறையிலிருந்து 'பால் நிலையும் அபிவிருத்தியும்' (GAD) என்ற அணுகுமுறையில் அமைதல் வேண்டும். இரண்டாவது அணுகுமுறை வலு அல்லது ஆதிக்கத்தைப் பொறுத்த மட்டில், பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையில் சமபல மற்ற நிலை சமூக, பொருளாதார அமைப்பு மட்டத்திலுள்ளதையும் பெண்கள் இரண்டாந்தர நிலையிலுள்ளதையும் ஏற்றுக் கொள்கிறது.

## முடிவுரை:

## கலாசாரக் கட்டமைப்பாகப் பால்நிலை

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் இயன்முறையின் முக்கிய அம்சங்களையும் பெண்கள் வலுப்பெறுதலையும் ஆராய்ந்தபின் பால்நிலை தொடர்பான கருத்தியல் பெண்கள் வலுப்பெறுவதற்குத் தடையாகவுள்ள காரணிகளை விளங்கிக் கொள்வதற்குத் துணையாக அமையுமென்பது பெறப்படுகின்றது.

பால்நிலையில் ஆண்களையும், பெண்களையும் வெவ்வேறாக இனம் காண்பது உடலமைப்போடு மட்டும் நின்று விடாது சமூக விதிமுறைகளோடும் செயன்முறைகளோடும் தொடர்புடையதாகவுள்ளமையினை நாம் அவதானிக்கலாம். உதாரணமாக ஆண்களும் பெண்களும் ஒன்றாக இனவிருத்தி செயற்பாடுகளான பிள்ளை வளர்ப்பு, வீட்டு வேலை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தாலும் நடைமுறையிலுள்ள சித்தாந்தங்கள் அவை பெண்களுக்குரிய பொறுப்புக்களெனவே வலியுறுத்துகின்றன. தேசிய அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில், வீட்டில் பெண்கள் ஆற்றும் பணிகள் பொருளாதார நடவடிக்கைகளுக்கான அவர்களது பங்களிப்பாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்களது வீட்டு வேலை பொருளாதார அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படாமையால் தேசிய மொத்த உற்பத்தியில் அது சேர்க்கப்படவில்லை. அத்துடன் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டிலும் அது சேர்க்கப்படவில்லை.

பொருளாதார வளத்தைப் பெருக்க உதவும் பணிகளை மட்டுமே 'வேலை' யாகக் கருதி வீட்டு வேலைகளை 'வேலை' என்ற வரையறைக்குள் சேர்க்காமல் விடுகின்றமை பெண்களின் வேலை தொடர்பாகக்

கருத்திற் கொள்ளப்படுகின்ற யதேச்சையான விழுமியங்களைக் குறித்துக் காட்டுகின்றது. பால்நிலை அடிப்படையிலான இவ் வேலைப்பகுப்பு, எவ்வாறு சமூகக்கோட்பாடுகள் வேலை புரியுமிடங்களில் பெண்களைக் குறைவான பொருளாதார ஆதிக்கத்துக்குட்பட்டவர்களாக ஆக்குகின்றது என்பதனால் புலப்படுகின்றது. அத்தோடு வழமையான வீட்டு வேலைகள் பெண்களுக்கே உரிய பணிகள் என்ற நிலையினையும் தோற்றுவிக்கின்றது.

மேற் சொல்லப்பட்ட உதாரணங்கள் யாவும் கருததியல் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நிலையில் பெண்கள் வைக்கப்பட்டுள்ளமையை விளங்கிக் கொள்ள உதவும். வீட்டுவேலையில் பெண்களின் பங்களிப்பு அவர்கள் தாயாக/ மனைவியாக/மகளாக/சகோதரியாக ஆற்றவேண்டிய கடமைகளாகவே கருதப்படுகின்றன.

கலாசாரக் கட்டமைப்புக்குட்பட்ட பால்நிலை சமூக, பொருளாதார அபிவிருத்தியினதும் பெண்களின் வலுவாக்கத்தினதுமான குறியீடாகக் கருதப்பட வேண்டும். பல தசாப்தங்களாகப் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பு நாட்டின் பொருளாதாரத்தின் முது கெலும்பாக இருந்து வந்துள்ளது. பால்நிலை அடிப்படையிலான வேலைப் பகுப்பு அரசியலிலும் பிறவற்றிலும் அவர்கள் தீர்மானங்கள் மேற்கொள்ளும் நிலையினைப் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளது.

பால்நிலை பற்றிய கருத்தியல் ரீதியான கட்டமைப்புகளும் சக்தி/வலு பற்றிய கருதுகோள்களும் தொடர்புசாதனங்களில் பிரதிபலிக்கின்றன. பால்நிலை செய்தி ஊடகங்களிலும் முக்கிய பங்கை வகித்து வருகின்றது. விளம்பரங்களில் பெண்களின் படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதுவும் வீட்டு விடயங்களுக்குரியவர்களாகவே அவர்கள் சித்திரிக்கப்படுகிறார்கள். வேலைத் தளங்களிலிருந்து வீட்டிற்கு தாய்மார்களாகவும், மனைவியராகவும் கடமை செய்ய அவர்கள் செல்வதாகக் காட்டப்படுகின்றது. பெண்களும் ஆண்களும் சமமான வகையில் வீட்டுப் பணிகளைச் செய்வதாகக் காட்டப்படாதது ஒரு பெருங் குறையாகும்.

நன்றி : ஒப்ஷன்ஸ், 1998
(3 ம், 4 ம் காலாண்டிதழ்)

தமிழில் : ம.நதிரா

# மார்பகங்களின் கதைகள்✪

-சித்ரா-

கலை, இலக்கியத்தினது பாடுபொருள்களில் ஒன்றாகப் பெண்களின் மார்பகங்கள் அமைந்துள்ளன. பழங்காலத்திலிருந்து இன்றுவரை பல்வேறு கலாசாரங்களிலும் நாடுகளிலும் மனித உறுப்புகளில் மிக அதிகமான வர்ணனைக்கும், புனைவுக்கும் உட்பட்டதாகப் பெண்களின் மார்பகங்கள் அமைகின்றன.

தென்னாசியாவில் நீண்டகாலமாக எழுத்து இலக்கியம் வளர்ந்திருக்கும் மொழிகளில் மார்பகங்களைக் குறிப்பதற்குப் பல சொற்கள் உள்ளன. அவை ஒரு பொருள் பல சொற்களாக விளங்குகின்றன. அத்துடன் அவற்றை வர்ணிக்கும் நூற்றுக்கணக்கான தொடர்களும் உருவாகியுள்ளன.

தமிழில் முலை, நகில், கொங்கை, ஸ்தனம் என்றெல்லாம் பல சொற்களாகக் காணப்படுகின்றன. பெண்களை வர்ணிக்கும் போதெல்லாம் "இளமுலை மடவார்", "குரும்பை இள முலையினர்", "பந்தெனத் திரண்ட மார்பினர்" என்றெல்லாம் குறிப்பிடப்படுவதை எல்லோரும் அறிவர். இந்த வர்ணனைத் தொடர்கள் பழைய இலக்கியங்களிலிருந்து தற்கால இலக்கியங்கள் வரை தொடர்ந்து வருகின்றன. 'வண் கொங்கை' முத்தணி கொங்கை, கொங்கைக் குடம், கலசமுலை, வார் உருவப் பூண்முலையீர், 'பூண்முலை மங்கையர்' என்றெல்லாம் இவை அமைந்துள்ளன. இத்தொடர்கள் மார்பகங்களை காம உறவுக்கும், இன்பத்துக்கும் மாத்திரம் உரிய இலக்காக வர்ணித்திருப்பது தென்படும்.

உயர் இலக்கியங்களில் மனோரதியப் பாங்கில் விபரித்திருப்பது போன்றே வாய்மொழி இலக்கியங்களிலும் உயர்வு நவிற்சியுடன் பெண்களின் மார்பகங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக "செம்பதும கும்பதன தங்கரதி", "வாரிட்டிறுக்கும் முலையார்". போன்ற தொடர்களைக் கூறலாம். மத்தியகால ஓவியம், சிற்பம்

---

✪ *வங்காளப் பெண் சிறுகதையாசிரியர் மஹேஸ்வதா தேவியின் சிறுகதைத் தொகுப்பொன்றின் தலைப்பு மார்பகங்களின் கதைகள் (Breast Stories-1997) ஆங்கில மொழி பெயர்ப்பு) என்பதாகும். இதைப் பின்பற்றியதாகவே எனது கட்டுரைத் தலைப்பு அமைகிறது. அவருக்கு எனது நன்றிகள்.*

ஆகியவற்றிலும் மார்பகங்களைப் பெரிதுபடுத்தியே காட்டியுள்ளனர்.

பண்டைக்கால ஓவியம், சிற்பங்கள் ஆகியவற்றில் பெண்ணின் உடல் உயிர்ப்பினதும் வளத்தினதும் குறியீடாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. பெரிய வயிறு, பெரிய மார்பகங்கள் அகன்ற இடுப்புப் பகுதியுடன் புராதன நாகரிகங்களில் காணப்படும் பெண் சிற்பங்கள் அமைந்துள்ளன.

இத்தகைய வளத்தின் அம்சமாகப் பெண்ணைப் பார்த்த போது மார்பகங்கள் அந்த வளத்தின் பிரதான குறியீடாகக் காட்டப்பட்டன.

ஆனால் பெண்ணானவள் ஆணினது காம இச்சைக்குரிய, பாலின்பத்துக்குரிய ஒரு பொருள் என்ற எண்ணம் காலப்போக்கில் வளர்ந்து நிலைகொண்டு பரவியபோது மார்பகங்களும் தனியே ஆணினது இன்ப நுகர்ச்சிக்குரிய பொருளாகவே நோக்கப்பட்டன. அதுவும் தனியே ஆணினது இன்பத்துக்கெனப் படைக்கப்பட்ட வையாகவே கருதப்பட்டன. அதனாலேயேதான் இயற்கைக்கு மாறான வகையில் மார்பகங்கள் பற்றிய பல்வேறு புனைவுகளும் வர்ணனை களும் தோன்றின.

மார்பகங்களை ஆண்களின் வன்செயலுக்குரிய இலக்குகளாக கட்டமைக்கப்படும் நிலையும் இத்தகைய ஒரு பின்னணியிலேயே உருவாகியது. பால் இன்பம் பற்றிப் பேசும்போது அதில் ஒரு வன் முறை கலந்திருப்பதையும் அந்த வன்முறைக் கற்பனையினது பொரு ளாக மார்பகத்தைக் கொள்வதும் மேற்கூறியதன் விளைவு என்றே கூறலாம்.

பெண்களுக்கோ மார்பகங்கள் வெவ்வேறு வகையான உணர் வுகளுக்கு இடமளித்துள்ளன. கருவுறுதல், பிரசவித்தல் ஆகிய பெண் உடலின் தொழிற்பாட்டுடன் தொடர்புபட்டதே சிறுகுழந்தையின் உணவான தாய்ப்பால் மார்பகங்களில் உருவாதலாகும். கருவுற்ற காலத்திலும் பிரசவிக்கும் காலத்திலும் உடலில் ஹோர்மோன்களின் ஒருவகையான இயக்கத்தால் பெண்ணின் மார்பகங்களில் பால் சுரக்கிறது. குழந்தை உறிஞ்சிப்பால் குடித்தல் பாலின் சுரப்பைப்

பெருக்குகிறது. குழந்தையைப் போஷிக்க அதிக செலவற்ற, பாதுகாப்பான, இலகுவான ஒரு வழிமுறையே தாய்ப்பாலூட்டல் ஆகும்.

பால் சுரப்பதைப் பேணவும் பால் சுரப்பைப் பெருக்கவும் பாரம்பரியமாகப் பெண்கள் பலவழிமுறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். குறிப்பாக சில வகையான உணவுகள் பால் சுரப்பை அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. மேலும் சில வகையான இலைகளைச் சூடாக்கி மார்பகத்தில் ஒத்தடம் கொடுத்தால் பால் பெருகும் என்ற நம்பிக்கையுமுண்டு. இவ்வாறு தாய்ப்பால் பற்றிய அக்கறையும் கவனமும் பாலூட்டும் பெண்களிடமும் வயதான பெண்களிடமும் காணப்படும். அவர்களது உரையாடல்களில் மார்பகங்கள் அதிகமாக இடம் பெறுவது இத்தகைய ஒரு தொடர்பிலேயாகும். இத்தகைய உரையாடல்களும், கவனமும் பெண்களின் உலகம் சார்ந்தவையாக உள்ளன. மார்பகம் பற்றிய பெண்களின் இத்தகைய உணர்வுகள் பொதுத் தளத்தில் மேல் வருவதில்லை.

மாறாகப் பெண்களின் மார்பகங்கள் பற்றிய ஆண்களின் நோக்கே இலக்கியம், கலை யாவற்றிலும் வியாபித்து பொதுவான ஒரு பார்வையாக நிலை பெற்றுள்ளது.

பெண் தனது குழந்தையை மாத்திரமல்லாது வேறு குழந்தைகளுக்கும் பாலூட்டுவதை இன்று எமது கிராமங்களிற் காணலாம். உறவு காரணமாகவும் குடும்பத் தொடர்புகள் காரணமாகவும் இத்தகைய பராமரிப்பு இடம் பெறுகிறது.

ஆனால் பல்வேறு காரணங்களால் ஒரு பெண் தனது குழந்தைக்குப் பாலூட்ட முடியாமல் போகுமிடத்து வேறு பெண்களைப் பால் கொடுப்பதற்காகச் சம்பளத்திற்கு அமர்த்தும் வழக்கமும் தென்னாசியச் சமூகங்களிலும் தமிழ்ச் சமூகத்திடமும் இடம் பெற்று வந்துள்ளது. தமிழ்ச் சமூகத்தின் சாதி முறைமையும், அதனையொட்டி 'உயர் சாதியினர்' எனக் கூறப்பட்டோருக்கிருந்த அதிகார நிலையும் இவ்வாறு பால் கொடுப்பதற்குப் பெண்களைக் கூலிக்கு அமர்த்தும் வழக்கத்தில் செயற்பட்டுள்ளது. குறிப்பாக ''உயர் சாதியினர்'' ''தாழ்த்த

ப்பட்ட'' சாதிப் பெண்களைத் தமது குழந்தைகளுக்குப் பால் கொடுப்ப தற்காக வேலைக்கு அமர்த்தியிருந்தனர். அதற்காக அவர்களுக்கு மானியங்களும் வழங்கினர். பெரும்பாலும் பெண்களைக் கட்டாயப் படுத்தியும் அவர்களது விருப்பத்துக்கு மாறாகவுமே இது நடைபெற்று வந்ததை செவிவழிமரபுக் கதைகளும் கூறுகின்றன. சொத்துடைய 'உயர் சாதியினருக்கும்' அவர்களது 'அடிமை குடிமைகளாக' வாழ்ந்த மக்களுக்கும் இடையே காணப்பட்ட அதிகார நிலைப்பட்ட, சுரண்டல் தன்மை மிகுந்த ஒரு உறவு நிலையின் அடிப்படையிலேயே இது நிகழ்ந்தது. நாவலாசிரியர் கே.டானியல் தமது நாவல்கள் சிலவற்றில் இவ்விடயத்தைத் தொட்டுக் காட்டுகிறார்.

பண்டைய இந்திய கலாசாரத்திலும் இவ்வழக்கம் நிலவி யிருந்தது. பிரபுக்களதும், அரசர்களதும் குடும்பங்களில் குழந்தைக்குப் பாலூட்டுவதற்கு பெண்களை வேலையாட்களாக அமர்த்தும் வழக்கம் இருந்தது. ஐரோப்பிய நாடுகளிலும் மத்திய காலத்தில் இவ்வழக்கம் நிலவியது. Wet Nurse என்ற தொடர் இவ்வாறு பிற குழந்தைகளுக்குப் பாலூட்டும் பெண்களையே குறித்தது. இவ்வகையில் பெண்ணின் மார்பகங்கள் அவற்றின் பால் சுரப்பு ஆகியவை ஒரு வகையான பண்டமயமாக்கலுக்கு உட்பட்டன. பெண்ணினது பாலியல்பை ஆண்தலைமை ஆதிக்க முறைமை (Partiarchy) தனது நலன்களு க்காகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளில் இது ஒன்றாகும். (தற்கால த்தில் மருத்துவ விஞ்ஞானத்தின் வளர்ச்சி பெண்களின் கருப்பை யையே வாடகைப் பொருளாக்க வழிவகுத்ததை இங்கு சுட்டிக்கா ட்டலாம். முதலாளித்துவத்தினதும் ஆண் ஆதிக்க முறையினதும் (Capitalism & Partiarchy) கூட்டுச் செயற்பாட்டுக்கு இது நல்ல உதாரணமாகும்.)

அழகு, இன்பம், பாலியல்பு ஆகிய கருத்துகள் மாத்திரம் மார்பகங்களைச் சுற்றி நிலவவில்லை. மாறாகப் பெண்ணினது பாலியல்பே வியாபாரத்துக்குரிய ஒரு பொருளாக மாற்றப்பட்டுள்ளது என்பதே எமது அக்கறைக்கு உரியது. இவ்வாறு மாற்றப்பட்ட செயல் முறையின் பின்னாலுள்ள அதிகார ஒடுக்குமுறை அம்சங்களைப்

புரிந்து கொள்வதும், இந்நிலை தொடர்பாக மறைக்கப்பட்டிருக்கும் பெண்ணினது கதைகளையும் மன உணர்வுகளையும் வெளிக் கொண்டு வருவதும் முக்கியமானதாகும்.

அடுத்த விடயம் தற்காலத்தில் பெண்களை அச்சுறுத்தும் ஒரு நோய். மார்புப் புற்றுநோய். இன்று பெண்களைத் தாக்குகின்ற நோய்களுள் ஒன்றாக இது கொள்ளப்படுகிறது. மார்புப் புற்றுநோய் வளர்முக நாடுகளில் பெண்களின் மரணத்துக்கு ஒரு முக்கிய காரணமான நோயாகும் என ஆய்வுகள் கூறுகின்றன.

மார்பில் ஒரு சிறு கொப்புளம் ஏற்பட்டாலே அது மார்புப் புற்றுநோயின் ஆரம்பமோ என்று பல பெண்கள் மன உளைச்சல் கொள்கின்றனர். மார்புப் புற்றுநோய் பற்றிய பயம் இன்று பெண்கள் மத்தியில் நிலவுகின்றது. இன்று மார்பகங்கள் பற்றிய பெண் உணர்வுகள் இத்தகைய அச்சமாகவும் உள்ளன. ஆனால் மிக வெளிப்படையாக இவை கதைக்கப்படுவதில்லை. அதற்கான கலாசாரத் தடைகள் எமது சமூகத்தில் ஏராளம்.

சமீபகாலம் வரை மார்புப் புற்றுநோய் பற்றிய அறிவு பெண்களிடமும் அக்கறை வைத்தியர்களிடமும் இருக்கவில்லை. பெண்களின் இனப்பெருக்க சுகாதாரம், உரிமைகள் ஆகியவை பற்றி (Reproductive Health and Rights) பெண்கள் அமைப்புகளின் இடை விடாத வற்புறுத்தல்களால் தற்காலத்தில் இந்த நோய் பற்றி அக்கறை காட்டப்படுகிறது. பெண்ணின் உடலை மறைபொருளாகவும், பேசப்படக்கூடாத விடயமாகவும் கட்டமைத்துவிட்ட எமது கலாசாரத்தின் மார்புப் புற்று நோயால் இறந்து போன பெண்களது கதைகள் அவர்களது மரணத்துடனே புதைந்து போயும் விட்டது. தமக்கு ஏற்பட்ட நோயையும் அது தந்த துன்பத்தையும் அச்சத்தாலும் வெட்கத்தாலும் வெளிக்காட்டாது மரணித்த பெண்கள் பலராவர். அவர்களது மார்பங்களின் கதைகள் சொல்லப்படாதவை.

இத்தகைய பிரச்சினைகள் எல்லாம் இருந்தும் கூட இவற்றையெல்லாம் மூடி மறைத்து விட்டு ஆணுடைய பாலின்பத்துக்கு மாத்திரம் உரிய ஒரு பொருளாக மார்பகத்தை மிகை எளிமைப்படுத்துவதும், புனைந்து காட்டுவதும் எம்மால் சரியானபடி புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பாலியல்பு, காதல், காமம், பாலின்பம் ஆகியவை மனிதரதும்

மனித வாழ்க்கையினதும் பிரிக்க முடியாத, அவசியமான, இயற்கையான அம்சங்கள் என்பதை யாவருமே ஏற்றுக் கொள்வர். பெண்கள் இதற்கு விதி விலக்கானவர்கள் அல்லர். தமது பாலியல்பு பற்றிய உணர்வு அவர்களுக்கு உண்டு. தமது அழகிலும் இன்பத்தை உணர்வதிலும் அவர்களுக்கு உரிமையும் பங்கும் உள்ளன.

ஆனால் எமது சமூகத்தில் 'இதுதான் உனது அழகு' என்றும் 'இதுதான் உனது உணர்வு' என்றும் 'இதுதான் உனது இன்பம்' என்றும் குறிப்பிட்ட சில விடயங்களே பெண்ணுக்குக் கூறப்படுகின்றன. இவ்வாறு கூறப்படுபவை கருத்து ரீதியான கட்டமைப்புகளே. பெண்ணைச் சுற்றி ஒரு மாயையை உருவாக்கவே இவை பயன்படுகின்றன.

பெண்ணுடைய தன்னாற்றலை (agency) நிராகரித்து அவளை நுகர்ச்சிக்குரிய ஒரு பொருளாக்கியதன் விளைவே பெண்ணின் மார்பகம் பற்றிய மிகை எளிமைப்படுத்தப்பட்ட புனைவுகள்.

'குரும்பை இளமுலை' என்ற பண்டை இலக்கிய தொடரிலிருந்து ரவிக்கைக்குள் இருப்பது என்ன? (சோளி கீ பிச்சே) என்ற பாடல் ஈறாக உயர் இலக்கியத்திலிருந்து சினிமாப்பாடல் வரையும், கோயில் சிற்பத்திலிருந்து நீலப்படம் வரையும் சாராம்சத்தில் இதனையே செய்கின்றன.

பாலியல்பு, பாலின்பம் ஆகியவற்றின் ஒரு பகுதியான மார்பகங்கள் இத்தகைய ஒரு புள்ளியில் தான் பலாத்காரத்தினதும் பாலியல் வன்முறையினதும் இலக்குகளாக மாறுகின்றன. அவ்வாறு மாறுவதற்கு எமது இலக்கியத்தினதும், கருத்துக்களினதும் வினோதப் புனைவுகள் வழி சமைத்தும் உள்ளன.

இப்புனைவுகள் மார்பகங்களின் உண்மையான கதைகளை மறைத்து விடுகின்றன. இதனால் பொய்யான புனைவும் கற்பனையுமே வளர்கின்றது. பெண்ணின் தன்னாற்றல் குறித்தும், பெண்களுக்குத் தமது உடலின் மீதும் உணர்வுகள் மீதும் உள்ள உரிமைகள் குறித்தும் காத்திரமாகச் சிந்திக்கத் தலைப்பட்டு விட்ட இக்கால கட்டத்தில் பெண் உடல் பற்றிய புனைவுகள் மறு பரிசீலனைக்கு உட்பட வேண்டும். இம்மறுபரிசீலனையினதும் மாற்றுக் கருத்தினதும் ஆரம்பப் புள்ளியாகவே இக்கட்டுரை அமைகிறது.

# பெண்கள் அபிவிருத்தித் திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்னுரிமை ஏன் அவசியம்?

-பிரணவன்-

பெண்நிலைவாதம் ஒரு புரட்சிகரச் சித்தாந்தமாகும். சமூகத்தின் அரசியல், பொருளாதார, கலாசார தளங்களில் அதிகாரமுள்ள ஆண் வர்க்கத்திடமிருந்து அதன் அரைவாசிப்பகுதியினராகிய பெண்கள் தமக்குரிய அதிகாரத்தையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்வதற்காக முன்வைத்துள்ள கொள்கை நிலை அல்லது முழுமையான சித்தாந்தமே பெண்ணிலைவாதம். இங்கு (அரசியல், பொருளாதார) அதிகாரம் என்பதே அடிப்படைப் பிரச்சினை என்பதால் பெண்ணிலைவாதமும் ஓர் அரசியல் சார்ந்த கோட்பாடே. மேலும் கூறுவதாயின் பொதுவுடமைச் சித்தாந்தம் போன்றதே பெண்நிலைவாதமும். இருபுறமும் ஒடுக்குகின்ற அதிகாரமுடைய வர்க்கமும் ஒடுக்கப்படுகின்ற, அதிகாரம் செலுத்தப்படுகின்ற வர்க்கமும் உண்டு.

பொதுவுடமைக் கோட்பாடு உற்பத்தி உறவுகளை அடிப்படையாகக் கொண்டு முதலாளி, நடுத்தர, பாட்டாளி வர்க்கங்களாக சமூகத்தைப் பகுக்கிறது. உற்பத்தியிலும் பங்கீட்டிலும் சமத்துவத்தை ஏற்படுத்தி வர்க்கமற்ற சமூகத்தை ஸ்தாபிக்கக்கோருகிறது. பெண்நிலைவாதம் (தனிச்சொத்து குடும்பம் ஆகியன தோன்றிய காலத்திலிருந்தே தொடங்கிய) லிங்க முதன்மை மற்றும் ஆண்முதன்மைச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு ஆண்வர்க்கம், பெண்வர்க்கம் எனப் பகுக்கின்றது.

## பெண்நிலைவாதமும் பொருளாதாரமும்

உற்பத்தி உறவுகள் புரட்சியின் மூலம் மாற்றப்படும் போது வர்க்கம், சுரண்டல் ஆகியன இல்லாமல் போகும். தனிச்சொத்து முறையோடு தோன்றிய பெண்ணடிமை அதனுடனே முடிவுறும்

என்பது பொதுவுடமைவாதம். ஆனால் சமூகத்தின் அரைவாசிப்பகுதியினராகிய பெண்கள் விழிப்புறாமல், போராடாமல் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாத்தியமானதா? பெண்கள் பங்கு கொள்ளாத வர்க்கப் புரட்சி தேவையானதா? ஆம் எனில் புரட்சியின் பின் பெண்களின் நிலை என்ன? நடமாடும் பாலுறுப்புக்களாகவும் (போகப் பொருளாகவும்) இன விருத்தி இயந்திரங்களாகவும் அல்லது தேவதைகளாகவும் தெய்வீக அன்னைகளாகவும் தான் தொடர்வார்களா? சோவியத் ஒன்றியம் போன்ற நாடுகளின் பொதுவுடமை வரலாறுகளில் கூட இக் கேள்விகளுக்கு சாதகமான பதிலையே காண முடிகின்றது. அப்படியாயின் பெண்விடுதலை எப்போது? என்ற கேள்விக்குப் பெண்நிலைவாதமே விடை கூற வேண்டிய தகைமை உடையதாகிறது. பெண் விடுதலையைப் பொறுத்தவரை தற்கால அர்த்தத்தோடு பெண்நிலைவாதிகள் என்று தம்மை அறிந்து கொள்ளாத ஆரம்பகால (17 ம், 18 ம் நூற்றாண்டு) ஐரோப்பிய, அமெரிக்க பெண் விடுதலைச் சிந்தனையாளர்களிலிருந்து தற்காலத்தில் வடகிழக்கில் பெண்கள் அபிவிருத்திக்காக செயலாற்றிவரும் பெண்நிலைவாதிகள் வரை ஏற்றுக் கொண்ட ஒரு பிரதான அம்சம் பொருளாதார விடுதலையே ஆகும்.

20 ம் நூற்றாண்டின் ஆங்கில எழுத்தாளரும் பெண்நிலைவாத சிந்தனையாளருமாகிய வேர்ஜினியா வூல்ப் (Verginia Voolf) என்பவரும் பெண் விடுதலைக்கு பெண்களின் பொருளாதார ரீதியான சுயாதீனம் அவசியம் என்கிறார். தனக்கென்று ஓர் அறை (A Room of ones own) என்ற புத்தகத்தில் இது பற்றி மிக விரிவாகக் கூறுகிறார். இனி பெண் விடுதலைக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான நேரடித் தொடர்பை அறிந்து கொள்வது அவசியமானது.

ஆயுதமேந்திய வர்க்கப் புரட்சியோ மிதவாத சமூகச் சீர்த்திருத்தமோ அல்லது புரட்சிகரப் பெண் விடுதலைப் போராட்டமோ பெண்களுடைய முழுமையான பங்களிப்பின்றிச் சாத்தியமில்லை ஆயின் இவற்றுக்குப் பெண்களின் முழுமையான பங்களிப்பினை எவ்வாறு பெறுவது? ஏனைய புரட்சிகளுக்கு அவசியமானது போல் சிறந்த முறையிலான கருத்தியல் ரீதியான தயாரிப்பு பெண் விடுதலைக்கும் இன்றியமையாதது. அதேவேளை கருத்தியல் ரீதியான மாற்றத்

திற்கு பெண்களை வழி நடத்தும் போது அவர்களது தனிப்பட்ட குடும்ப, பொருளாதார நிலை ஓரளவேனும் திருப்தியானதாக இருக்க வேண்டும். ஏனெனில் முதலாளித்துவத்தின் தற்கால சந்தைப் பொருளாதாரம் மற்றும் இலத்திரணியல் மயமாக்கப்பட்ட அதி நவீன உற்பத்தி முறை என்பன சமூகத்தின் சகல மட்டத்தினரையும் (பெண்கள் உட்பட) வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்துகிறது. குறிப்பாக வடகிழக்கில் சிறுமிகளாக, வயது வந்தவர்களாக, இளம் வயதில் கணவனை இழந்தவர்களாக, வறிய முதயோராக உள்ள பெண்கள் தமக்காகவும் குடும்பத்திற்காகவும் முழுமையாகவோ, கணிசமான அளவோ பொருளீட்ட உழைப்பவர்களாக உள்ளனர். அலுவலகம் செல்பவர்களாயினும், உடலுழைப்பில் ஈடுபடுபவர்களாயினும் இடம் பெயர்ந்து அல்லது முகாமில் உள்ள தினக் கூலிக்குச் செல்லும் அகதித் தொழிலாளராயினும் அல்லது நிவாரணத்தை நம்பி வாழ்பவர்களாயிலும், பெண்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவே அதிகநேரம் செலவிடுகின்றனர். அவர்களிடம் சென்று பெண் விடுதலை பற்றித் திட்டமிட்ட நீண்ட காலக் கருத்துப்பரிமாற்றம் செய்வது சிரமமான காரியமே. அவர்கள் தமது பிள்ளைகளை இந்த முதலாளித்துவ, பேரினவாத அரசு இலவசமாய்த் திணிக்கின்ற ஆண் முதன்மைக் கல்வி பெற பாடசாலைக்கு அனுப்பவே சிரமப்படுகிறார்கள். காரணம் பிள்ளைகளும் உழைக்க வேண்டியுள்ளதும், பாதுகாப்பற்ற சூழலுமேயாகும்.

இந்நிலையில் மேற்கூறிய கல்வி பெறுகிற பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மற்றும் கணிசமான அளவு புத்திஜீவிகளுக்கும் சென்றடையத் தக்கவாறு கருத்தரங்குகள், கலை நிகழ்வுகளை நடத்துவதுடன் பத்திரிகை, சஞ்சிகைகள் மூலம் பெண் விடுதலையின் கருத்துக்களை முன்வைப்பதென்பது மிக அவசியமானதெனினும் ஆணாதிக்கத்திற்கெதிரான முழுமையான போராட்ட யுக்தியாக அமையாது.

எனவே பெண்கள் சிந்தனைத் தெளிவு பெற முற்போக்கான கல்வியும், அவர்கள் அக்கல்வியைப் பெற ஏதுவான ஓரளவேனும் பொருளாதாரச்சுமை குறைந்த நிலை அல்லது குறைந்தபட்ச பொருளா

தாரச் சுதந்திரம் இன்றியமையாதது.

எனவே தான் வடகிழக்கில் இன்று சேவையாற்றும் அரசு, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முக்கியமாகப் பெண்கள் அபிவிருத்தி நிறுவனங்கள் பெண்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை முன்வைக்க வேண்டியது அவசியம். பொருளாதார உற்பத்தியில் வடகிழக்கில் வாழும் பெண்களின் பங்களிப்பு மேம்பட்டுள்ள போதிலும் மரபு ரீதியான தொழில்களிலும் நவீன இயந்திரம் சார் தொழில்களிலும் பெண்கள் பங்காளிகளாக தீர்மானம் எடுப்பவர்களாக மாற்றப்பட வேண்டும்.



திட்டமிட்டதும் தொடர்ச்சியானதுமான, பெண்கள் பொருளாதார அபிவிருத்தித்திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். இவற்றுக்குப் போதிய நிதி உதவிகள் இன்மையும் அப்படி இருக்கும் பட்சத்தில், சரியான திட்டமிடல் முகாமைத்துவம், ஆளணிகள் பற்றாக்குறை என்பன பொதுவாகக் காணப்படுகின்றன. அத்தோடு அரச இராணுவக் கெடுபிடிகளும் பொதுவான பாதுகாப்பற்ற சூழலும் சேர்ந்து விடுகின்றன. சம்பந்தப்பட்ட விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பெண்கள் அபிவிருத்தி நிறுவனங்கள் துணிச்சலுடன் மேற்கொள்ள வேண்டும். இதுவே வடகிழக்கில் வாழுகின்ற பொருளாதார, பால், இன ரீதியாக ஒடுக்கப்படுகின்ற பெண்களின் விடுதலைக்கான முதன்மையான தேவையாகும்.

நான்
உயர்ந்தவன், உன்னதமானவன்
தனித்துவமானவன்
நான் ஆண்

ஆண் என்பதால்
ஆற்றல் உள்ளவன்
அனைத்தும் அறிபவன்
குற்றம் செய்ய முடியாதவன்

குற்றம் இருந்தாலும்
மன்னிக்கப்பட வேண்டியவன்
ஏனெனில்
நான் ஆண் குறியை உடையவன்

எனது ஆண்குறி
எப்போதும் எங்கு வேண்டுமானாலும்
யாரைக் கண்டாலும்
விறைக்கக்கூடியது

சகோதரியோ மகளோ
யாரும் விதிவிலக்கல்ல
எனது ஆண்குறி விறைக்கக்கூடியது
அது இயற்கை

பண்பாடு
எனக்கு நடிப்பிற்குரியது
நான் வேடம் போடக்கூடியவன்
சமுதாயத்திற்காக

இந்த விறைப்பை வளப்படுத்த
நீலப்படங்கள் உண்டு
புத்தகங்கள் உண்டு
அதனால் இது வளப்படுத்தப்பட வேண்டியது

நீ யார்?
வெறும் பெண்
இந்த விறைப்பைத் தீர்க்கப்
படைக்கப்பட்டவள்

நான்
உயர்வானவன்
உன்னத மாணவன்
போற்றப்பட வேண்டியவன்

நான் ஆண்
கட்டுப்பாடுகள் அற்றவன்
சந்தோசமானவன்
எனது ஆண்குறி
விறைக்கக்கூடியது.

-கல்யாணி-

# மௌனமாய் கரையும் மேகங்கள்

-விஜயலட்சுமி சேகர்-

வாசலில் ஆட்டோ சத்தம் கேட்க கையில் இருந்த இடியப்ப கோப்பையை மறந்து, வெளியில் சென்று எட்டிப் பார்க்கிறேன். ''சொர்னா வந்தாச்சு, சொர்னா வந்தாச்சு'' அயலவர் குரல் எல்லாம் ஆட்டோவைச் சுற்றி ஒலிக்கிறது. மெல்லிதாய் கறுப்பாய், வாயெல்லாம் பல்லாக, சிரித்தபடி என் அம்மா இறங்குகிறாள். எங்கோ கண்ட முகமாய் உள்ளது.

''ஏய் வினி உன்ர அம்மா வந்தாச்சு'' என்றபடி பக்கத்து வீட்டக்கா என் கையை பிடித்து இழுத்தபடி அவள் அருகே செல்கிறாள். ''சே...என்ன இந்தக்கா'' என்றபடி கையை உதற முடியாமல் அம்மாவைப் பார்க்கிறேன். இப்பொழுதுதான் அவளால் என்னைப் பார்க்க முடிகிறது. ''ஏய் கெயவி கெயவி'' என்று என்னைக் காட்டிச் சிரித்தபடி என் அருகே வந்து என் தோளைத் தொடுகிறாள். ''என் அம்மா இவள்'' மனம் ஆசையாய் சொல்லிக் கொள்கிறது.

அம்மா சவுதி பாசையில் எல்லோரையும் பார்த்து கதைக்கிறாள். ''கெயவி கெயவி...'' என என்னைப் பார்த்து அடிக்கடி சிரிக்கிறாள். எல்லோரும் அம்மாவைப் பார்த்து சிரிக்கிறார்கள். அம்மாவின் அப்பா ஆட்டோவில் இருந்து பெட்டிகள், வேக்குகள் ஒவ்வொன்றாய் இறக்கி வீட்டிற்குள் கொண்டு போகிறார்.

''இனி என்ன வினிக்கு அவள் அம்மா வந்தாச்சு'' என்றபடி அருள்மதி அக்கா புன்னகைக்கிறாள். ''வினியா, அவள் எங்க அவள் அம்மாவோட சேரப் போறாள், அவளுக்கு அம்மப்பாதான் உயிர், ''நாங்கள் ரண்டு பேரும் போதும். அவங்க அம்மா மற்றதரம் போனாலும் அவளுக்கு கவலையில்லை'' அம்மம்மா சொல்கிறாள்.

''என்கூட அம்மா இருக்க மாட்டாளா...?'' மனதில் இனம் புரியாத கவலை ஏற்படுகிறது. ''சொர்னா திரும்பவும் சவுதிக்கு போறாளா...'' அருள்மதி அக்கா கேட்கிறாள் ''இங்க இருந்தென்ன செய்வது, வினிக்கு நாங்கதான் வேணும், நாங்க இவளுக்கு என்ன குறவைச்சி வளக்கம். எட்டு வயதா போகுது, இன்னம் செல்லம் குறையுதா...? சொர்ணாவை வேற ஒரு நல்ல இடத்தில் அனுப்ப வேற

ஒரு நல்ல ஏஜன்சியோட கதைச்சு வைச்சுருக்கன்...'' அம்மப்பா வந்தவர்களிடம் கதைத்துக் கொண்டிருக்கிறார்.

அம்மா இன்னும் சிரித்தபடியே பேசிக் கொண்டிருக்கிறாள். வெளி நாட்டில் இருந்து வரும் மற்ற பெண்கள் போல் இவள் பல வண்ணச் செருப்போ, பெரிய அலங்காரமுள்ள கிளிப்புகளோ, வியர்க்கும் கலர் கலர் ஆடைகளோ அணிந்திருக்கவில்லை. எனக்கு இவளை நிறையவே பிடித்திருக்கிறது. ஆனால் மற்றவர்கள் எல்லாம் இவளைப் பார்த்து சிரிக்க கூடிய மாதிரி, இவள் ஏதேதோ புரியாத மொழியில் கதைப்பதும், எந்த நேரமும் சிரிப்பதும் என்னைப் பார்த்து ''கெயவி...கெயவி'' என அழைப்பதும் பிடிக்கவில்லை. இன்னம் முளையாத என் கீழ் பல்லைப் பார்த்தா கிழவி என்கிறாள்.

கையைப் பிடித்தபடி நடக்க வேண்டும் போல் உள்ளது. ஆனால் நெருங்க தயக்கமாய் உள்ளது. இன்று இந்த அம்மம்மா ஒரு நாளும் இல்லாத புதினமாய் என்னை இழுத்து இழுத்து தன் மடியில் உட்கார வைக்கிறாள்.

என் இடியப்ப கோப்பையில் இருந்த உணவை யெல்லாம் காக்கைகள் அடித்தபடி ஒவ்வொரு வேலிக் கம்பியிலும்....அம்மா கொணந்த சுவிங்கம், ரொபி அனைவர் கையிலும் இருக்க ஒரு மாதிரியாய் கூட்டம் குறைந்திருந்தது.

அம்மா குளித்து உடை மாற்றி விட்டாள். அம்மா திறந்து காட்டிய கறுப்புப் பெட்டிக்குள் நகைகள், காசுகள் எல்லாம் இருக்கிறது. அந்தப் பெட்டித் திறப்பை அம்மா, அவர் அப்பாவிடம் கொடுக்க, அம்மப்பா பெட்டியைப் பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டு கடைக்குச் செல்கிறார். குசினிக்குள் இருந்தபடி அம்மம்மா, என்னையும் அம்மாவையும் அழைக்கிறார். ''அப்பாட படத்திற்கு தினமும் பூவைப்பியா?'' சிரித்தபடி அம்மா என்னிடம் கேட்கிறாள்.

'ம்...அவன் பொண்டாட்டியையும், பிள்ளையையும் அவனோட அனுப்பி இருந்தா அவன் ஏன் சாகிறான். எல்லாம் இந்தக் கிழவன் தான் காரணம். பாவம் வினிட அம்மா, வாய் பேசாத அப்பாவி'' எங்க வீட்டோட அடிக்கடி சண்டை பிடிக்கும் பொன்னி அக்கா கூறியது காதில் ஒலிக்க, நெருப்பில் பொசுங்கிய அப்பாவின் முகம் மங்கலாய் ஞாபகம் வருகிறது.

உடுப்பு குவிந்து கிடக்கும் கட்டில் இன்று துப்பரவாய்,

சுத்தமாய் அம்மாவிற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ''வினி எங்கபடுப்பா அம்மா'' அம்மா, அம்மம்மாவிடம் கேட்கிறாள். ''அவளுக்கு என் மேல் காலைப் போட்டு கட்டி பிடிச்சாதான் நித்திரை யே வரும்'' என்றபடி அம்மம்மா என்னை இழுத்துக் கொள்கிறாள்.

''கெயா...வி'' என்று சிரித்தபடி அம்மா கட்டிலில் சரிகிறாள். அம்மாவின் வெளிநாட்டுப் போர்வையின் வாசம் மூக்கில் படுகிறது. அம்மாவை பார்த்தபடி படுக்கிறேன்.

திடீரென இருட்டில் என் முகத்தில் சூடாக ஏதோ ஊர்கிறது. ''என் அம்மா'' என் அம்மா அழுகிறாளா...? தடவிப் பார்க்கிறேன் அம்மம்மாவைக் காணவில்லை. வெளியில் குசு குசுப்பு சத்தம் கேட் கிறது. என் அம்மா என்னை இறுக்கி அணைத்தபடி...என் நெற்றியில், கன்னத்தில், தலையில், கழுத்தில் தன் முகத்தை தேய்த்து...தேய்த்து ...கொஞ்சி...கொஞ்சி அழுகிறாள்.

''அம்மா உனக்கும் அழத் தெரியுமா?'' கேட்க வேண்டும் போல் இருக்கிறது. கண்ணை மூடிக் கொண்டு பேசாமல் இருக்கிறேன். எனக்கு இப்படியான அணைப்பு என்றும் வேண்டும் போல் உள்ளது. அம்மாவின் உதடுகள், கண்ணீர், முகச் சூடு இன்பமாய் இருக்கிறது. ''பாவம் அம்மா ஏங்கி அழுகிறாளே...'' பட்டென்று அம்மா என்னை விடுவித்து எழுந்து செல்கிறாள். கதவு திறக்கப்படுகிறது. அம்மம்மா என் அருகே வந்து படுத்துக் கொள்கிறாள். ''அம்மா...அங்க நானும் வரவா...?'' மனம் கேட்கிறது. இந்த அம்மா நித்திரையா கொள் கிறாள்...?




நன்றி : ஒப்ஷன்ஸ்


# அழகிய நாயகி அம்மாளின்

## 'கவலை'

### (எங்கள் கதை)

-செ. யோகராசா-



'கவலை' (எங்கள் கதை) என்ற பெயருடைய வித்தியாசமான நூலொன்று தமிழ் நாட்டிலிருந்து அண்மையில் வெளிவந்துள்ளது. இதனை எழுதியவர் அழகிய நாயகி அம்மாள். எழுபது வயதிற்கு மேற்பட்டவரான முதாட்டி இவர். இந்நூல் பல காரணங்களினால் முக்கியம் பெறுகின்றது. குடும்ப நாட்டார் வழக்காறுகள் (Family Folklore) பற்றிப் பேசுவதனால் நாட்டாரியலுடனும் குறிப்பிட்ட (நாடார்) சாதியினரின் வரலாறு பற்றிப் பேசுவதனால் சமூகவியலுடனும் தன் வரலாற்று நாவல் என்று கருத முடிவதனால் புனைகதை சார்ந்த இலக்கியத்துடனும் அது தொடர்புபடக்கூடியது. இங்ஙனம் வெவ்வேறு விதங்களிலே முக்கியத்துவம் பெற்றிருப்பினும் ஒரு பெண்ணின் மனப்பதிவு என்ற விதத்திலேயே இங்கு எமது கவனத்தை ஈர்த்துள்ளது. மேற்கூறிய அடிப்படையிலே நோக்குவதற்கு முன்னர், இதற்கு அனுசரனையாக, கதை எழுதிய கதை பற்றி நூலாசிரியை கூறுகின்ற விடயமொன்று இங்கு எடுத்தாளத்தக்கது. அது பின்வருமாறு:-

''இப்படி இருக்கிற சமயம் ஒரு நாள் ஒரு கதைப் புஸ்தகம் கொண்டு வந்து என்னிடம் தந்து, இந்தக்கதையில் ஒவ்வொரு குடும்பங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறது என்பதை வாசித்துப் பாருங்கள் என்று தந்தான். கதையின் பெயர் மறந்து போச்சு....'கதை எப்படி?' என்று கேட்டான். இந்தக்கதையிலே செல குடும்பங்களில் நடந்த கஷ்டங்களை எழுதி, கதையாகி, புஸ்தகம் போட்டுருக்கு

எனக்கு இது பெரிசாத் தெரியவில்லை' என்று சொன்னேன். சபாபதி 'ஏன் அப்படிச் சொல்லுறிய' என்று கேட்டான்.

'இப்படிக் கதை எழுதினா எங்கதையை இந்தக் கதையை விட எத்தனையோ மடங்கு பெரிதா எழுதலாமே என்று சொன்னேன் சபாபதி அந்தச் சொல்லைப் பிடித்துக் கொண்டான். 'இப்படி நீங்க சொல்லுறதினால் ஒங்க கதையை எழுதுங்கள் என்று சொன்னான்...

என் வாழ்க்கை பூராவுமே கவலையுங் கஷ்டமும் கண்ணீருமாகக் கழித்ததினால் இந்தக் கதைக்கு கவலை என்ற பெயரை வச்சி எழுதினேன்'' (பக்.13-15)

மேற் கூறியவாறான, 'கவலையும் கஷ்டமும் கண்ணீருமான' வாழ்க்கை நாவலாசிரியையின் பிறந்தகம் சார்ந்தும் புகுந்தகம் சார்ந்தும் அமைகின்றது.

ஆயினும் இந்நூலிலே விரிவாகப் பேசப்படுவது, நாவலாசிரியை புகுந்தகத்திலே எதிர்கொண்ட கஷ்டங்களும் பிரச்சினைகளும் துன்பங்களுமே என்பதில் தவறில்லை. வீட்டுவேலைப்பளு, கூட்டுக் குடும்ப வாழ்க்கை நிலை குடும்பச் சண்டைகள், எடுத்ததற்கெல்லாம் கணவன் கொடுக்கும் அடி, உதை, கணவனுக்குத் தெரியாமல் பிறந்தகம் செல்ல நேரிடின் ஏற்படும் பிரச்சினைகள், சீதனம் கொடுத்தல் (சட்டபூர்வமாகவன்றி), பல பெண்களைத் திருமணம் செய்தல் (விரும்பிய போது அவர்களை துரத்துவதும் அழைப்பதும் பெரிய விடயங்களல்ல), சக்களத்திச் சண்டை, குடும்ப உறவினரால் ஏற்படும் கஷ்டங்கள், கணவனது சகோதர பாசம், அடிக்கடி நிகழும் குழந்தைகளின் பிறப்பும் இறப்பும் ஏற்படுத்தும் மனப்பாதிப்புகள், அவ்வேளைகளில் பெற்றோரது பாராமுகம், அண்டை வீட்டார் ஏற்படுத்தும் கஷ்டங்கள், விதவையான பின்னர் ஏற்படும் தனிமையும் வறுமை நிலையும் குழந்தை வளர்ப்பும் அநாதரவான நிலையும் என்றவாறு புகுந்தக வாழ்க்கையின் பல்வேறு கோலங்களும் ஒரு பெண்ணின் பார்வையில் உருக்கமான விதத்திலும் நேர்மையான முறையிலும் நூலில் பதிவாகியுள்ளன.

மேற்கூறிய பிரச்சினைகளுள் சில அழகிய நாயகி அம்மாளின் வாழ்க்கை பூராவும் இடம் பெற்று சொல்லொண்ணாத் துயரங்களை குடும்ப உறவினரும் அண்டை வீட்டாரும் ஏற்படுத்தும் கஷ்டங்கள் அத்தகையவற்றுள் குறிப்பிடத்தக்கதொன்று. எடுத்துக்காட்டாக,

உறவினனான கந்தசாமி ''பண்டே பகையாளி, பழி செய்த மாபாவி என்ற கதை போல, தலைநாளிலேயிருந்து பகையாளிகளாக இருந்த வர்'' அழகிய நாயகி அம்மாள் எல்லோரையும் எல்லாவற்றையும் இழந்து இடிந்து விழும் நிலையிலிருந்த அயலிலுள்ள சொந்த வீட்டைத் திருத்திக்கட்டும் போது கூட ''திரும்பவும் தன் குணத்தைக் காட்டி விளையாட ஆரம்பித்தார்'' உதவிக்கு எவருமே இல்லாத அழகிய நாயகி அம்மாளுக்கு அந்நிலையில் வீடுகட்ட வந்த கொத்தன் மாரே ஒன்றுபட்டுச் செயற்பட்டு கந்தசாமியின் செயற்பாடுகளுக்கு எதிராக நின்று வீடுகட்டும் 'உரிமையை' இறுதியிலே பெற்றுக் கொடுக்கின்றனர்.

இவ்வாறே பெண்கள் சிலரும் அழகிய நாயகி அம்மாளின் அவலங்களுக்குக் காரணங்களாயிருந்துள்ளனர். இவர்கள் பற்றி அவர் சில பாடல்களும் புனைந்திருக்கிறார். எடுத்துக்காட்டாக அமைவது, பின்வரும் பாடல்:-

*''அருவினையின் மாபாவி அவனொரு பெண்ணாலே*
*பெருமை யாவுந் தானழிய பேதைப் பருவந்தன்னில்*
*கரும வினைப் பயனென்ன பில்லி சூனியம் பல செய்து*
*இருவினையும் உணராத பாவி*
*இரு குடும்பத்தையும் கெடுத்து விட*
*கவலை என்னும் கதைக் குள்ளானேனே''*

அழகிய நாயகி அம்மாளுக்கு பல குழந்தைகள் பிறந்தாலும் ஒரு குழந்தை தவிர ஏனையவை இறந்து விடுகின்றன. அவ்வேளைகளில் அவரடையும் மனக்கவலை சொல்லி மாளாதது. அத்தகைய நிலை பற்றி ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்.

*''அடுத்த நாள் என் இருதயத்தில் கல்லேத்தி வைக்க*
*வந்த செல்வமகள் ஸ்ரீ ரெங்கநாயகியும்*
*காய்ச்சலாய்ப்படுத்தாள்....*
*இந்தக்கதையை விவரமாக விரித்தெழுத என்*
*இருதயம் தாங்காது. சுருக்கமாக எழுதுகிறேன்*

''....ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய், மருந்து செய்து பலனில்லாமல், என் உயிரில் தீயை பத்த வச்சிட்டு, அவள் ஜென்ம சாபத்தைத் தீர்த்துவிட்டு, தெய்வப் பெண்ணாகிய என் பொன் மகள் தெய்வலோகம் போய்ச் சேர்ந்தாள்.

பட்ட கஷ்டங்களும் அடைந்த துயரங்களும் என்னால் எழுத இருதயம் பெலக்கவில்லை. அவள் என் இருதயத்தில் ஏத்தி வச்ச தீயின் கொடுமை கண் வழியே நீராகச் சிந்துவதால் என்னுடைய உடம்பும் மனமும் தாங்கவில்லை.

ஒவ்வொரு கட்டமும் எழுதும் போதெல்லாம் இந்தப் பாவியாகிய என் உடம்பும் மனமும் தீயாய் எரிவதைத் தாங்க முடியாமல் தளர்ந்து படுக்கையிலாகி, படவேண்டிய கஷ்டங்களை எல்லாம் பட்டுத் தொலைத்து, பின்னும் எழுந்தும், துடங்கின கதையை முடிக்க வேணும் என்ற பிடிவாதத்தால் திரும்பவும் எழுதுகிறேன்''

அழகிய நாயகி அம்மாள் அனுபவித்த கஷ்டங்களுள் தனிமை வாழ்வும் முக்கியமானதொன்று. கணவன் இறந்து பிள்ளைகளும் இறந்து தப்பியிருக்கும் ஒரு மகனும் அயலூர் சென்ற பின் அத்தகைய தனிமை அவருக்கு அதிக கொடுமையாயிருந்தது. அது பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார் அவர்:

''நான் இப்போது சில வருசமாக சிறைவாசமிருக்கிறேன். எல்லாருக்கும் ஒரு குற்றம் செய்தால் இத்தனை வருசம் என்று இருக்கும். எனக்கு ஆண்டவன் கட்டளை விதி வசத்தால் ஆயுள் உள்ள மட்டும் ஆயுள் தண்டனை. இந்தத்தண்டனைக்கு நான் என்ன குற்றம் செய்தேன் என்று தெரியவில்லை. இது முன் வினைப் பயனால் கிடைத்தது.....''

மேற் குறிப்பிட்ட தனிமை நிலைத்துயரும் குழந்தைகளின் இறப்புகளும் தவிர அழகிய நாயகி அம்மாள் அனுபவித்த ஏனைய பல வித கஷ்டங்களுக்கும் அவரது குடும்பச் சீரழிவிற்கும் அடிப்படை

க்காரணம். பிறந்தகத்திலே தந்தையும் புகுந்தகத்திலே கணவனுமே என்பது அவர்களது இயல்புகளே என்பது நூலினை ஆழ்ந்து நோக்கும் போது தெரிய வருகின்றது. தந்தை ''இல்லையென்று சொல்ல இயலாத மனமுடையவர்கள் இதனால் எங்கள் செல்வம் கரைந்தது. கடன் வந்தது. ஊரில் உயர் நிலைப்பள்ளிக் கட்டிடம் உருவாக்கும் முயற்சியில் நாங்கள் இழந்த சொத்துக்கள் இப்போதுள்ள விலையில் கோடி பெறும். இந்தப் பிரச்சினைகளில் என் அப்பா என் பெரியப்பா பக்கம் நின்றது என் அம்மாவுக்கு ஏமாற்றமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது அதன் விளைவே அப்பா பற்றி அவர் தந்திருக்கும் சித்திரம்'' என்று பின்னுரையில் எழுதும் நூலாசிரியை யின் மகன் தொடர்ந்து இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

*''ஆனால் என் தந்தை பற்றிய செய்திகளைப் படித்த போது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். ஒவ்வொரு நபரைப் பற்றியும் இவ்வளவு நுட்பமாக எழுதிய என் அன்னை என் தந்தையை மட்டும் ஏன் எப்படி இவ்வளவுக்கு இருட்டடிப்புச் செய்தார் என்பது மட்டுமல்ல, வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் இழிவுபடுத்தியிருக்கிறார் என்பது எனக்குப் புரியவே இல்லை. அவரிடமே கேட்டேன். 'என் பார்வையில் அப்படித்தான் என்றார். அது நியாயம் தான். ஆனாலும் என் தந்தை பற்றி நான் சொல்லியாக வேண்டும்....''*

வெவ்வேறுபட்ட நிலையில் பெண்நிலை நோக்கும் ஆண் நிலைநோக்கும் இந்த இடத்தில் சந்திப்பது சுவாரஸ்யமாகவுள்ளது.

இவ்வாறே புகுந்தகத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட அவரது கணவனது இயல்பு எதையும் தட்டிக் கேட்காத இயல்பு - அடித்தளமாக நின்று செயற்பட்டு வந்துள்ளது. இது பற்றி நூலாசிரியை பின்வருமாறு விவரிக்கின்றார்.

*''கொண்டவன் கோழையானால் பெண்டென வந்தவள் ஏழையாவாள் என்று சொல்லுவது போல, நானும் கோழை கையில் அகப்பட்டு ஏழையாகி, செக்கைச் சுற்றி ஓடுகிற மாடு வெளியே தப்பி ஓட முடியாமலும் பூட்டாங் கயிறை அறுக்கத் தெரியாமலும் செக்கைச் சுற்றிச் சுற்றி ஓடுவது போல நானும் யார் என்ன கொடுவினைகளைப் பண்ணினாலும் அத்தனையும்*

*ஏத்துக் கொண்டு தப்பி ஓடத் தெரியாதவளாய் அந்தக் கோழை யின் சொல்லுக்கு உட்பட்டு இருந்து வந்தேன்''*

மேலே நூலாசிரியையின் தந்தை, கணவன் ஆகியோரது குண இயல்புகளூடாக அவரது குடும்பத்தில் ஆணாதிக்கம் மறை முகமாகச் செயற்பட்டு வந்துள்ளதை அவதானிக்கும் அதேவேளையில் அவர்க ளினதும் பிற ஆண்களினதும் வெளிப்படையான செயல்களூடாக அறியவரும் ஆணாதிக்கச் செயற்பாடுகளுள் சில மிகக் கொடுமை யானவை. எ-டு: ''அந்தக் காலத்தில் வீட்டில் பக்குவமடைந்து வீட்டிலாகி இருக்கும் பெண்களும், புருஷனை இழந்த பெண்களும் குற்றப்பட்டவர்கள் எனக்கண்டால் அவர்களை நடை விளக்கெரித்து சுட்டு விடுவார்கள். சிலரை வெளிக்குத் தெரியாமல் வெட்டிக் கொன்று சுட்டுப் போடுவார்கள். சிலரைச் சொந்த ஊரை விட்டு துப்புத் தெரியாமல் வெளி ஊருக்கு அனுப்பி விடுவார்கள்''

தமக்கு ஏற்பட்ட முற்குறித்தவாறான கஷ்டங்கள், பிரச்சி னைகள், அவலங்கள் என்பவற்றுக்கு நூலாசிரியை எவ்வாறு முகங் கொடுத்தார் அவற்றை எவ்வாறு தாங்கிக் கொண்டார் என்றொரு கேள்வி எமக்குள் எழுவது இயல்பே, அதற்கான விடை விதி பற்றிய அவரது நம்பிக்கையே -அவருக்கு அத்தகைய எதிர்ப்புச் சக்தியை அளித்துள்ளது என்பதாகும் (இது பற்றி அவர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.) இது அவருக்கு மட்டுமல்ல பெரும்பாலான தமிழ்ப் பெண்களுக்கும் பொருந்துவதாகும்.

முன்னர் எடுத்தாண்ட பந்தி (கொண்டவன் கோழையா னால்...' என ஆரம்பிக்கும் பகுதி) தமது மன உணர்வுகளை சிறப்புற வெளிப்படுத்தும் நூலாசிரியையின் ஆற்றலுக்கும் சான்று பகர்கின்றது தவிர மேலுள்ள பகுதியில் பழமொழியும், உவமைத் தொடர்களும் இடம் பெறுகின்றதல்லவா? இவ்வாறே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர் பொருத்தமான பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பன வற்றை அநாயாசமாகவும் கச்சிதமாகவும் சூழலுக்கு ஏற்றவாறும் கையாண்டு இந்நூலுக்கு உயர்வளித்துள்ளமை விதந்துரைக்கப்பட வேண்டியது. இவ்விதத்தில் இன்னொரு எடுத்துக்காட்டினையும் குறிப்பிடலாம். தன் தந்தை தங்க நகைகள் வாங்கி வந்து பூட்டியதை ஆசிரியர் பின்வருமாறு கூறுவார். ''விலை கொடுக்கும் மாட்டுக்கு

கயிறு மாற்றிக் கொடுக்கப்போடும் பூட்டாங் கயிறு போல, இந்த அட்டியலை அவரே என் கழுத்தில் பூட்டினார். கொலுசை சித்திகை யில் கொடுத்து என் காலில் போடச் சொன்னார். விலங்கு போடுவது போல என்காலில் போட்டார்கள்''

அதேவேளையில் பழமொழிகள், உவமைகளைக் கையா ளாமலுங் கூட அழகாகவும் ஆழமாகவும் தன் உணர்வுகளை வெளிப் படுத்தும் ஆற்றலும் நூலாசிரியைக்குள்ளது. தன் தங்கை வயதுக்கு வந்த நட்சத்திரம் நல்ல நட்சத்திரம் என்று உறவுக்காரப் பெண் கூறியதும் ஆசிரியர் தமது மனப் பிரதிபலிப்பை இவ்வாறு வெளிப்ப டுத்துகின்றார் ''சித்திரவதை செய்து சிறைச்சாலையில் அடைக்கும் நாளென்று அவர்களுக்குத் தெரியவில்லை.''

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. ஒரு பெண்ணின் பிறந்தக-புகுந்தக வாழ்வின் அவலங்களை உள்ளடக்கமாகக் கொண்டு தமிழில் ஒரு சில நூல்கள் வெளிவந்திருக்கின்றன. ஆயினும், அந்நாவலாசிரியர்கள் மேலே எடுத்துக்காட்டியவாறான இவரது வெளிப்பாட்டாற்றலைப் பெற்றி ருக்கவில்லை என்பதே அதுவாகும்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று பல்வேறு விதங்களிலும் இதுவரை அவதானித்தவாறு பெண்நிலைவாத - பெண்மையவாத நோக்கிலும் முக்கியத்துவம் பெறும் இந்நூலின் ஆசிரியை வேறொரு வருமல்லர் நாம் நன்கறிந்த எழுத்தாளர் பொன்னீலனின் தாயாரே. அவ்வாறாயின் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். அதாவது நூலின் முன்னுரையில் ஆ.சிவசுப்பிரமணியன் கூறுவது போன்று, ''பொன்னீலனது படைப்பாற்றலின் ஊற்றுக் கண்களுள் ஒன்றாக அவரது தாயும் இடம் பெற்றுள்ளார் என்பதை இந்நூலைப் படித்து முடித்தவுடன் உணர முடிகிறது'' எனலாம்.

இறுதியாக, இந்நூலைப் படித்து முடித்ததும் என்னுள் எழுந்த ஆதங்கமொன்று பற்றிக் குறிப்பிட வேண்டும். அது இதுதான்: 'அழகியநாயகி அம்மாள் போன்ற கவலை தாங்கிகளான கிராமத்து மூதாட்டிகள் பலர் எம்மிடையேயும் உள்ளனரன்றோ! அவர்களுள் சிலரை ஊக்கப்படுத்தின் 'கவலை' போன்ற ஓரிரு நூல்கள் ஈழத்திலிரு ந்தும் வெளிவரலாமல்லவோ'.!

# பெய்ஜிங்குக்குப் பின்னரான தென்னாசியச் சந்திப்பு,

## ஆகஸ்ட் 11-14, காத்மண்டு, நேபாளம்

-அம்மன்கிளி முருகதாஸ்-

1995 இல் சர்வதேச பெண்கள் மாநாடு பெய்ஜிங்கில் அனுஷ்டிக்கப்பட்டபோது அம்மாநாட்டில் 12 அம்சக் கோரிக்கைகள் பெண்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டன. இவை உலக நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது, எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பன்னிரண்டு விடயங்களும் தொடர்பாக அவ்வந் நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், பின்னடைவுகள், இந்த இடைக்காலத்தில் பெண்கள் தொடர்பாக அவ்வந்நாடுகளில் மேலெழுந்துள்ள பிரச்சினைகள், தடைகள் புதிதாகக் கிளம்பியுள்ள பிரச்சினைகள், தீர்வுகள் என்பன பற்றிய விடயங்களைக் கருத்திற் கொள்வதற்காகவும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்காகவும் இடைக்கால மீளாய்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்த மீளாய்வுகள் அந்தந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு தென்னாசிய நாடுகளுக்கான மீளாய்வும் அதுபற்றிய கலந்துரையாடலும் முன்மொழிவுகளும் சென்ற ஆகஸ்ட் மாதம் 11-14 வரை நேபாளம், காத்மண்டு நகரில் நடைபெற்றன.

இந்தச் சந்திப்பில் இலங்கை, இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் பூட்டான், திபெத் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து சேபாலி கோத்தாகொட (இலங்கைப் பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு), விலாங்கி வணசுந்தர (ஆராய்ச்சி நிலையம் Cenwor), றோகினி வீரசிங்க (காந்தா சக்தி), அன்பேரியா ஹனிபா முஸ்லிம் மகளிர் ஆராய்ச்சி முன்னணி) ஆகியோருடன் நானும் (சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்) கலந்து கொண்டோம்.

இலங்கைப் பெண்கள் பிரதிநிதிகளாகிய நாம் 10 ஆந் திகதி மாலை காத்மண்டு போய்ச் சேர்ந்தோம். காத்மண்டு, லலித் பூரில் ஹோட்டல் ஹிமாலயாவில் தங்கவைக்கப்பட்டோம். ஆகஸ்ட் 10 ஆந் திகதி இரவே ஒரு சிறிய கூட்டம் நடைபெற்றது. அஞ்சனா சாக்கியா

வும் (இணைப்பாளர், பெய்ஜிங்குப்பின்னரான சந்திப்பு நிர்வாகக் குழு, ஆலோசகர். ஆசிய பசுபிக்கண்காணிப்பு) சுமாலியும் (தலைவர் அரசசார் பற்ற நிறுவனங்களின் அமையம், பாங்கொக் (கௌரவ தலைவர் ஆசிய பசுபிக் கண்காணிப்பு) இக்கூட்டத்தை நிகழ்த்தினர். இலங்கை பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் மாலை தீவு,திபெத், பூட்டான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அங்கிருந்தனர், சுமாலி பெய்ஜிங் செயற்பாட்டுக்கான களம் பற்றி விளக்கினார் பாகிஸ்தான் தோழி ஒருத்தியும், சில நேபாளத் தோழிகளும் தங்கள் பெய்ஜிங் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டாள்.

கருத்தரங்கு 11 ஆம்திகதி காலை முறையாக ஆரம்பமாகியது. காலை 9.00-9.30 வரை அங்கு வந்திருந்த பிரதிநிதிகள் தம்மைப் பதிவு செய்து கொண்டனர். துவக்க விழாவுக்கு பிரதம விருந்தினராக வெளிநாட்டு மந்திரி திரு.ராம் சாண் மகத் கலந்துகொண்டார். மங்கல இசையுடன் (சங்கு, மத்தளம், சொர்ணா போன்ற இசைக்கருவி) விழா ஆரம்பமானது மங்கள விளக்கேற்றலில் எல்லா நாட்டுப் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கு அஞ்சனா தலைமை வகித்தார். ரேஷ்மா ராயின் பேச்சுடன் கூட்டம் ஆரம்பித்தது, சசி சிரேஷ்டா வரவேற்புரை நிகழ்த்தினார்.

டாக்டர். பாம் ராஜபுத் (ஆசிய பசுபிக்கண்காணிப்பு தலைவர்) இச்சந்திப்பின் பிரதான விடயங்களையும், நோக்கங்களையும் விளக் கினார். இச்சந்திப்பு ஒரு மதிப்பீட்டு நிகழ்ச்சி எனவும் பெய்ஜிங் மாநாட்டின் பின்னர் நாம் பெற்ற வெற்றி, தோல்விகளை மதிப்பீடு செய்வதற்கான களம் இது என்றும் கூறினார். பால் சமத்துவம், பெண்கள் முன்னேற்றம் பற்றி அதிகம் சிந்தித்துள்ளோம் என்றும் தென்னாசிய மன்றம் தொடர்ந்து செயற்படுகிறது; ஆசிய சகோதரி களின் குரல் பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், இச்சந்திப்பு உள்ளூர் மற்றும் பிரதேச, தேசிய மட்டங்களில் பெண்கள் உரிமைகளை மனித உரிமைகளாக உணரவைக்க வேண்டும் என்றும் கூறினார். அடிப்படை வாத நிலைமைகளிலும் ஆயுதப்போர் நடைபெறும் நாடுகளிலும் வாழ்கின்ற பெண்கள், குழந்தைகளின் நிலைமைகள் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார். சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களின் வறுமை என்பன அதிக கவனத்துக்குள்ளாக வேண்டும் என்றும் பாங்கொக்கில் நடக்க இருக்கும் மாநாட்டில் தென்னாசிய நாடுகளின் சமாதானத்துக்கும் சமத்துவத்துக்குமாக குரல்கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

திரு.நிறேல் பிஷார் (Unicef) கருத்துத் தெரிவிக்கையில் பால் சமத்துவம், சட்ட சமத்துவம், மனித கௌரவம், என்பவற்றுக்காகவும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராகவும் மௌனத்தை உடைத்துப் போராடவேண்டும் என்றார். சாந்தினி ஜோஷி (Unifem) யுத்தம் காரணமாக பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்வது பற்றியும், இவ்வன்முறைகள் புதிய வடிவங்கள் எடுப்பது பற்றியும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து சுமாலி உரையாற்றினார், அவர் பெண்கள் பிரச்சி னைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டமைப்பு (Net Working) அவசியம் என்றும் இளத்தலைமுறையினரைத் தெரிவு செய்து பயிற்சியளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நேபாள வெளிநாட்டு அமைச்சர் நன்றி தெரிவிக்கையில் பெண்கள் பிரச்சினைகள் பற்றிய கவனம் அதிகரித்துள்ளது என்றும், கல்வி, சுகாதாரம், அரசியல் ரீதியாக வலுப்படுத்தல் என்பன அதிகரி த்தல் வேண்டும் எனவும் கூறினார்.

பிற்பகலில் ஒவ்வொரு நாடுகளினதும் அறிக்கைகள் வாசித்த ளிக்கப்பட்டன. முன்னேற்ற அறிக்கை, தடைகள், எதிர்காலத்திட்ட ங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் போன்றன விவாதிக்கப்பட்டன.

நேபாள அறிக்கையில் பின்வரும் விடயங்கள் முக்கியம் பெற்றன, நேபாளப் பெண்கள் ஆண்களை விடவும் அதிக வேலை செய்கிறார்கள், பெண்கள் பங்கு பற்றாத உற்பத்தி இல்லை, மரபு வழி விவசாயத்திலிருந்து பெருந்தோட்ட விவசாயம் வரை பெண்களின் பங்களிப்பே அதிகம் எனினும் பெண்களின் பங்களிப்பு குறைந்தே மதிப்பிடப்படுகிறது. சமூக அசமத்துவம், பொருளாதாரச் சிக்கல், பெண்கள் தீர்மானம் எடுக்க முடியாமை போன்றன உள்ளன. சொத் துரிமை இல்லை, தங்கி வாழ்வோராக உள்ளனர், இந்நிலைமைகளு க்கு எதிராக அண்மைக்காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன, சில முன்னேற்றங்களைக் காண முடிகிறது.

தகவல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரை பெண்கள் சங்கங்களால் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. கல்வி, விஞ்ஞான, தொழில் நுட்ப நடைமுறைகளில் சில அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. பாரம்பரியமற்ற தொழில்களில் பெண்கள் ஈடுபடத் தொடங்கி யுள்ளனர் எல்லா மட்டங்களிலும் கல்வித்தரத்தைப் பேணுதல் பற்றிச் சிந்திக்கப்படுகிறது (CEDAW, BPT) பற்றிய அறிவை ஏற்படுத்தலும்,

சட்ட நடைமுறையில் பெண்களுக்கெதிரான சட்டங்களை நீக்குதலும் பற்றி விவாதங்கள் நடைபெறுகின்றன. பெண்கடத்தல் போன்ற குற்றங்களுக்குத் தண்டனை அதிகரித்தல் பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல் போன்றன முன்வைக்கப் பட்டுள்ளன.

இலங்கையின் அறிக்கையை சேபாலி சமர்ப்பித்தார். அறிக்கையில் பின்வரும் விடயங்கள் முக்கிய இடம் பெற்றன. இலங்கையின் உள்நாட்டு யுத்த நிலைமையும் இலங்கையின் நிதி வழங்கும் நிறுவனங்களும் இலங்கையின் அரசியல் பொருளாதார சமூகச் சூழலைப் பாதித்துள்ளன. இனமுரண்பாடு பெண்களின் வாழ்க்கையில் கூடிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பெண் தலைமைக் குடும்பங்கள் அதிகரித்துள்ளன, பெண்கள் பாரம்பரியமற்ற புதிய பொருளாதார முயற்சிகளில் (சுதந்திர வர்த்தக வலயம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு) ஈடுபடுதல், காணப்படுகின்றது. பொருளாதார சுரண்டல்களுடன் பாலியல் சுரண்டல்களும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. இலங்கையில் பால் சமத்துவத்துக்கான முயற்சிகள் குறித்துக் கருத்துரைக்கையில், மகளிர் விவகார அமைச்சு, பெண்கள் சாசனம், பெண்களுக்கான தேசிய முன்மொழிதல் திட்டங்கள் போன்றவற்றைப் பற்றிக் கூறி பெண்களுக்கெதிரான வன்முறைகள், மனித உரிமைகளும் ஆயுத முரண்பாடும், சுகாதாரம், கல்வியும் பயிற்சியும், பொருளாதார முயற்சிகளும் வறுமையும், தொடர்பு ஊடகங்களும் தொடர்புகளும் சூழல், நிறுவன ரீதியாகப் பலப் படுத்தலும் உதவியும் போன்ற விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

N.P.A தொடர்பாக இலங்கைப் பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பின் சேவைத் திட்டங்கள் பற்றி விளக்கினார். 1996 இல் NPA சிங்களத்திலும் தமிழிலும் மொழி பெயர்க்கப் பட்டமை B.P.F சிங்கள தமிழிலை மொழிபெயர்க்கப்பட்டமை BPF ஐப் பிரபலப்படுத்தியமை. 1998 இல் பெண்கள் சம்பந்தமாக தேசிய தொடர்பூடக நடவடிக்கையை (National Media Campaign) மேற்கொண்டமை என்பன குறிப்பிடப்பட்டன தேசிய தொடர்பூடக நடவடிக்கைக்காக பெண்களுக்கெதிரான வன்முறை, பெண்களும் பொருளாதாரமும், வலுப்படுத்தலும் தீர்மானமெடுத்தலும் (அரசியலில் பங்கு பற்றல்), பெண்களும் சுகாதாரமும் (விசேடமாக இனப் பெருக்க

உரிமைகள்) ஆகிய 4 விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன. 1999 இல் பகிரங்க போஸ்டர் பிரசாரமும் இடம் பெற்றது மேலும் CEDAW அறிக்கை தொடர்பான இலங்கை அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இலங்கையில் பெண்கள் பெற்றுள்ள வெற்றிகள், தடைகள் சவால்கள் பற்றிக்கூறும்போது இலங்கை அளவில் பெண்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றுள்ளன. இப்போக்குகள் மகளிர் விவகார அமைச்சு, பிரதேச சபைகள், உள்ளூர்ச் சபைகள் போன்றவர்களின் நடவடிக்கையில் செல்வாக்கும் செலுத்தியுள்ளன. தொலைக்காட்சி, மற்றும் வானொலியில் நடைபெறும் பெண்கள் சம்பந்தமான நிகழ்ச்சிகளில் சற்று மாற்றம் தெரிகிறது.

கூட்டமைப்பு உருவாகி இருக்கிறது, சட்டம், சுகாதாரம், பால் நிலைக்கல்வி, பெண்கள் உரிமைகள், இன முரண்பாடு போன்றவை சம்பந்தமாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

மாற்றங்களை ஏற்படுத்துவதைத் தடுப்பதில் பல தடைகள் செயற்படுகின்றன, பெண்களே தம்மை சார்ந்து வாழ்வோராகக் கருதுதுல், கொள்கைத் திட்டமிடல், பெண்களின் பங்களிப்பு இன்மை குடும்பவளங்களைப் பெண்கள் குறைவாகவே பெறுதல், சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளல், பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகுதல், பண்பாடு, சமய நம்பிக்கைகள், ஆணாதிக்கச் செயற்பாடு, பெண்களின் பய உணர்வு, அரசியல் ஆதரவுகுறைவு போன்றன. அவை தொடர்ந்து பூட்டான் பிரதிநிதிகள் பூட்டான் அகதிகளுக்கான அறிக்கையை வாசித்தனர். பூட்டானில் எழுதப்பட்ட யாப்பு இல்லை, பூட்டான் தேசிய சபை நிலப்பிரபுத்துவ அம்சங்களைக் கொண்டது. மந்திரிகள் மன்னரால் நியமிக்கப்படுகின்றனர். அரசு மக்களுக்குக் கடமைப்பட்டிருக்கவில்லை, தென்பூட்டானியர்கள் அடக்கப்படுகின்றனர் எதிரான புரட்சியில் அகதிகள் தொகை அதிகரித்து பூட்டானில் 1/6 பகுதியினர் அகதிகளாயுள்ளனர். இதனை BPFகணக்கில் எடுக்க வேண்டும் என்றனர்.

திபெத்திய பிரதிநிதிகள் தமது அகதிகளுக்கான அறிக்கையை வெளியிட்டனர். 10 வருடமாக அகதிகள் என்னும் தமது பிரச்சினையினை வெளியிடச் சுதந்திர மற்றவர்களாக உள்ளமை பற்றியும் குறிப்பிட்டனர். திபெத்தின் உள்ளே உள்ள பெண்கள் அரச வன்முறைகளால் பாதிக்கப்படுகின்றனர். கட்டாயக்கருக்கலைப்பு நடைபெறுகிறது. திபெத்தியர் தமது மொழியைக் கற்க முடியாது சீன மொழியை

யே கற்கவேண்டும். பாலியல் துஷ்பிரயோகம், விபசாரத்துக்காக வற்புறுத்தல் அதிகரித்திருக்கிறது, இவற்றுக்கெதிரான BPFகுரல் கொடுக்க வேண்டும். எனத் தெரிவித்தனர், இந்தியாவின் அறிக்கை அடுத்து வாசிக்கப்பட்டது. அவர்களின் அறிக்கை நீண்ட மிகப் பெரிய அறிக்கையாக அமைந்தது. அவர்கள் தமது அறிக்கையைத் தயாரித்த போது இந்தியாவில் இன்று கொண்டிருக்கும் சாதி வேறுபாடுகள், வறுமை, ஆண்பெண் அசமத்துவம், அரசியல் மாற்றம் போன்ற வற்றிடையே தான் தமது அறிக்கையைத் தயாரித்ததாகக் கூறினர்.

இன்றைய நிலையில் பெண்கள் பல்வேறு கொடுமைகளுக் கெதிராகவும் போராட்டங்களை நிகழ்த்துகின்றனர், பெண்களுக்கெ திரான வன்முறை, ஊழல், வரதட்சனை போன்றவற்றுக்கெதிராகப் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன, முக்கியமாக தலித் பெண்களின் எழுச்சி குறிப்பிடத்தக்கதாகும், பெண்கள் சம்பந்தமாக சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. அரசியலில் பெண்களுக்கு 30% ஒதுக்கப்பட வேண்டும் எனப் போராடியுள்ளனர், பெண்கள் பிரக டனம் பெண்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றில் இந்திய அரசாங்கத்தினால் சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்திய அரசு பெண்கள் சம்பந்தமாக 6 விடயங்களில் உறுதிய ளித்துள்ளது. எல்லா மட்டங்களிலும் பெண்கள் உரிமைகள் ஆணை யாளரை நியமித்தல், 6% பெண்கள் கல்வியில் அரசு அபிவிருத்தி, சொத்துரிமையில் பெண்களுக்கு பங்கு, குழந்தை மரணத்தைக்குறை த்தல், சமாதான கல்வி மற்றும் சமாதான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவை அவைகள். இலங்கை போன்றே இந்தியாவிலும் பெண்கள் எழுச்சிக்குத் தடைகளாக சமய நம்பிக்கைகள், பண்பாட்டுத் தடைகள், ஆணாதிக்கம் (வீடு+வெளி), அரசு ஆதரவுக்குறைவு, விழிப்புணர்வு பெறும் பெண்களுக்கெதிரான பயமுறுத்தல்கள், அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு எதிரான பயமுறுத்தல்கள், வன்செயல்கள், தொடர்கி ன்றன. கூட்டுக்குடும்ப அமைப்புக் காரணமாக பெண் தன்னை அமிழ்த்த வேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. பாகிஸ்தான் தனது அறிக்கையில் தெரிவித்த விடயங்களாவன பெய்ஜிங்குக்குப் பின்னரான பாகிஸ்தானின் நிலைமை பற்றி பாகிஸ்தானில் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. பாகிஸ்தினின் பெண்கள் இயக்கம் பெரியளவில் செயற்பட்டு வருகிறது. இது பெய்ஜிங்கிற்கான தேசிய அறிக்கையிலும் தேசிய திட்டமிடலிலும் செல்வாக்குச் செலுத்

தியுள்ளது. பாகிஸ்தானின் அகதிப் பெண்கள் பற்றியும் கவனம் செலுத்தியுள்ளது.

உலக மயமாதலும் அதன் தாக்கமும், வன்முறையால் ஏற்படுத்தப்பட்டுள்ள இயக்கமற்ற சூழல், சமூகச்சிதைவு, பெண்கள் உரிமைகளுக்கு முக்கியம் கொடுக்காமை, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கைகள், அடிப்படைவாத சமயக் குழுக்களின் தோற்றம், அரசியல் ஆதரவுக்குறைவும் மேற்பார்வையும் இன்மை. போன்றன பிரச்சினைகளாக உள்ளன பூகோளமயமாதல்- தேசிய கடன்களை அதிகரித்துள்ளது, ஏற்றுமதிக் கொள்கைகளையும் தனியார் மயப்படுத்தலையும் அதிகரித்துள்ளது. இதனால், வறுமையும் வேலையின்மைப் பிரச்சினையும் தோன்றியுள்ளன, பெண்களுக்கும் ஏழைகளுக்கும் பாதுகாப்பு இல்லை, நிதி வழங்குவோரிடம் தங்கியிருக்க வேண்டிய நிலை உள்ளது.பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக அரசு சில செயற்றிட்டங்களினை முன்வைத்துள்ளது. பெண்கள் அபிவிருத்திக்கான திணைக்களங்கள் நிறுவனப்பட்டுள்ளன. என்பன போன்றவை தெரிவிக்கப்பட்டன.

பங்களாதேஷ் தனது அறிக்கையில் 30% பெண் தலைமைக் குடும்பங்கள் உள்ளன என்றும் பெண்களின் கல்வி அறிவு வீதம் 56% என்றும் கூறியது. பெண்களின் சுகாதாரம், போஷாக்கு என்பன தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. பிரசவகால இறப்பு அதிகமாய் உள்ளது. பங்களாதேஷில் மேற்கொள்ளப்பட்ட 4,5 ஆம் ஐந்தாண்டுத் திட்டங்களில் பெண்கள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பெண்கள் வறுமை அதிகரித்துள்ளது, பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் எனக் கருதப்படுகிறது. பெண்களுக்கெதிரானவன்முறை புதிய வடிவம் பெற்றுள்ளது (மந்திர வாதிகளின் ஏமாற்றுவித்தை) மாலைதீவு தனது அறிக்கையில் பெண்களை நாட்டின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதும், போதை வஸ்துத் தடுப்பு, கல்வி முன்னேற்றம் என்பனவற்றையும் ஏற்படுத்துதல் வேண்டும் எனக் கூறியது.

12 ஆம் திகதியில் இந்நாடுகளில் முனைப்புறும் பிரச்சினைகள் பற்றி விவாதம் நடைபெற்றது பூட்டானின், அகதிகள் பிரச்சினை கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. தென்னாசியா, உள்நாட்டு யுத்தங்களையும் இன முரண்பாடுகளையும் பிரதேச முரண்பாடுகளையும் கொண்டுள்ளது.

எல்லாப் பெண்களும் இந்தப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. பெண்களாகிய நாம் அரசாங்கங்களுக்கும் தீவிர வாதிகளுக்கும், ஏனைய குழுக்களுக்கும் அதிக அழுத்தத்தைக் கொடுக்க'வேண்டும், அவ்வாறாயின் தான் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதில் எல்லோரும் ஒன்றுபட்டனர்.

தென்னாசிய நாடுகளின் பெண்கள் பிரச்சினைகளில் முதன் மை பெறும் பிரச்சினைகள் அவ்வந்நாடுகளின் பிரதி நிதிகளால் கலந்துரையாடப்பட்டு முன்வைக்கப்பட்டன. பங்களாதேஷ். பெண்களுக் கெதிரான வன்முறைகள், (வீட்டு மற்றும் வன்முறைகள்) 2. சிறுவர் துஷ்பிரயோகம் 3. பெண்களின் வறுமை நிலை 4. அரசியலில் பங்கு பற்ற வேண்டிய தேவை, மனித உரிமை மீறல் கல்விக் குறைபாடு என்பவற்றையும், நேபாளம் 1. பெண்களையும் குழந்தைகளையும் கடத்தி விற்றல் 2. கொள்கைக்கும் செயற்பாட்டுக்குமிடையிலான இடைவெளி, 3. இந்தியாவுடனான திறந்த போக்குவரத்துக் கொள்கை யால் ஏற்படும் பெண்கள் பிரச்சினைகள், 4. பெண்கள் கல்வி 5. சுகாதாரக்குறைபாடு 6. சொத்துரிமைப் பிரச்சினை என்பவற்றையும் இந்தியா, வறுமை 2. பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அதிக ரிப்பு 3. பெண்களைக் கடத்துதல் மற்றும் பெண்களுக்கெதிரான வன் முறைகள் 4. சாதி முரண்பாடுகள் 5. பெண்குழந்தைக் கொலைகள், போன்றவற்றையும் பாகிஸ்தான், பெண்கள் பிரச்சினை தொடர்பாக திருப்தியற்ற சூழல், 2. தீவிரவாதக் குழுக்களின் பயமுறுத்தல். 3. பெண்களுக்கெதிரான வன்முறைகள் 4. சிறைச்சாலைகளில் துன்புறு த்தல் 5. சிறுவர் துஷ்பிரயோகம், 5. வறுமை, 6. கல்வி, போன்ற வற்றையும் இலங்கை 1. பெண்களுக்கெதிரான வன்முறைகளின் அதி கரிப்பு (வீட்டில், வெளியில், யுத்தப் பிரதேசங்களில்) 2. பெண்களின் வறுமை, பெண்களின் அரசியல் பங்களிப்புக்குறைவு, போன்ற வற்றையும் பெண்கள் பிரச்சினைகளில் அவ்வந்நாடுகளில் முதன்மை யுறும் பிரச்சினைகளாக முன்வைத்தன.

இந்த அடிப்படையில் தென்னாசிய நாடுகளில் பொதுவான பெண்கள் பிரச்சினைகளில் முதன்மையான கவனத்திற்கு எடுக்க வேண்டிய பிரச்சினைகளாக பெண்களுக்கெதிரான வன்முறைகள், பெண்களும் வறுமையும், பெண்களின் அரசியற் பங்களிப்பு என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவை பற்றிய தடைகள், தீர்வுனகான வேண் டிய விடயங்கள், செய்ய வேண்டிய முயற்சிகள் பற்றி விவாதிக்கப்ப

ட்டன. அத்துடன் பெண்களும் ஆயுத முரண்பாடும், அகதிப் பெண்கள், வலது குறைந்த பெண்கள் போன்ற விடயங்கள் விசேட கவனத்தைப் பெறவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டன. இவை சம்பந்தமாக பாங்கொக்கில் நடைபெற இருக்கும் மாநாட்டில் கவனம் செலுத்தப்பட வேண்டும். எனவும், தேசிய கொள்கைத் திட்டமிடல் மட்டத்திலும் இடை மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் அறிவூட்டல் மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் இளைஞர், தொழில் சங்கங்கள், பெண் அரசியல் தொண்டர்கள் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரிடம் பெண்கள் அரசியலில் ஈடுபடுதல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அரசியலில் அதிகம் பெண்கள் பங்குபற்றுவதன் மூலம் பெண்கள் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடவும், விவாதிக்கவும் தீர்மானமெடுக்கவும் வசதியாக இருக்கும். இது பெண்கள் சம்பந்தமாக பல பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் என்ற கருத்து காணப்பட்டது இது, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பெண்களுக்கிடையேயான கூட்டமைப்பின் அவசியம் உணரப்பட்டது. வயது குறைந்தோர், அடக்கப்பட்டோர் பழங்குடியினர், முதியோர் சம்பந்தமாக அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது. இவற்றை இணைத்த பாங்கொக் மாநாட்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இறுதி நாளன்று இறுதி நிகழ்ச்சிகளில் நேபாள பாராளுமன்ற, சட்ட அமைச்சர் திரு.தாரணி தத்தா சட்டௌ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தவர் பெய்ஜிங்குக்குப் பின்னரான கூட்ட அமைப்புக்குழுவின் தலைவர் திருமதி. துலாராணா. இந்நிகழ்ச்சியில் நான்கு நாட் கலந்துரையாடலிலும் தாம் பெற்ற அனுபவங்களையும், பாடங்களையும் பற்றி ஒவ்வொரு நாட்டிலுமிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகள் சபையுடன் பகிர்ந்து கொண்டனர். இறுதியில் கோபால் கிருஷ்ண சிவயுக்கொடி (Executive Director, Intuted International) நன்றி தெரிவித்துப் பேசினார். பிரியாவிடை, மதிய விருந்துடன் மாநாடு முடிவுற்றது.

உண்மையில் இந்த மாநாடு தென்னாசியப் பெண்தள் நிலைமை பற்றியும், தென்னாசியப் பெண்களின் பொதுவான பிரச்சினைகள் பற்றியும், அறிவதற்கும் விழிப்புணர்வு பெறுவதற்கும் இது சம்பந்தமாக வேலைத்திட்டங்களை முன்வைப்பதற்கும் உதவியாக அமைந்திருந்தது. எனலாம்.

# இறுதிப் பயணம்

ஆண்டு ஏழு கடந்து விட்டது
எங்கள் கண் முன்னே
அந்த சிவப்பு நிற
பஸ் வண்டியில்
ஏற்றப்பட்ட 158 பேரின்
இருள் படிந்த
சோக முகங்கள்
போனவரின்
முகத்தில் ஓடியது வாழ்வின்
இறுதிப் பயணம்!!
போய் வருகிறேன் என்ற வார்த்தையைச்
சொல்லக் கூட.........


அவர்களின் வாழ்வு
தாய் மனைவி, பிள்ளைகள், அண்ணன் தம்பி என்று
வளர்ந்து
விரிந்த விருட்சமான வாழ்வு
இன்று யாருமில்லை
உறுதியான எதிர்பார்ப்பு மட்டும் கூடவே
கணவனைக் காண்பேன், அப்பாவைக் காட்டுவேன்
மகனைக் காண்பேன், அண்ணனைக் காட்டுவேன்
கண்கள் விழித்திருக்கின்றன.....
கண்கள் விழித்திருக்கின்றன.......
கண்கள் விழித்திருக்கின்றன......

-ஜெயந்தி-

# புதிய நூல்கள் - 1998

- செ.யோ -

இப்பகுதியில் தொண்ணூற்றி எட்டாம் ஆண்டு வெளி வந்த இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் பற்றிய அறிமுகம் இடம் பெறுகிறது



## சிறுகதை

☞ குமுறுகின்ற எரிமலைகள், மரீனா இல்யாஸ், பீ.ஏ.(சிறப்பு), தமிழ் மன்றம், கல்ஹின்னை மே, 1998

எண்பதுகள் தொடக்கம் சிறுகதை முயற்சியிலீடுபட்டு வரும் மரீனா இல்யாஸின் முதற்தொகுப்பு இது. சீதனம், வறுமை, ஆணாதிக்கம் முதலான விடயங்கள் இத்தொகுப்பிலுள்ள கதைகளில் இடம் பெற்றிருப்பினும் அடிப்படையில் அவை காதல் சார்ந்த கதைகளாகவே

இடம் பெற்றுள்ளன. தினகரன், சிந்தாமணி, இலங்கை வானொலி முதலியன அவற்றின் வெளிப்பாட்டுக் களங்களாக இருப்பதனால் அது தவிர்க்க முடியாததுதான் ஆயினும் பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவிவரும் இன்றைய சூழலில் இனிவரும் சிறுகதைகள் அவற்றைப் பிரதிபலிப்பனவாகவும் அத்துடன் கலையழகுமிக்கனவாகவும் அமைவது காலத்தின் தேவையாகின்றது.

☛ **ஒரு மழைக்கால இரவு, தாமரைச் செல்வி, சுப்ரம் பிரசுராலயமும் தேசிய கலை இலக்கியப் பேரவையும், 1998.**

ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு மேலாக சிறுகதை, நாவல் முயற்சிகளில் ஈடுபட்டுவரும் ஈழத்திலுள்ள குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் சிலருள் முக்கியமான ஒருவரான தாமரைச் செல்வியின் முதற் சிறுகதைத்தொகுப்பு இது. இன்றைய போர்க்காலச் சூழலில், அகதி நிலைமை, இடப்பெயர்வு, பதுங்கு குழி உலகம் எனச் சொல்லொண்ணா அவலங்களுக்கு முகங்கொடுத்து வாழ்கின்ற மக்களது வாழ்வின் உண்மை நிகழ்வுகளும் உணர்வுகளும் - சொந்த அனுபவமும் இழையோட கலையழகுடன் சிறுகதைகள் பலவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில கதைகளின் யதார்த்தம் பயங்கர அதிர்ச்சியளிக்கின்றன.

## கவிதை

☛ **காலங்கள், கவிதைகள் நாட்குறிப்புகள், கிருஷாந்தி நடராஜா, கூடல் பதிப்பதிகம், திருகோணமலை, செப்ரெம்பர், 1998.**

இளம் வயதில் மரணமெய்திய கிருஷாந்தியின் கவிதைகள் உண்மை பற்றிய தேடல், ஆணாதிக்க எதிர்ப்பு, பெண்ணின் எழுச்சி, சமகால நிகழ்வுகள், இளமைப் பருவ உணர்வுகள் என பல விடயங்கள் பற்றிப் பேசுவன ஆயினும், இவற்றுள் பல, இயல்பான எளிமையான அநாயாசமான வெளிபாட்டுடன் 'கவிதை'களாகியுள்ளமை, சிறந்தவொரு கவிஞரை இழந்து விட்டோம் என்ற ஏக்கத்தைத் தருகின்றன. தவிர இன்னொரு பகுதியாக உள்ள நாட்குறிப்புகள், தமிழ்

இலக்கிய உலகிற்கு புதிய முயற்சியாகின்றது. இந்த உள்மன யாத்திரை படைப்பாளியின் உலகளாவிய மனித நேயத்தை வெளிக் காட்டி நிற்கின்றது.

## சஞ்சிகை

☞ நங்கை, இதழ் 14-99, ஆசிரியர்: சரோஜா சிவச்சந்திரன், வெளியீடு: மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்

ஈழத்திலிருந்து சில வருடங்களாகத் தொடர்ந்து வெளிவரும் பெண்கள் சஞ்சிகைகளுள் ஒன்றான நங்கையின் இவ்விதழிலும் வழமைபோல் பெண்கள் தொடர்பான, பலவித பயன்மிக்க கட்டு ரைகள், இளம்பெண் கவிஞரின் ஆக்கங்கள், தகவல் துணுக்குகள் முதலியன இடம் பெற்றுள்ளன. பிரசுரமான கட்டுரைகளுள் இடப் பெயர்வுகளின் அவலங்கள் கவனத்திற்குரியதொன்று. மகளிர் அபி விருத்தி நிலையத்தால் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலி டம் பெற்று பிரசுரமாகியுள்ள சிறுகதை (மெளனி) எதிர்காலத்தில் சிறப்படையக்கூடிய எழுத்தாளரொருவரை (அமலானந்த குமார்) இனங்காட்டியுள்ளது.

☞ **நிவேதினி, பால் நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை, இதழ: 5 மலர்: 1 ஆனி, 1998, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.**

ஈழத்திலிருந்து வெளிவரும் குறிப்பிடத்தக்க பெண்கள் சஞ்சி கைகளுள் ஒன்றான நிவேதினியின் இவ்விதழில் ஆறு கட்டுரைகளும் ஒரு சிறுகதையும் இடம் பெற்றுள்ளன. கட்டுரைகள் பெண்நிலை வாதம் தொடர்பான கோட்பாடுகள் பற்றியனவாகவும் (எ-டு: பெண் நிலைவாத விமர்சன முறைமை, மேலாதிக்க நிலைமை, சில விடய ங்கள் பற்றிய பெண்நிலைவாத நோக்கிலான, விமர்சனங்கள் பற்றியன வாகவும் (எ-டு: சீதையின் கதை, பெண்களின் எழுத்து) அமைந்து ள்ளன. தமிழ் நாட்டு எழுத்தாளரான பிறேமா அருணாசலத்தின் காலம் நிற்கிறது சிறுகதை மறு பிரசுரமாயினும் சிறந்ததொரு தெரிவாகிறது.

# ஆய்வு

☛ **தென்னிலங்கை முஸ்லீம்களின் தமிழ்ச்சிறுகதைகள் ஓர் ஆய்வு, மரீனா இல்யாஸ், தமிழ் மன்றம், கல்ஹின்னை, மே, 1998**

பல்கலைக்கழகங்களில் தமிழ்ப்பாடத்தைச் சிறப்புக் கற்கை நெறியாகப்பயில்கின்ற மாணவர்களுள் பெண்கள் (எ-டு: தேவ கௌரி, மாதவி, கார்த்தியாயினி) தமது தேர்வின் பொருட்டு எழுதும் ஆய்வுக் கட்டுரைகளை அண்மைக்காலங்களில் நூலுருவாகத் தருவது கவனத்திற்குரியதொன்று. இவ்வரிசையில் இந்நூலினூடாக இணைந்து கொள்கின்றார், மரீனா இல்யாஸ். இன்றைய ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் புறக்கணிக்க முடியாத அங்கமாகிவிட்ட தென்னில ங்கைப் பிரதேசத்தின் சிறுகதை முயற்சிகள் பற்றி அறிமுக நிலையில் அறியவிரும்புவோரும் தொடர்ந்து அது பற்றி ஆய்வு செய்ய விரும்பு வோரும் வாசிக்க வேண்டிய நூல் இது.

☛ **பெண் நிலைவாதமும் கோட்பாட்டு முரண்பாடுகளும் ஒரு சமூகவியல் நோக்கு, செல்வி. திருச் சந்திரன் , பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், மு.ப. ஜுன் 1998**

பெண்நிலைவாத ஆய்வுமுயற்சிகளில் ஈடுபட்டு அவ்வப்போது குறிப்பிடத்தக்க நூல்களைத் தருகின்ற ஈழத்து ஆய்வாளருள் முக்கிய மானவரான செல்வி திருச்சந்திரனின் அண்மைக்கால நூல் இது. இந்நூலிலுள்ள மூன்று கட்டுரைகளும் மேற்கத்திய, பெண் நிலைவாத கோட்பாடுகள் சிலவற்றின் வரைவிலக்கணங்கள் பற்றியும், மேற்க த்திய இந்திய நாட்டு நடைமுறை முரண்பாடுகள் பற்றியும் சிந்திக்கத் தூண்டும் கருத்துக்களை முன்வைக்கின்றன. எனவே இந்நூல் பெண் நிலைவாதம் பற்றி பரந்துபட அறிய விரும்புவோர் அவசியம் படிக்க வேண்டியதொன்றாகின்றது.

# 21 ம் நூற்றாண்டில்பெண்கள்

-தில்லை-

மனித குல வரலாற்றை கருத்தியல் ரீதியாகச் சிந்திக்க வைத்த முதலாளித்துவ சமூகம் உருவான காலம் முதல் சமூக அமைப்பில் பெண்கள் பற்றிய பார்வை பிரச்சினைகள் கொண்டதாகவே வளர்ந்து வந்துள்ளது. சர்வதேச ரீதியில் பெண்களின் பிரச்சினைகள் உக்கிரம் பெற்றதனால் இன்று பெண்கள் அமைப்புக்களும் பெண்ணிலை வாதிகளும் பெண்களின் அபிவிருத்தி பற்றியும் அவர்களின் அறிவியல் பலம் பற்றியும் குரல் கொடுத்துக் கொண்டிருப்பதையும் அனைத்துப் பெண்களும் தங்களது இருப்பைப் புதுப்பித்துக் கொள்ளவும் தயார் நிலையில் இருப்பதையும் காண முடிகின்றது.

சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியதால் அவர்கள் ஒன்று சேர்ந்து அணிதிரட்டி தங்களது பிரச்சினைகளை பகிரங்கப்படுத்தும் அளவுக்கு பலம் பெற்றுள்ளனர். பெண்கள் தமது குடும்ப மட்டத்திலிருந்து சமூக மட்டத்தை நோக்கி முன்னேறியதோடு மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் தமது பிரச்சினைகளை அழுத்திச் சொல்லுமளவிற்கு அவர்களின் அழுத்தம் கூடியிருக்கின்றது. எனினும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் இன்னும் குறைவடையவில்லை. இதனை நேரடியாகவோ அனைத்துத் தொடர்பு சாதனங்களினூடாகவோ அறிய முடிகின்றது.

பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க 1983 ம் ஆண்டு அரசு மகளிர் அமைச்சை நிறுவியது இதன் தொனிப் பொருள் மகளிர் அபிவிருத்தி மாத்திரமல்ல பெண்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதுமாகும்.

பெண்களின் உரிமை மறுப்புக்கள் சமூக, சமய, கலாசார, சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு வருவதையும் அவை காலங்காலமாக நியாயப்படுத்தப்பட்டு வருவதையும் காணலாம்.

பெண்களின் உரிமை மறுப்புக்கள் சாதி, வர்க்க, தேசிய ரீதியில் வேறுபட்டு நின்றாலும் பெண்கள் எல்லோரும் பொதுமை நிலையில்

உள்ளவர்கள் என்பதால் அவர்களின் பிரச்சினைகள் ஒரு சாராரின் உரிமை மறுப்புகளாகவும் பெண்களை இரண்டாம் பட்ச நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் அமைகின்றது. இந்த இரண்டாம் பட்ச நிலையானது பெண்ளுக்கு அடிமைத்தனமும் அடக்குமுறையும் கொண்டதாக இருந்ததால் இவை பெண்களை விழிப்படையச் செய்தன. பெண்கள் தாம் காலங்காலமாக அடக்கப்பட்டதையும் ஒடுக்கப்ப ட்டதையும், வன்முறைக்குட்படுத்தப்பட்டதையும் எதிர்த்துக் குரல் கொடுக்கத் தொடங்கியதோடு தமது பிரச்சினைகளை உலகளாவிய ரீதியில் உரக்கச் சொல்லுமளவிற்கு அவர்களின் செயற்பாடுகள் வளர்ச்சி பெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எல்லா விதமான கலாசார நாடுகளிலும் பெண்கள் தமக்கெதிரான ஒடுக்கு முறைக்கு முகங் கொடுப்பவர்களாகவே இருந்து வருகின்றனர். இன்றைய கால கட்டத்தில் நேரத்திற்கு நேரம் பெண்களின் வாழ்வியல் நடைமுறைகள் மாறிக் கொண்டிருப்பதால் இது வரை காலமும் கட்டிக்காக்கப்பட்டு வந்த கலாசார அனுஷ்டானங்களை இறுக்கிப் பிடிக்கும் நிலை மாறி அவற்றைத் தகர்த்து எறியும் நிலையை எமது கண் முன்னே காண முடிகின்றது. ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்ற வாக்குக்கு இணங்கச் சமூக மாறுதல்களுக்கேற்ப பெண்களின் வாழ்வியல் கட்டுமானமானது நெகிழ்ச்சியடைவதைக் காணலாம்.

1910 ம் ஆண்டு சர்வதேச பெண்களின் இரண்டாவது மகாநாட்டில் பெண்களின் பொருளாதார அபிவிருத்தி, சமூக அந்தஸ்து பெண்களுக்கான உரிமை மறுப்பு என்பவற்றுக்கெதிரான கோஷங்கள் முன்வைக்கப்பட்டன. ஆரம்பம் தொடக்கம் பெண்கள் நீண்ட துயரங்களுடன் பிரசசினைகளுக்குரியவர்களாக வந்துள்ள போதிலும் 19 ம் நூற்றாண்டின் பின் அரைப் பகுதியிலேயே பெண்களின் துயர் தோய்ந்த நிலை ஆண்கள் மத்தியில் கருத்தியல் நோக்குடையதாகக் கவனிக்கப்பட்டது.

சர்வதேச அரங்கிலே 19 ம் நூற்றாண்டில் முன்வைக்கப்பட்ட சீர்த்திருத்த சிந்தனைகளும் சமூக மாறுதல்களும் அந்நிய கலாசாரக்

கலப்புக்களும் பெண்களுக்குப் பக்க பலமாகவும் உந்து சக்தியாகவும் அமைந்தன. பெண்கள் அமைப்புக்கள் பெண்ணுரிமைகள் தொடர்பாகத் தோன்றிய விவாதங்களுக்குச் சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்தன. இதன் வெளிப்பாடாகவே குடும்பத்தில் மனித உற்பத்தியின் பங்காளிகளாகவும் கூலியற்ற இயந்திரமாகப் பணிகளைச் செய்வதிலும் அன்பையும் பொறுமையையும் தாராளமாக அள்ளி வழங்கும் பிம்பமாகவும் இருந்து வந்த பெண்கள் தமது ஓய்வுக்காகவும் சமூக மாற்றத்தை விரும்பியும் சமூகத்திலிருந்து தமது இருப்பைப் புதுப்பித்துக் கொள்ளவும் குரல் கொடுக்கின்றனர்.

இவ்வாறு பெண்கள் தமது குரல்களை தமது உரிமைகள் தொடர்பாக உயர்த்திய போதும் சமூகத்தில் பெண்களின் துயர் தோய்ந்த நிலை கண்டு கோஷங்கள் எழுப்பப்பட்ட போதும் அவர்களுக்கெதிரான வன்முறைகள் குறைந்தபாடில்லை.

சர்வதேச அளவில் சகல ஒடுக்குதல்களுக்கும் உட்பட்ட பெண்கள் இன்று அரசியல் நிலைப்பட்ட கோஷம் எழுப்புவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் அனைத்து சமூகங்களிலும் ஓரங்கப்பட்டப்படுவதையும் கீழ் நிலைப்படுத்தப்படுவதையும் இதுவரைகாலமும் அனுமதித்துத் தலை வணங்கி அதற்கெதிராக வாய்பேசா மௌனிகளாக இருந்த பெண்கள் இன்று அதற்கெதிராக வாய்பேசத் தொடங்கியிருப்பதும் ஒடுக்குதல்களிலிருந்து வெளியில் வர எத்தனிப்பதும் பெண்களின் அறிவியல் பலம் என்றே சொல்ல வேண்டும்.

இன்று சர்வதேச மட்டங்களில் பெண்கள் தொடர்பாக குரல் கொடுக்கும் அனைத்துத் தொடர்பு சாதனங்களும் விரும்பியோ விரும்பாமலோ சமூகம் செவிசாய்த்து கேட்கும் அளவுக்கு பெண்களின் அடக்குமுறை, வன்முறை பற்றிய செய்திகளை ஓயாது வெளிப்படுத்திக் கொண்டிருப்பதானது அனைத்துப் பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடு என்பதை மறுக்க முடியாது இருக்கின்றது.

பெண்ணுரிமை தொடர்பாக கோஷங்களை எழுப்புகின்ற பெண்கள் அமைப்புக்களும், பெண்கள் சார்பான தொடர்பூடகங் களும், அரச சார்ந்த, அரசு சாரா மகளிர் அமைச்சுக்களும் பெண்கள் கல்வி, அபிவிருத்தி போன்ற ஆய்வு நிலையங்களும் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கைகளும் ஆர்ப்பாட்டங்களும் ஒன்று கூடல்களும் மற்றும் தேசிய மாநாடுகளும் நடத்துவதோடு விடாமல் தேசிய சர்வதேச ரீதியில் பெண்கள் ஒன்று சேர்ந்து பீஜிங் பிரகடனமும் செய்துள்ளனர். இவை யாவும் இனி வரும் யுகங்களில் பெண்களின் அபிவிருத்தி சமத்துவம், சமாதானத்தை வென்றெடுக்கும் முயற்சி என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

21 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிற்கும் பெண்களாகிய நாம் எல்லாக் காலத்திலும் எல்லாச் சமுதாயத்திலும் எமது அடிப்படை உரிமைகளை இழந்தவர்களாகவும் அடிமைகளாகவும் ஆற்றல்கள் அனைத்தி னையும் அடக்கியவர்களாகவும் இருளுக்குள் இடிந்த எண்ணங்க ளுடனும் உள்ளுக்குள் உடைந்த ஆசைகளுடனும் வாய் பேசத்திரா ணியற்றவர்களாக வாழ்ந்து வந்துள்ளோம். இனிவரும் காலங்களிலும் இவ்வாறு மௌனித்து வாய் பேசக்கூடத் துணியாத வர்களாகவும் சகித்துப் பொறுத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் எம்மைச் சிதைத்து அடிமைகளாக்கிச் சிறைப்படுத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி புதைகுழியிட்டு எமது தேவைகள் எண்ணங்கள் மனக் கொந்தளிப்புக்கள் அனைத்தையும் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பொறுத்திருந்தது இனியும் வேண்டாம். புறப்படுவோம் புது நூற்றா ண்டை நோக்கி. எமது புது வாழ்வுக்காகக் கைகளை ஒன்றிணைத்து ஒத்துழைப்புக் கொடுப்போம். எமது குரல்களையும் கரங்களையும் யாரும் நசுக்காது உலகைக் காக்கும் திறனைப் பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்குவோம். பெண்களாகிய நாம் 21 ம் நூற்றா ண்டில் இந்த உலகை மாற்றியமைப்போம். புதுயுகம் காண்பபோம். புது வாழ்வு பெறுவோம்.

# படைப்பாற்றலும் சமூகப் பொறுப்புணர்வும்

**ஓவியை சுதேஷ்ணா - அறிமுகம்**



ஈழத்தமிழர்களுக்கான நவீன ஓவிய வரலாறு அதன் பலம், பலவீனங்களுடன் நிலைநிறுத்தப்பட்ட ஒன்றாகி விட்டது. மேலும் பொதுமக்கள் மத்தியில் அதன் புரிதல்களோடும் புரிதலின்மைகளோடும் பரிச்சயமானதாகவும் ஆகியிருக்கிறது. அத்துடன் ஓவியம்நவீனத்துவத்தைக் கடந்து நிலைப்படுத்தல் (Installation) நிகழோவியம் (Performance Art) எனவும் பரிணமித்திருக்கின்றது. இந்த வளர்ச்சிப் போக்கில் குறிப்பாக எண்பதுகளிலிருந்து பெண்களது பங்கு முக்கியமானதாக இருந்து வருகிறது.

பாரம்பரியமாகக் கோலம் போடுதல், பூவேலை செய்தல் போன்ற வீட்டுவேலை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த பெண்கள், 20 ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து ஆண்களது ஆதிக்கத்திலிருந்து வந்த ஆக்கத்துறைகளிலும் ஈடுபடத் தொடங்கினர். இந்த வளர்ச்சிப் போக்கு ஈழத்தமிழர்கள் மத்தியிலும் நிகழத் தொடங்கியது.

80 களில் கூர்மையடைந்த இனமுரண்பாடும்; இளைஞர், யுவதிகளது எழுச்சியும்; அமைப்புக்கள், சிறுகுழுக்கள், தனிநபர்கள் சார்ந்த செயற்பாடுகளும் புதிய புதிய துறைகளில் பெண்களது படைப்பாற்றல்களை அதிகளவில் புலப்படுத்தத் தொடங்கியது. மேலும் 80 களில் அறிமுகமாகிய பெண்ணிலைவாதச் சிந்தனைகள் இந்த வளர்ச்சிப் போக்குகளின் மீது கருத்தியல் ரீதியான செல்வாக்கை செலுத்தத் தொடங்கின.

பெண்களது படைப்பாற்றல்களை வெளிப்படுத்துவது, அதுவும் பெண்ணிலைவாத நோக்கில் வெளிப்படுத்துவது என்பது செயல்வாதமாகவே இன்று பரிணமித்திருக்கின்றது. இவ்வளர்ச்சிப்போக்குகள் தனியனே பெண்களது விடுவிப்பு மட்டும் சார்ந்ததல்ல, அது முழு மனித சமூகம் சார்ந்தது. மனிதர்கள் எந்தவகையிலும் எவரிலும்

தங்கியிராது முழுமையான மனிதர்களாக வாழ்வதுடன் தொடர் புடையது. இவை பற்றிய புரிதல்களுக்கான கலந்துரையாடல்கள் ஆக் கபூர்வமாக முன்னெடுக்கப்படுவதும் அவசியமானதாக உணர ப்படுகின்றது.

இந்த வகையில் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்களை இனங் காணுவதும்; வெளிப்பாடுகளை அறிமுகப்படுத்தவதும்; அவை பற்றிய கலந்துரையாடல்களுக்கான தளங்களை ஏற்படுத்துவதும் அவசியமானதாக உணரப்பட்டிருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே இளம் ஓவியையான சுதேஷ்ணாவின் அறிமுகம் கவனிப்பிற்குரி யதாகி இருக்கிறது. ஆரம்பத்தில் ஓவியர் மாற்குவிடமும்; பின்னர் வாசுகியிடமும் தற்பொழுது சந்திரகுப்த தேனுவரவிடமும் ஓவியப் பயிற்சிகளைப் பெற்றுவரும் சுதேஷ்ணா கற்பனையும், படைப்பா ற்றலுமுடைய இளம் ஓவியையாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள் கின்றார். பொதுவாகப் போரின் துயர வாழ்வைச் சித்தரிக்கும் சுதேஷ்ணா தனிமனிதச் சிக்கல்களை வெளிப்படுத்துவதிலும் ஆர்வமு டையவராக இருப்பதை அவதானிக்க முடிகிறது.



''இருபக்கங்கள்'' ஓவியம் தனிமனிதச் சிக்கலை வெளிப்ப டுத்தும் ஒன்றாகக் காணப்படுகிறது: ஆணாதிக்கச் சூழலின் கருத்து ருவாக்கச் சுமைகளால் நசுங்குண்ட ஆளுமைகளின் வெளிப்பாடாக, ஓவியையைப் பிரதிநிதித்துவப் படுத்தவதாக;

இந்தச் சமூகத்தின் ஒவ்வொரு பெண்ணையும் பிரதிநிதித்து வப்படுத்துவதாக மேற்படி ஓவியம் அமைகின்றது. ''இருவேறு குணாம்சங்களை ஒருங்கே கொண்டுள்ள ஒரு பெண் என்பதாக இந்த ஓவியம் அமைகிறது. நம்பிக்கை, துணிவு. எதிர்பார்ப்பு உள்ள ஒரு புறமும்; அவளை எப்போதும் விரைந்து செயற்படவிடாது தடுக்கும் அச்சமுற்ற மறுபுறமுமாக இது அமைகின்றது.'' என்பது சுதேஷ் ணாவின் கருத்து.

மேலும் தற்பொழுது ஆரம்பித்திருக்கின்ற ''அம்மா'' கோட்டோ வியத் தொடர் கருத்தியலுக்கான தேடலிலும்; சாதனத்தைக் கையா ளும் நிபுணத்துவத்திலும் உறுதிபாடடைவதற்கான பாதையாக விரியத் தொடங்கியிருப்பதை அவதானிக்க முடிகிறது. நிலாந்தனுக்கு ''பிள் ளையார் தொடர்'' எப்படியோ, அப்படியே சுதேஷ்ணாவிற்கு ''அம்மா தொடர்'' அமைவதற்கான சாத்தியப்பாடுகளைக்காண முடிகிறது.



சுதேஷ்ணாவின் போரோவியங் கள் என வரும் பொழுது ''செம்மணி'', ''வன்னிச் சிறுவன்'', வன்னி வயோ திபன்'' ஆகிய ஓவியங்கள்; இருளுள் இருந்தும்; இடிபாடுகளுள் இருந்தும்; ஒட்டியுலர்ந்த தேகங்களுடன் எழுந்தி யங்க அவதியுறுபவையாகவும்; கடும் வர்ணச் சேர்க்கைகளாய் அமைந்த வையாகவும் காணப்படுகின்றன. போர்க்கால வாழ்வில் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒரு பக்கத்தை இவை சித்திரிக்கின்றன.

''செம்மணி'' ஓவியம் பற்றி சுதேஷ்ணா கீழ்க்கண்டவாறு விபரிக்கின்றார். ''செம்மணி பற்றிய செய்திகள் அறியவரத் தொடங் கியதும் அது சார்ந்த ஓவியம் படைக்கும் எண்ணம் தோன்றியது. புதைகுழியொன்றின் குறுக்குவெட்டுமுகத் தோற்றமாக இதனை அமைத்தேன். இதில் எலும்புக்கூடுகளும், பழுதடைந்த சடலங்களும், பழுதடையாத உடன் சடலங்களும் குவிந்திருப்பதாகச் சித்திரித்தேன். இதனால் இது ஒரு நாள் நிகழ்வன்று தொடர் நிகழ்வு என்பதனைக்

காட்டலாமென நினைத்தேன். மேலும் இவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பின் கொலை செய்யப்பட்ட நிலையினையும் இதில் காட்ட முயற்சித்தேன்''.


மேலும் காணாமற் போனோரது மனைவியரை நினைந்து வரையப்பட்ட ஓவியத்தில் ஒருபாதி முகம் சுமங்கிலிக் கோலமும் மறு பாதி முகம் விதவைக் கோலமுமாக இருவேறு நிலைகள் சித்திரிக்க ப்பட்டிருக்கின்றன. இந்த இருவேறு நிலைகளை வெளிப்படுத்தக் கொ ண்டுவரப்பட்ட உணர்வு வெளிப்பாட்டு வித்தியாசங்கள், பண்பாட்டு அடையாள வித்தியாசங்கள், வர்ண அமைப்பு வித்தியாசங்கள் என்பன ஒரே தளத்தில் அமைந்து மிகவும் உணர்திறனுடைய வெளிப் பாடாக அமைந்திருக்கின்றது. இவ்வோவியம் பற்றி சுதேஷ்ணா கூறு ம் பொழுது, ''திருமணமான பெண்கள் நெற்றியில் குங்குமமிடல் என்பது மிகவும் இறுக்கமான நியமமாகத் தமிழர் சமூகத்தில் கொள்ள ப்படுகின்றது. அதே சமயம், விதவைகள் பொட்டிடாமை என்பதும் வலிமையான நியமமாக இருக்க, காணாமற் போனோரது மனைவி யரான இப்பெண்கள் இவ்விரு நிலைகளில் எதைச் சார்ந்தவர்கள் என்பதை அறியாது தவிக்கும் நிலையை காட்ட முனைந்துள்ளேன்'' என்கிறார்.

காணாமற் போனோரது மனைவியரது துயரம் ஒருபக்கம் இவ்வாறு இருக்க, இன்னொரு புறத்தில் அவள் பொட்டு வைத்தாலும் வசை, வைக்கா விட்டாலும் வசை என அவர்களைச் சீர்குலைக்கும் பண்பாட்டு அழுத்தம் சமூக யதார்த்தமாகக் காணப்படுகின்றது. காணாமற் போனோரது மனைவியர் பொட்டிட்டுத் திரிந்தால் ''அவன் காணாமற் போட்டான்.இவள் பொட்டும் வச்சுக் கொண்டு திரியிறாள்'' என்றும் ''அவன் இருக்கிறானோ இல்லையோ இவள் பொட்டும் வைக்காமல் புதுமாப்பிள்ளை பிடிக்கத் திரியிறாள்'' என்றும் வசை கேட்டுச் சீரழியும் வாழ்க்கையாகவே பாதிக்கப்பட்ட பெண்களது வாழ்க்கை காணப்படுகின்றது.

பிரசித்தம் பெற்ற, பட்டினியால் ஒட்டியுலர்ந்த வன்னிச் சிறுவன் புகைப்படம் சுதேஷ்ணாவின் ஓவியமாகப் புதுப்பரிமாணம் பெற்று ள்ளது. ''பட்டினியால் ஒட்டியுலர்ந்த சிறுவனின் புகைப்படத்தினைப் பார்த்த பின்னர் அது சார்ந்தோர் ஓவியம் தீட்டும் எண்ணம் தோன் றியது என்கிறார் சுதேஷ்ணா. பசித்து மெலிந்த சிறுவன் வெற்றுப் பாத்திரத்துடன் இருக்க, அவன் வாழும் சூழலைப் 'பிரதிபலிக்க

புகைப்படத்தில் இருக்கும் பின்னணியைப் பயன்படுத்தியிருக்கிறார் பிணங்களையும், இடிபாடுகளையும் பின்னணியில் சித்திரித்திருப்ப தன் மூலமாக மேற்படி ஓவியத்தில் அவரது படைப்பாற்றலிற்கான கற்பனை நன்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவரது பொருட் கூட்டம் ஓவியமும் அர்த்தம் பொதிந்ததாக அமைந்திருப்பதும் கவனிப்பிற்குரியது. பொதுவாகப் பொருட்களை ஒழுங்குபடுத்தி, தூரம், ஒளி, நிழல், அளவு, நிறம் பார்வைக் கோணம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு ஒழுங்குபடுத்தலை பிசகேது மில்லாது மீளப்படைக்கும் ஓவிய முறைக்கு, ஒழுங்குபடுத்தலுக்கான பொருட்தெரிவு மூலம் கருத்தைக் கொடுத்து ஓவியமாக்கியுள்ளார். எரியூட்டப்பட்ட யாழ் நூலகத்தை மீளக் கட்டியமைப்பதாகப் பேசப்ப ட்ட ''நூலும் செங்கல்லும்'' என்ற ஊடகப் பெருங்கதையாடல் மீதான விமரிசனமாக இவ்வோவியம் அமைகின்றது.



பச்சைக்கரையில் வேலைப்பாடுகள் கொண்டமைந்த மஞ்சள்ச் சேலை பின்னணியாக அமைய செங்கல், புத்தகங்கள் (நூல்), மண்டையோடு, உதயன் பத்திரிகை என்பவற்றை பொருட் கூட்டமாக ஒழுங்கு படுத்தியதன் மூலம் மேற்படி அர்த்தமுள்ள வெளிப்பாட்டை நிகழ்த்தியுள்ளார். பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்பது போல நூலும் செங்கல்லும் மீளமைப்பும் பேச்சாக இருக்க, மண்டையோடுகளும்; உடைந்து போகும் செங்கற்களும்; சிதைக்கப்படுதலுள் இருந்து எழும் குரலாகப் பத்திரிகையும் யதார் த்தத்தைப் பிரதிபலிப்பதாக ஒழுங்குபடுத்தப்பட்டு ஓவியமாக்கப்பட்டி ருக்கிறது. மேற்படி ஆக்கச் செயற்பாடு நிலைப்படுத்தல் கலைஞராக ஓவியை பரிணமிப்பதற்கான சாத்தியப் பாடுகளையும் கோடி காட்டி நிற்கின்றது.

இந்த வகையில் படைப்பாற்றலிற்கான கற்பனையும் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் நோக்கும்; ஆக்கத்திறனும் கொண்டு விளங்கும் இளம் ஓவியை சுதேஷ்ணா, படைப்பாற்றலும் சமூகப் பொறுப்புணர்வும் கொண்ட படைப்பாளியாக தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஆளுமையுடயவராகக் காணப்படுகின்றார்.

**சி.ஜெயசங்கர்.**

# சாலையில் தனியாக ஒரு பெண்

-ப்ளாகா டிமிட்ரோவா * -

**(Blaga Dimitrova)**

இன்னும் ஆண்களுடையதாகவே இருக்கும்
இந்த உலகத்தில்
எங்கும் ஆபத்தும் தொல்லையும் தான்
இங்கு ஒவ்வொரு வளைவிலும்
அபத்தமான மோதல்களின் திடீர்த் தாக்குதல்கள்
காத்திருக்கும்.
தெருக்களின் பகைமைக் கண்கள்
அவளை நிலைகுத்தி நிற்கச் செய்யும்
சாலையில் தனியாக இந்தப் பெண்
அவளது ஒரே பாதுகாப்பு
அவளது பாதுகாப்பற்ற நிலைதான்.

எந்தவொரு மனிதனையும் ஒரு ஊன்றுகோலாகவோ
அல்லது
பாதையோரத் தங்குமிடமாகவோ
அவள் பயன்படுத்திக் கொண்டதில்லை
எந்த ஒரு மனிதனையும் பாலமாகப் பாவித்து
அவன்மீது நடந்து சென்றதில்லை
அவள் தனியாகவே சென்றாள்
அவனை அவளுக்குச் சமதையாகச் சந்திக்க
அவனை உண்மையாக நேசிக்க.

அவள் வெகுதூரம் செல்வாளோ
அல்லது மண்ணில் தள்ளாடிச் சரிவாளோ
அல்லது தனக்குத் தெரியாத தொடுவானங்களால்
தடுமாறிப் போவாளோ
அவளுக்குத் தெரியாது. அவள் பிடிவாதக்காரி
வழியில் அவளை யாரேனும் கண்டித்தாலும் கூட
அவள் புறப்பட்டுச் சென்றதே
ஒரு பெரும் சாதனைதான்
சாலையில் தனியாக ஒரு பெண்
தொடர்ந்து அவள் செல்கிறாள்
நிற்காமல்.

தனியாக இருக்கும் ஒரு பெண்ணைத்
தனிமை வாட்டுவதுபோல்
ஒரு ஆணை அது வாட்டுவதில்லை.
அவளுக்கு எதிரில் இருட்டு
ஒரு பூட்டிய கதவைக் கீழே இறக்குகிறது
சாலையில் தனியாக ஒரு பெண்
இரவில் அவள் வெளியே போகக் கூடாது.
விடியற்காலைக் கதிரவன்,
கதவைத் திறந்துவிடும் பணியாளன்போல்
அவளது தொடுவானங்களைத் திறந்து விடுவான்.

இன்னும் அவள் சென்று கொண்டிருக்கிறாள்
இருட்டிலும் கூட
பீதியால் அங்குமிங்கும் பார்க்காமல்
அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்
வெகுகாலமாய் அவளுக்கு அச்சுறுத்தலாயிருந்து வரும்
கருப்பு மனிதன் மீது அவளுக்குள்ள நம்பிக்கையை
அளப்பது போல்.
அவள் எடுத்து வைக்கும் காலடிகள்
கற்கள் பாவிய நடைபாதையில் எதிரொலித்து
ஒரு கல்லின் மீது மோதுகின்றன.
சாலையில் தனியாக ஒரு பெண்:
துக்கம் நிறைந்த ஒரு பூமியின் மீது
அமைதியான, துணிச்சலான காலடிகள்
அந்தப் பூமியும் நட்சத்திரங்களின் கீழே
சாலையில் தனியாகச் செல்லும் ஒரு பெண்தான்.

✸ ப்ளாகா டிமிட்ரோவா இன்றைய புல்கேரிய இலக்கிய உலகில் முதன்மையான இடம் பெற்றுள்ள எழுத்தாளர். 1991 டிசம்பர் முதல் அந்நாட்டின் துணைக் குடியரசுத்தலைவராகவும் இருந்து வருகிறார். அரசியல் மனிதர்களைப் பிரிக்கிறது, பண்பாடு அவர்களை ஒன்று சேர்க்கிறது என்பது அவரது கருத்து. பெண்களின் சுதந்திரம் பற்றி இடைவிடாது வற்புறுத்துவன அவரது கவிதைகள். இக்கவிதையின் ஆங்கில மொழியாக்கம் Index on Censorship, Vol 21 No 9 - இல் வெளிவந்துள்ளது.

## திருகோணமலைக்

## கருத்தரங்கு தொடர்பாக........

, செய்யப்படும் சடங்குகள், அணிகின்ற ஆடைகள், உண்ணும் உணவு, பேசும் மொழி எனப்பல விடயங்களை நாங்கள் பண்பாட்டினுடைய அம்சங்களாகவும் வெளிப்பாட்டு வடிவங்களாகவும் நோக்குகின்றோம். சடங்குகள் பற்றி மானிடவியலாளர்களும் சமூகவியலாளர்களும் நிறையவே பேசி இருக்கின்றார்கள். ஆய்வுகளையும் செய்திருக்கின்றார்கள். பல நிலைப்பாடுகள் இவ்வாய்வுகளின் பின்னின்று அவற்றை வழி நடத்தி இருக்கின்றன. அதாவது இச்சடங்குகள் பற்றிப் பேசுபவர்களும் ஆய்வு செய்பவர்களும் சடங்குகள் தொடர்பாகக் கொண்டுள்ள கண்ணோட்டம் ஆய்வாளரிற்கு ஆய்வாளர் காலத்திற்கு காலம் வேறுபட்டு அமைகின்றது. என்றாலும் மேற்கு நாடுகளில் சடங்குகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலப் பகுதியில் அவற்றிற்கான சமூகத்தேவை ஒன்று ஆய்வாளர்களால் உணரப்பட்டது. அதாவது சமூகவியல் மானிடவியல் போன்ற சமூக விஞ்ஞானங்கள் தோற்றம் பெற்ற காலப்பகுதி மேற்கு நாடுகளில் சமூக குழப்ப நிலையினை வெளிப்படுத்திய காலப்பகுதியாகும். தவிர 1920 களில் 1 ம் உலகப் போரின் பின்னால் சிதைவுற்ற சமூகங்களைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவாவும் வெளிப்பட்டது. இதனால் சமூக சமநிலை, ஒழுங்கு தொடர்பான சிந்தனைகள் சார்ந்ததாக சமூக விஞ்ஞானிகளின் கருத்துக்கள் வெளிப்பட்டன.

சமூக சமநிலையையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு சடங்குகள் ஓர் நிலையான பங்களிப்பை ஆற்றுகின்றன என்ற கருத்து பொதுவாக அக்காலத்தில் முன் வைக்கப்பட்டன. அதனால் இச்சடங்குகள் சமூக நிறுவனங்களினூடாகத் தொழிற்படுகின்றன என்ற கருத்தையும் அவர்கள் முன்வைத்தனர். இதே காலப்பகுதி சமூக நிறுவனங்கள் பற்றிய கற்கைகளிற்கும் வழிவகுத்தது எனலாம். சமயம், குடும்பம், அரசு, பொருளாதாரம் போன்றவை அவ்வகையில்

சமூக நிறுவனங்களாக சமூகத்தின் இயக்கத்திற்கு அவசியமானவை யாகக் கொள்ளப்பட்டன.

இத்தகைய செயற்பாட்டு ரீதியான பங்களிப்பு சடங்குகளிற்கு இருப்பதால் அவை பேணப்பட வேண்டும் என்ற கருத்தும் உட்கிடை யாக வெளிப்பட்டது. குறிப்பாக மானிடவியலில் இக்கருத்து வெளி ப்பட்டதால் மானிடவியலாளர்கள் கீழைத்தேய நாடுகளைப் பற்றிக் கற்ற போதும் இக்கருத்து வெளிப்பட்டது. சமூக சமநிலை, அமைதி, ஒழுங்கு ஆகியவற்றிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து பிரபல மாக்கப்பட்ட இத்தகையதொரு எண்ணக்கரு கீழைத்தேய நாடுகளின் இன்றைய சமூக சூழ்நிலைக்குப் பொருத்தமற்றவையாக உள்ளது.

கீழைத்தேய நாடுகளில் இத்தகைய கருத்தினடிப்படையில் சடங்குகளிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வுகள் செய்யப்பட்ட போது இத்தகைய சடங்குகளுடன் தொடர்புடைய சமூக அசமத்துவ நிலைமை பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. மாறாக சமூக அசமத்துவ நிலைமையைப் பேணுவதற்கே இத்தகைய கருத்துகள் உதவின.

உதாரணமாக சாதிமுறைமையை இவ்வாறான செயற்பாடு டைய முறைமையாகவே ஆரம்பகால மானிடவியலாளர் கருதினர். அது சமூக ஒழுங்கிற்கும் அமைதிக்கும் சமநிலைக்கும் செயற்பாடு டைய பங்களிப்பை ஆற்றுவதாகக் கருதினர். இத்தகைய கருத்தியற் பாற்பாட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலேயே சடங்குகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன.

இன்றைய சூழ்நிலையில் நாங்கள் சடங்குகளை எவ்வாறு நோக்கலாம் என்ற கேள்வி வரும்போது எமக்கு இத்தகைய செயற் பாட்டு ரீதியான விளக்கம் பொருத்தமற்றதாகின்றது. ஆரம்பகாலத் தில் அமைதி சமநிலை ஒழுங்கு தொடர்பாக இருந்த கருத்துக்கள் சமூக அசமத்துவநிலையை பிரச்சினைப்படுத்தவில்லை என்ற சிக்கலுடன் இவ்விடயத்தை அணுகலாம். சமூக அங்கத்தவர்கள் எல்லோரும் கௌரவமாக வாழ வழிவகுக்காத சமநிலை பற்றி நாம் இன்றைக்கு

பேச முடியாது. சமூக அங்கத்தவர்கள் எல்லோருக்கும் கௌரவமான அந்தஸ்தை எமது பாரம்பரிய சடங்குகள் வழங்கவில்லை. மாறாக பல அங்கத்தவர்களிற்கு கீழ்மையை உறுதிப்படுத்தும் சடங்குகளாகவே அவை தொழிற்படுகின்றன. இவ்வாறு கீழ்மைப்படுத்தப்பட்டவர்களிற்கு இச்சடங்குகள் எவ்வாறு தென்பட்டன? அவை மறைநிலையான பங்களிப்பையே செய்கின்றன. உதாரணமாக தமிழ்ப்பண்பாட்டில் பெண்களின் அந்தஸ்து இவ்வாறான சடங்குகளினூடாக மீளவும் கீழ்நிலையில் உறுதிப்படுத்தப்பட்டு வந்திருப்பதை காணலாம். சடங்குகள் நேர்நிலையான பங்களிப்பை ஆற்றுகின்றன என நினைப்பவர்கள் அவற்றைத் தூக்கிப் பிடிக்கலாம் கொண்டாடலாம் போற்றலாம் பேணிப்பாதுகாக்கலாம். ஆனால் அவற்றினூடாகக் கீழ்மைப்படுத்தப்படுபவர்களிற்கு அது அகற்றப்பட வேண்டிய ஒரு அம்சமாகவே காணப்படுகின்றது. அத்துடன் எத்தேவைக்காக சடங்குகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோ அத்தகைய தொரு தேவை இன்றைக்கு இல்லை. சமூக அசமத்துவ நிலையைப் பேணுவதனூடாக சமூக அமைதி பேணப்பட முடியாது என்ற கருத்தைப் பல இயக்கங்களின் எழுச்சி எடுத்துக் காட்டுகின்றது. அவ்வகையில் சடங்குகளினூடாக அல்லது மாற்றுச் சடங்குகளினூடாக பெண்களின் கௌரவம் உயர்த்தப்படும். அல்லது அவர்களின் அடிபட்ட உள்ளத்திற்கு சிகிச்சையளிக்கலாம் எனும் கருத்து மிகவும் சிக்கலானதாகும். சடங்குகள் மீளவும் எமக்கு இன்னுமொரு வடிவத்தில் வேண்டும் எனச் சொல்லிக் கொண்டு மீண்டும் சடங்குகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் ஆயின் மீண்டும் படிமுறை அமைப்பும் ஆதிக்கமும் உள்ள சமூகத்தை எதிர்பார்க்கின்றோம் என அர்த்தமாகின்றது. பாரம்பரியத்தின் ஏதாவது ஒரு கூறு மானிட ஆற்றலிற்கு மதிப்புக் கொடுக்குமாயின், யாரையும் கீழ்மைப்படுத்தாது எல்லோரிற்கும் உயர்ந்த அந்தஸ்து கொடுக்குமாயின் அக்கூறை நாங்கள் பேணலாம் அல்லது அது அழிந்து போகும் போது மாற்றைத் தேடலாம். ஆனால் மானிட நேயத்தை முற்று முழுதாக கீழ்மைப்படுத்தும் பாரம்பரிய அம்சங்களைக் கட்டாயமாக விமர்சிக்க வேண்டிய ஒரு தேவை உள்ளது.

இந்த விமர்சிக்கும் பொறுப்பு பாதிக்கப்படுபவர்களினாலேயே கூடுதலாக உணரப்படுகின்றது. அதற்கு அங்கு தேவை இருக்கின்றது.

தங்களுடைய கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ள போராடவும் வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர். இத்தகைய போராட்டத்தின் ஒரு வடிவம் பெண்நிலைவாதமாக வெளிப்படுகின்றது.

எமது பாரம்பரிய பண்பாடு எது எனச் சொல்லப்பட்டு வந்ததோ அதன் பல கூறுகள் இத்தகையதாக பெண்களுடைய கௌரவத்திற்கு கேடு விளைவிப்பனவாக அமைந்துள்ளன. அவை பற்றிய கற்கைகளில் பெண்நிலைவாதிகள் ஈடுபட்டுள்ளனர். இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் பெண் நிலைவாதிகள் பண்பாடு தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். அது போலவே தலித் இயக்கம் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. தமிழ்ப்பண்பாட்டின் ஆதிக்கக்கூறுகளைப் பற்றி அவர்கள் நிறையவே பேசி இருக்கின்றனர். பண்பாடு என்பது எப்போதோ வரைவிலக்கணப்படுத்தப்பட்டு எம்மிடம் பின்பற்றுமாறு கொடுக்கப்பட்ட ஒரு பண்டமல்ல. மாறாக எமது வாழ்தல் அனுபவத்தினூடாக நாளும் பொழுதும் மீளவும் செயற்படுத்தப்படும் ஒரு விடயமே பண்பாடு என்பதை இவ்வாய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் பண்பாடு என்பது பலரது பண்பாடுகளைச் சுட்டுவதாகும். ஒரு பண்பாடு அல்லது ஒரு குழுவின் பண்பாடு என்ற ஒன்று பற்றி நாம் பேச முடியாது என்பதையும் இவ்வாய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

பண்பாட்டின் கூடுதலான அம்சங்கள் எவ்வாறு உயர்சாதியினராலும் ஆண்தலைமைத்துவ கருத்தியலினாலும் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வாய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

பெண்நிலைவாதம் என்பது அல்லது தலித் இயக்கத்தினுடைய போராட்டம் என்பது வரலாற்று ரீதியான கீழ்மைப்படுத்தலின் விளைவாக உருவானது. ஆகவே இக்கீழ்மையிலிருந்து மீளவும் கௌரவத்தை நிலைநாட்டவும் தொடர்ச்சியாகப் போராட வேண்டியுள்ளது. இத்தொடர்ச்சியான போராட்டங்கள் வழிப்பட்டவர்களாக அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் இவைபற்றிச் சிந்திக்காதவர்களும், பெண்களை கீழ்மைப்படுத்தப்பட வேண்டியவர்கள் என நினைப்பவர்களிற்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகையதொரு பிரச்சினையை அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற கருத்தரங்கில் காணக்கூடியதாக இருந்தது.

அன்றாட வாழ்வில், வாழ்தல் தொடர்பான பிரச்சினைகளில் கௌரவத்தை நிலைநாட்டப் பிரயத்தனப்படலில் என பல்வேறு அனுபவங்களினூடாக பெண்நிலைவாதிகள் பண்பாடு பற்றிச் சிந்திக்கின்றார்கள். அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளினூடாக இருக்கின்ற கருத்தியலை அவர்கள் கேள்வி கேட்க வேண்டியவர்களாகவும் மாற்றுக் கருத்தியலை முன்வைக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். ஆனால் இத்தகைய போராட்டத்தின் காத்திரத்தன்மையை உணராமல் பண்பாட்டை யதார்த்தத்திலிருந்து விலகி வானத்திலிருக்கும் மினுக்கமுள்ள பலூனாக நினைப்பவர்கள் கேட்கின்ற கேள்விகள் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

பாலியல் வன்முறைக்கும் பண்பாட்டிற்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி அல்லது ஒரு சிறுமி அல்லது நாலு சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உட்பட்டதற்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் என்ன சம்பந்தம். இது போன்ற பல கேள்விகள் (இவை கருத்தரங்கு முடிந்த பின்னால் கேட்கப்பட்ட கேள்விகள்) உண்மையில் அபத்தமானவையாகவே தோன்றுகின்றன. ஒரு சிறுமி அல்லது நாலு சிறுமிகள் ஒரு பெண் அல்லது ஐந்து பெண்கள் 20 வீதமான பெண்கள் இது போன்ற கணக்குப் பார்த்தலில் மனித விழுமியங்களை மதிக்க நினைப்பது எத்தனை அபத்தம். ஒரு சம்பவம், ஒரு நிகழ்ச்சி இது போதும் எமது சமூகத்தின் கருத்தியலைக் கணக்கிட்டுக் கொள்ள.

ஆண்மை என்பது வன்முறையாகவும் பெண்மை என்பது வன்முறையைத் தாங்கும் ஒன்றாகவும் எமது பண்பாடு பல கதைகளைச் சொல்லி வந்திருக்கின்றது. எமது இலக்கியங்களிலும் பாடப் புத்தகங்களிலும் இவற்றைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நமது பண்பாட்டின் பல கூறுகள் இன்றைய பிரச்சினைகளிற்கு தோற்றுவாயாக அமைந்துள்ளன. இவ்வாறானதொரு தொடர்பை ஏன் இந்தக் கூட்டத்தில் ஏற்படுத்த முடியாது போனது என்பது விளங்க முடியாத புதிராக உள்ளது.

எமது பிரச்சினைகளூடாக சடங்குகள் பற்றிச் சிந்திப்போமானால் பல சடங்குகள் பற்றி நாம் இங்கு குறிப்பிடலாம். ஒரு சடங்கு எவ்வாறு செய்யப்படுகின்றதோ அதே போல குடும்ப வன்முறை

பாலியல் வன்முறை ஆகியவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளும் நடைபெறுவது அனேக சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக உள்ளது. வீடுகளில் கணவன் குடித்து விட்டு மனைவியை அடிப்பது, மனைவி பொலிஸில் முறைப்பாடு செய்வது, பொலிஸ் சமாதானப்படுத்துவது வேறு வழியின்றி மனைவி வீட்டிற்கு வந்து சேர்ந்து வாழ்வது, சில நாட்களின் பின்னால் மீண்டும் இதே செயற்பாடுகள் இப்படியே தொடருகின்ற, திரும்பவும் திரும்பவும் சடங்கு போல நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் பல. பெண்களும் தொடர்ச்சியாக குடும்பத்தவராலும் ஆயுததாரிகளாலும் பாலியல் வன்முறைக்குட்படுதல், அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பொலிஸ், வழக்கறிஞர், கோடு என செயற்பாட்டாளர்கள் ஓடித்திரிதல், முடிவில் தீர்வுகள் பெரிய அளவில் அடையப்படாமல் சோர்ந்து போதல். இவையெல்லாம் சடங்குகள் போலச் செய்யப்படுகின்றன. இங்கு எது இல்லாமல் இருக்கின்றது எனில் அணியாதல், யாவரும் பிரச்சினையைப் புரிந்து கொள்ளல், ஒன்றாகத் தீர்வு காண முயல்தல் என்பனவே. அப்படியானதொரு தீர்வு காணும் சந்தர்ப்பத்தில் இந்த நிகழ்வுகளின் சடங்குத் தன்மை இல்லாது போக வாய்ப்புண்டு. இப்படியானதொரு கண்ணோட்டம் சடங்குகள் தொடர்பாக எமக்கு உண்டு.

பெண்கள் பிரச்சினைகளிற்கும் பண்பாட்டிற்குமான தொடர்பு பல வடிவங்களில் வெளிப்படுவதால், பெண்களுடைய பிரச்சினைகளை பெண்நிலைக்கருத்தியலில் முதலில் விளங்கிக் கொள்ள எத்தனியுங்கள். அவர்களின் எழுத்துக்களை தொடர்ச்சியாகப் படியுங்கள். அவர்களின் செயற்பாடுகளில் பங்குகொள்ளுங்கள். பிரச்சினைகளிற்கு தீர்வு காண விளையுங்கள். இந்த முரண்பட்ட நிலை கூட்டங்களில் இனிமேல் வெளிப்படாதிருக்கட்டும். மினுக்கமுள்ள பலூனை பூமிக்குக் கொண்டு வாருங்கள் அதிலுள்ள கறைகள் உங்களிற்குப் புரியும். எல்லோரும் சேர்ந்து இக்கறைகளை அகற்ற முயல்வோம்.

**-க.கமலினி-**

# யுத்தம் வேண்டாம்

சோதனைச் சாவடியில்
காத்திருந்த நேரத்தில்
எனக்கு முன்னால்
வண்டி ஒன்று
ஒருவர் வந்தார் எட்டிப் பார்த்தார்
இன்னொருவர் வந்தார் எட்டிப் பார்த்தார்
எல்லோரும் வந்தார்கள் போனார்கள்
நானும் சென்றேன்
எட்டிப் பார்த்தேன்
''ச வம்''

அழுக்குச் சேலை இரத்தம் தோய்ந்தபடி
ஒரு கணம் நிஷப்தம், இதயம் இருண்டது
பார்த்தவர்கள் சவத்தை கடந்தபடி போனார்கள்
இதயம் இருண்டது
யுத்தம் வேண்டாம்
அவலம் வேண்டாம்
மனித குலத்தை சவமாக்கி
இழுக்கும்
யுத்தம் வேண்டாம்

-ஜெயந்தி-

# இலங்கைப் பாடசாலை பாடநூல்களில் பால்வேறுபாடு

- சந்திரசேகரம் -

பெண்ணியம் குறித்த சொல்லாடல்கள் இன்று பல தளங்களிலும் முனைப்புற்றுக்கொண்டு வரும் ஒரு சூழலில் நாம் இருக்கின்றோம். இருந்தும் காலங்காலமாகப் பால்நிலை குறித்த அதிகாரக் கருத்தியல்களை நிலை நிறுத்திக் கொண்டுவரும் அரசு, குடும்பம், சமயம், கல்வி போன்ற நிறுவன அமைப்புகளின் கொள்கைப்பாட்டிலும் செயன் முறையிலும் எவ்வித காத்திரமான அடித்தள அசைவும் ஏற்பட்டதாக இல்லை என்பது இச்சிந்தனைப்பாட்டின் வெகுஜனப்படுத்தலுக்கான பெரும் சவாலாகவே உள்ளது. உண்மையில் இத்தகு மரபுக் கருத்தியல் கட்டமைப்புக்களிலிருந்து விடுபடுவதானது அதற்கான அடிக்கட்டுமானத்தைப் பலமாக நிறுவும் இந்நிறுவனங்களின் பிடிவாதமான கொள்கைப்பிடியில் மாற்றங்களைக் கொணர்வதன் மூலமே சாத்தியப்பாடாகலாம்.

பெண்ணுரிமை பற்றிப் பேசிவந்த பலரும் பெண்ணின் கல்வி உரிமை, கல்வி முன்னேற்றம் பற்றித் தொடர்ந்து பேசி வந்துள்ளனர். இக்கல்வி விடுதலைக்கான வாய்ப்புக்களை அதிகரித்தது என்பது உண்மைதான். ஆனால் இம் முதலாளியக்கல்வி பெண்ணுக்குத் தற்காலிக வசதிகளையே தந்துள்ளது என்பதையும் அக்கல்வியே ஆணதிகாரத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் நிலைநிறுத்தும் ஒரு கருவியாகச் செயற்பட்டு வருகின்றது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு குழந்தையைப் 'பெண்ணாக' அல்லது 'ஆணாக' வளர்த்தெடுத்தல் என்பதில் பாடசாலை முக்கிய கரிசனை காட்டி வந்துள்ளது. வருகிறது. பாடசாலை எனும் சமூக நிறுவனம் பிள்ளையின் ஆரம்பப் பாடசாலைப் பருவத்திலிருந்தே பால்வேறுபாடுகளை வன்மையாக வற்புறுத்தவும் பால்வேறுபாடுகளுக்கேற்ப கல்வியைப் போதிக்கவும் தொடங்கிவிடுகின்றது. ஒரு சமூகத்திற்குத் தேவையான நற்பிரஜைகளையும் புத்தி ஜீவிகளையும் உருவாக்கம் செய்தல் என்ற போர்வையில் இந்நிறுவனம் சமூக ஜனநாயகத்துக்குப் புறம்பானதும் சமூக விரோதத்தனமானதுமான கருத்தியல்களை மாணவர்களிடம் கைய

ளிக்கும் கடமைக்கூறைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இவ்விடத்தில் இலங்கையின் கல்விக் கொள்கை குறித்துக் கவனம் செலுத்துதல் பொருத்தமானது. இலங்கையின் தேசிய கல்விக் கொள்கையில் சமத்துவம், சமசந்தர்ப்பம் என்பன முக்கிய அம்சங்களாக வரையப்பட்டுள்ளன.

*இலங்கைக் கல்விக் கொள்கையின் இலக்குகளில்*

1. பொருத்தமான சமூக நீதித் தன்மையைப் பெறுதல், பேணுதல்.
2. விழுமியக் கல்வியினூடாக எதிர்காலத்தில் சாந்தியும் சமாதானமும், சமத்துவமும் மிக்க சமுதாயமொன்றை உருவாக்க முயலுதல்.

ஆகியனவும் முக்கியமானவையாக இனங்காணப்பட்டுள்ளன. தேசியக் கல்வி ஆணைக்குழுவின் 1992 ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பாடசாலைக் கல்வியூடாக எதிர்பார்க்கப்படும் தேசியக் குறிக்கோள்களுள் ''வியாபகப் பாங்குடைய நீதியை நிலை நிறுத்தல்'' என்பதும் ஒன்றாகும்.

மேற்குறித்த அம்சங்களை அவதானிக்குமிடத்து சமத்துவம், சமநீதி என்பன அவற்றின் சாராம்சமாக உள்ளமை வெளிப்படையாகத் தெரிகிறது. இருந்தும் இலங்கையின் கல்விக் கொள்கையின் முக்கிய கூறுகளாகிய சமத்துவம், சமநீதி என்பன குறுகல் நோக்குக் கொண்டது என்பதும் ஒரு கொள்கை நிலைப்பட்ட வாக்கியம் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள ஜனநாயகம்,சம நீதி, சமத்துவம் என்ற சொற்களின் பரந்த அர்த்தப்பாட்டில் பால்நிலை என்பது புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. தெளிவாகக் கூறின் எமது கல்விக் கொள்கையில் பால் சமநிலை பற்றி எந்தவொரு அம்சமும் வரையப்படவில்லை. பாடநூல்களை அவதானிக்கும் போது பெண்களுக்கு எவ்வித இடமும் வழங்கப்பட்டதாக இல்லை. இந்நிலை பொதுவாக மூன்றாம் உலக நாடுகளுக்கும் பொருந்துமொன்றாகும்.

பால் சமத்துவம் கல்விக் கொள்கையில் புறக்கணிப்புக்குட்பட்ட அதேவேளை பால் அசமத்துவம் என்பது எமது கலாசாரம், மரபு, பண்பாடுகளைப் பாதுகாத்தல், வளர்த்தல் என்ற அதன் வரைபுகளூடாக மறைமுக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமை எமது கல்விக்

கொள்கையின் போலிஜனநாயகத்தையே தோலுரித்துக் காட்டு கின்றது. இந்த வகையில் பாடநூல்களில் பால்வாதமானது வெளிப் படுமாற்றை தமிழ், சைவநெறி, விவசாயம், மனையியல் ஆகிய பாடங்களை ஆதாரமாகக் கொண்டு நிறுவும் முயற்சியாகவே இக் கட்டுரை அமைகின்றது.

கல்விக் கொள்கைக்கு அப்பால் பாட ஏற்பாட்டாளர்களது பால் நிலை குறித்த நோக்கும் பாட நூல்களின் பால் அசமத்துவத் தன்மைக்கு ஒரு முக்கிய காரணம். இப்பாட ஏற்பாட்டாளர்கள் எமது சமூகத்தின் பால்நிலை பற்றிய மரபுக் கருத்தியல்களை அவ்வாறே உட்கொண்ட வர்களாக உள்ளனர். இவர்களது ஆணாதிக்க மனோபாவம் பாடநூல் களின் பல்வேறு அம்சங்களைப் பொறுத்தும் மிக உன்னிப்பான முறையில் செயற்பட்டுள்ளது என்றே கூறலாம். தமிழ், சைவநெறி போன்ற பாடங்களை நோக்குமிடத்து இவற்றிலே உருவாக்கம் செய்யப்பட்டுள்ள பாத்திரக் கட்டமைப்பின் பால் சார்பு நிலை முக்கியமானதாகும்.இக்கட்டமைப்பில் ஆண் பாத்திரங்களே கூடுத லாக இடம் பெறுவதும் அதிக கௌரவமும் முக்கியத்துவமும் கொடுக் கப்பட்டுள்ளமையும் ஒரு இயல்பான பொதுப் பண்பாகவே அமைந் துள்ளது. குறிப்பாக ஆண்பாத்திரங்கள் பிரதான முதன்மைப் பாத்திரங் களாகவும் பெண் பாத்திரங்கள் இரண்டாந்தர துணைப்பாத்திரங் களாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்குமிடத்து இது நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளமை புலனாகின்றது. கீழ்வரும் அட்டவணை பாத்திர உருவாக்கத்தின் பால் அசமத்துவ நோக்கைக் காட்டுகிறது.

| தமிழ் ஆண்டு | பாட அலகு எண்ணிக்கை | ஆண்பாத்திரங்கள் | | பெண்பாத்திரங்கள் | | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| | | முதன்மை | துணை | முதன்மை | துணை | |
| 5 | 36 | 28 | 02 | 02 | 14 | 06 |
| 6 | 22 | 09 | - | - | 06 | 13 |
| 7 | 28 | 17 | 02 | 04 | 10 | 07 |

ஆண்பாத்திரங்களை முதன்மைப்படுத்தும் இப்பாட அலகுகள் அவர்கள் ஆண்மை, வீரம், அதிகாரத்துவம், தலைமைத்துவம், திறமை, புத்திசாதூரியம் போன்ற பண்புகளுக்கு உரித்தானவர்கள்

என்பதையும் அவற்றின் பெருமைப்பாட்டையும் பேசும் அதேவேளை பெண்கள் இத்தன்மைகளுக்கு எதிரிடையானவர்களாக, ஆண்மை யின் நிழலில் சீவியம் ஓட்டுபவர்களாகப் பார்க்கப்பட்டுள்ளனர். அதாவது இவ்வதிகாரப்பாத்திரக் கட்டமைப்பினூடே ஆண் அதிகார அடுக்கை நிலைநிறுத்துவதுடன் பெண் துணைப் பாத்திரங்கள், மற்றும் அருந்தலான பெண்முதன்மைப் பாத்திரங்கள் மூலமாக பெண்குறித்த மரபுக் கருத்தியல்களையும், புனைவுகளையும் தாங்கிவரும் இலட்சிய மாதிரிகளை நிலை நிறுத்தும் முயற்சியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிலபெண் பாத்திரங்கள் கொடுமை, தவறு செய்யும் அல்லது இப்புனை களில் வழுவிய பாத்திரங்களாக அதாவது கண்டிக்கப்பட வேண்டிய பாத்திரங்களாக உருவாக்கப்பட்டுள்ளமையும் அக்கருத்தியல் வலி யுறுத்தலையே காட்டுகின்றன.

இத்தகைய மரபு வழிப் பாத்திர அமைப்பாக்கத்தில் குடும்பத்தில் ஆண் - பெண் அல்லது கணவன் - மனைவி என்ற உறவுநிலைக் கிடையிலான அதிகாரவயப்பட்ட தொடர்பு என்பது அழுத்தம் பெற்றுவிடுகின்றது. இப்புனைதலை இலகுவில் மாணவரிடம் ஆழப்ப டுத்துவதற்கான உத்தியாகவே புராண இதிகாசக் கதைகளும் அவ ற்றின் பாத்திரங்களும் சுவைபடப் பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ள ன. புராணக் கதைகள் கடவுளர்களிலும் கணவன் - மனைவி எனும் குடும்ப உறவுகளை நிறுத்தி அவ்வுறவு நிலைகளுக்கிடையிலான அசமத்துவ அதிகாரத்தன்மைகளை ஊட்டி அமைக்கப்பட்டுள்ளமை தெளிவு. எமது சைவ நெறிப் பாடப்புத்தகங்களை அவதானிக்குமிட த்து பெண் தெய்வங்களுக்கு முக்கியத்துவம் மிகவும் குறைவாகவே கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அவை துணைத் தெய்வங் கள் என்ற அடிப்படையிலேயே வருகின்றன. தாட்சாயினி - (சைவ நெறி-6), உமைதவம் (சைவநெறி5) போன்ற அலகுகளில் ஆண் தெய்வங்களுக்கு அடிமைப்பட்டவையாகவே பெண் தெய்வங்கள் காட்டப்படுகின்றன. உமைதவம் என்றபகுதியில் சிவனடியாரின் பிரார்த்தனையால் பூலோகத்தில் பிறந்த உமை சிவனை அடையத் தவம் செய்கிறார் இறுதியில்,

*''உமையே உம்முடைய தவம் கண்டு மகிழ்ந்தோம்.*
*எம்மை நீ அடைவாயாக''*

*என்று ஆசீர்வதித்தார் உமைபேரானந்தம் கொண்டார். இறைவன் திருப்பாதங்களில் விழுந்து வணங்கினார்''*

('உமைதவம்'-சைவநெறி-5)

இங்கு சிவனுக்கும் உமைக்குமிடையிலான அதிகார உறவு (உமையின் (பெண்) இரண்டாம் பட்ச நிலை) கணவன் - மனைவி குடும்ப உறவாக காட்டப்பட்டு ஆண் தலைமைத்துவ அந்தஸ்து வற்புறுத்தப்படுகின்றது.

கம்பராமாயணம், சிலப்பதிகாரம் ஆகிய காவியக் கதைகள் அல்லது அவற்றில் வரும் சீதை, கண்ணகி போன்ற பாத்திரங்கள் 'தமிழ் இலட்சியப் பெண்' என்பதன் குறியீடாக பாடசாலை ஆரம்ப மட்டத்திலிருந்தே மாணவர்களுக்கு ஊட்டப்படுகின்றன. இம்மாதிரிகள் 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்ற கொள்கை நிலைப்பாட்டில் நின்று அவனது இன்ப துன்பங்களில் பங்கெடுத்துச் சேவை செய்யும் வாழ்க்கைத் துணைகள், கற்பின் சின்னங்கள் என்பதை ஊட்டி பெண்ணின் அடிமைப்பாட்டை நியாயப்படுத்த அக்கதைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

மாணவருக்கு ஆரம்ப வகுப்பு முதல் உயர் வகுப்புவரை உயர்ந்த அறங்களை ஊட்டத் தகுந்த நூலாகத் திருக்குறள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் அவ்வாறு போதிக்கப்படும் அதன் பல்வேறு பகுதிகளும் ஆண் அதிகாரத்தை நிலை நிறுத்துவதனை எமது பாட ஏற்பாட்டாளர்கள் இன்னும் நேர்மையுடன் உணர்ந்ததாக இல்லை.

பாடப் புத்தகங்களில் குடும்ப உறவின் பின்புலத்தில் இயங்கும் அலகுகள் இயல்பாகவே இந்நியதியின் நியாயப்பாட்டை அனுசரித்தே செல்கின்றன. பின்வரும் கூற்று இதன் உச்சத்தையே காட்டிவிடப் போதுமானது.

*''பெண்ணுக்கு நான் ஒருத்தி; ஆணுக்கு அவர் ஒருவர்... அவர் தந்த அறிவு கொண்டு, அவர் உண்டு எங்கு உளர் என்று நம்பி இந்த உடலில் உயிரைவைத்துப் பாதுகாத்து வந்தேன்...அவரோ நல்லவர், அருளுடையவர், கிருபா சமுத்திரம், நானோ நன்றி கெட்டவள், குடிகேடி, அவர் உயிருக்குயிர் பரமாத்துமா.'' (''சிவகாமிசரிதை'' தமிழ்-10)*

ஆண் புனிதமானவனாக, பரமாத்துமாவாக உயர் அதிகார நிலை யிலும் பெண் இழிவு நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இவ்விரிந்த அதிகார இடைவெளியில் நின்று வழுவுதல் குடும்ப சீர் கேட்டை ஏற்படுத்தும் என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டாகவே இக்கதை அமைகிறது. மொத்தத்தில் பெண் இழி பிறவி, ஆண் புனிதப் பிறவி என்னும் ஆணிலைப்பட்ட சமூகவிழுமியங்களையே பாடநூல்கள் மாணவர்களிடம் ஒப்படைக்கின்றன.

*''ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்''*

(தமிழ்-8)

இப்பழமொழி குடும்பப் பொருளாதாரச் சுரண்டலுக்கும் குடும்பச் சீரழிவுக்கும் பெண் பிறவியைக் காரணமாக காண்கிறது. எனவே பெண் ஒரு இரண்டாந்தரப் பிரஜை என்ற கருத்துருவாக்கமே மாணவர்களுக்கு ஊட்டப்படுகின்றது.

குடும்பப் பொருளாதார நிலையைப் பொறுத்து ஆக்கல் சக்தி யாக அதன் உரித்தாளனாக ஆணும் பாதுகாவலாளியாக அழிப்புச் சக்தியாகப் பெண்ணும் குடும்ப ஒழுங்கமைபபில் உருவாக்கப்பட்டு ள்ளனர். மேற்குறுப்பிட்டவாறு கணவன் - மனைவி உறவில் கணவனு க்குச் சேவை செய்தல் என்பது பெண்ணின் தலையாய பண்பாட்டுக் கடமையாக வற்புறுத்தப்படுகின்றது. எமது குடும்ப அமைப்பில் ஆண் உழைப்புக்குரியவனாகவும் அதற்கேற்ற சக்திகொண்டவனாகவும் பெண் உழைப்புச் சக்தி அற்றவளாக வீட்டுக்குரியவளாகவும் சேவையா ளியாகவும் நோக்கப்பட்டு வந்துள்ளனர். இத்தகைய வேலைப்பகிர் வின் பால்சார் சமூக ஒடுக்குதலுக்கு எந்தவிதத்திலும் எதிரிடையாக பாடவிதானமோ கற்பித்தலோ அமையவில்லை.

''மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை''

(திருக்குறள்-சைவநெறி-8)

வாழ்க்கைத் துணை நலம் எனும் அதிகாரத்தில் மனைவிக்கான அடிமைத்தன இலக்கணங்களை அடுக்கும் வள்ளுவர் கணவன் வருவாய்க்கேற்ற வாழ்க்கையை ஓட்டுபவளே சிறந்த துணை என முத்திரை குத்தி ஆண் உழைப்புக்குரியவன் என்பதற்கும் பெண் வீட்டில் கட்டுண்டவள் என்பதற்கும் வக்காலத்து வாங்குகிறார்.

*''ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும் பசிக் குதவா அன்னம்*

*தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திரமறியாப் பெண்டிர்...*

*பயனில்லை ஏழுந்தானே'* ('விவேக சிந்தாமணி' தமிழ்-9)

இப்பாடல் பயனற்ற ஏழுவிடயங்களுள் வீட்டின் நிலை (பொருளாதார) அறியாமல் நடக்கும் பெண்ணையும் அடக்குகின்றது. இங்கும் பெண் என்பவள் குடும்பச் சேவகி என்ற நிலைப்பாடு சூசகமாகக் காட்டப்படுகிறது. எனவே ஆண் குடும்ப உற்பத்தியாளனாக கடின உழைப்பாளியாகக்கருதப்பட பெண் அவ்வருமானத் தன்மைக்கேற்ப வீடு சார்ந்த பணிகள் அனைத்தையும் ஆற்ற வேண்டியவளாகப் பேணப்பட்டு வந்த மரபை எமது பாடநூல்கள் நியாயப்படுத்துகின்றன. 7 ம் ஆண்டு தமிழ்ப் பாட நூலை எடுத்தால் இதில் ஆண் முதன்மைப்படுத்தப்படும் 17 அலகுகளில் அனேகமானவை இவ்வேலைப் பகிர்வை அழுத்துவனவாகவே அமைக்கப்பட்டுள்ள.

இத்தகைய பால் அடிப்படையில் அமைந்த தொழிற்பாகுபாட்டினை வலுவாக்கும் வகையிலேயே சில பாட ஏற்பாடுகளும், சிலபாடத் தெரிவுகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை பாடசாலைக் கல்வியானது பெண்களது தாழ்த்தப்பட்ட நிலையினையும் ஆண் பெண் அசமத்துவ உறவினையும் நிலைநிறுத்தும் கருவியாக செயற்படுவதனைத் தெட்டத் தெளிவாக்குகிறது.

எமது பாடசாலைகளில் மனைப்பொருளியல், விவசாயம், வர்த்தகம், சங்கீதம், சித்திரம், மரவேலை போன்றன தெரிவுக்குரிய பாடங்களாகவுள்ளன. இப்பாடங்களைத் தெரிவு செய்வதில் பெரிதும் பால்வேறுபாடுகள் செயற்படுகின்றன எனலாம். குறிப்பாக ஆண்கள் விவசாயம், வர்த்தகம், மரவேலை போன்ற தொழிற்துறையுடன் தொடர்புடைய பாடங்களையும் பெண்கள் மனைப்பொருளியல், சங்கீதம், நடனம் போன்ற வீட்டுப்பணி, கலையுடன் தொடர்புபட்ட பாடங்களையும் தெரிவு செய்கின்றனர். இப்பாடத் தேர்வின்படி பாலடிப்படையிலான வேலைப்பகிர்வுக்கு மாணவர்கள் பயிற்றுவிக்கப் படுகின்றனர். இதில் விவசாயம் - மனையியல் பாடத்தேர்வை எடுத்துக் கொண்டால் விவசாயம் ஆண்களுக்குரிய (தொழிலுக்குரிய) பாடமாகவும், மனையியல் பெண்ணுக்குரிய (வீட்டுப்பணிக்குரிய) பாடமாகவும் கருதும் மனோபாவமே நிலவுகின்றது. மனைப்பொருளியல் பாடமென்பது பெண்கள் வீட்டுப்பணியை முறைப்படச் செய்வதற்கான முன் பயிற்சியாகவே அமைக்கப்பட்டுள்ளது. இங்கு

சமைத்தல், தையல், உடைதுவைத்தல், உபகரணசுத்தம், குழந்தை பராமரிப்பு, நோய் பராமரிப்பு, வீட்டு அலங்காரம் என அனைத்து வீட்டுக்கடமைகள் தொடர்பாகவும் பெண்களுக்கு அறிவும் பயிற்சியும் வழங்கப்படுகின்றது. அதேபோல் விவசாயம் ஆண்களை விவசாயத்தொழிலுக்கு ஆயத்தப்படுத்தல், பயிற்றுவித்தல் என்ற நோக்கின் அடிப்படையிலேயே கற்பிக்கப்படுகின்றது. எனினும் விவசாயம் ஆணுக்குரிய பாடம் மனைப்பொருளியல் பெண்ணுக்குரிய பாடம் என்ற மனோநிலைக்குப் புறம்பாக விவசாயத்தை சில மாணவியர் தெரிவு செய்வதும் ஆனால் மனையியல்பாடத்தை ஆண்கள் ஒரு போதும் தெரிவு செய்யாமையும் கருத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள். விவசாயப்பாடத்தை பெண்கள் தெரிவு செய்வதை மாணவியரும் ஆசிரியரும் விரும்பும் அதேவேளை மனையியல் பாடத்தை ஆண்கள் தெரிவு செய்வதை மாணவரும் ஆசிரியரும் விரும்பாமைக்கும் அது ஒரு அவமானச் செய்கையாக கருதுவதற்கும் அடிப்படை பெண்ணின் தாழ்த்தப்பட்ட நிலையுடன் இவ்வேலைப் பகிர்வு கொண்டுள்ள நெருக்கத்தையே உணர்த்துகின்றது.

மட்டக்களப்புப் படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளின் பாட ஏற்பாட்டை ஆராய்ந்த போது கூடுதலான பாடசாலைகளில் மனையியல் பாடம் இன்றி விவசாயப்பாடமே தெரிவுக்குரியதல்லாத பாடமாக இருந்தது. இதுபற்றி வினவியபோது வீட்டு வேலைகளைப் பெண்பிள்ளைகள் தங்கள் வீடுகளில் நாளாந்தக் கடமையில் இயல்பாகவே பெற்றுவிடுவர். அதனால் அப்பாடம் தேவையில்லை. ஆனால் பெண்களும் விவசாயச் செய்கையில் ஆண்களுக்குத் துணையாக நிற்க விவசாயப்பாடப் போதனை அவசியமென்ற கருத்தினை அதிபரும் ஆசிரியரும் கொண்டிருந்தனர். எனவே விவசாயப்பாடத்தைத் தெரிவு செய்து கொள்ளல் என்பது பால் அடிப்படையிலான தொழிற்பாகுபாட்டை உடைக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அது வீட்டுப்பணியுடன் வெளியில் வேலைக்குச் செல்லவும் பெண்களை நிர்ப்பந்தித்து அவர்களை இரட்டைச் சுமைக்கு உட்படுத்தும் தந்திரோபாயமாகவே உள்ளது. பாடநூல்களில் இவ்வாறு இரட்டைச் சுமைக்கு உட்படும் பெண்ணை அச்சுமை பற்றிய அக்கறையோ, அனுதாபமோ அற்ற வகையில் அதன் அவசியப்பாட்டை அழுத்துகின்ற பாட அலகுகள்

பல இடம் பெறுவதும் இன்றைய பாடசாலைக் கல்வியின் மனிதாபிமா னத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்றது. தேயிலைத் தோட்டத்திலே ஒருநாள்-(தமிழ்-7) பாயிழைக்கும் பெண்கள் - (தமிழ்-7) என்பன இதனை அழகாகக் காட்டுவன. பாயிழைக்கும் பெண்கள் என்ற பாடம் பாயிழைத்தல் தொழிலை வெறும் பொழுது போக்குச் செயலாகவே காட்டுகின்றது. பொதுவாக இவற்றையெல்லாம் நோக்கும் போது எமது பாட நூல்கள் பெண்ணின் மரபுசார்ந்த பாத்திரங்களுக்காக வாதாடுவனவாகவே உள்ளன.

பெண்ணைத் தன்னிலைத் தாழ்வுக்கு உப்படுத்துவதில் பாடசா லைகக்கல்வி பாரிய பங்கை ஆற்றிக் கொண்டு வருகின்றது என்பதை மறுக்க முடியாது. அவ்வகையில் பெண் குறித்த மரபுப் புனைவுகளை அவை வலுவாக ஊட்ட முயல்கின்றன. பெண்ணின் குணப்பண்பு, தன்மை, தோற்றப்பாடு பற்றிய புனைவுகள் இதில் முக்கியமானவை. அழகு, வனப்பு, மென்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம், அன்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்கள் ஆகிய வற்றின் உருவாக்கமாகப் பெண் கட்டமைக்கப்பட்டுள்ளமை பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் பாட நூல்கள் மாணவருக்குப் போதிப்பதில் முனைப்பான கவனம் செலுத்திவருகின்றன.

இத்தகைய பெண்மையின் குணங்கள் பற்றிய புனைவுகள் ஆணதிகாரத்தை நிலை நிறுத்துபவை. ஆசாரக்கோவையில் ஒரு பாடல் பின்வருமாறு அமைகின்றது.

''ஒத்த நாணமில் லாமட மங்கயர்
உப்பில்லாவெறு முண்டியைப் போல்வரே...''

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே: அதுபோல் நாணம் எனும் குணமில்லா மங்கை சமூகத்துக்கு (ஆணுக்கு) வேண்டாதவள் என் கிறது பாடல்.

ஆசிரியர் வகுப்பறையில் வருணிப்பு விளக்கம் உதாரணங்க ளைக் காட்டல் போன்ற கற்றல் செயற்பாடுகளின் போது பெண்மீதான இத்தகைய புனைவுகளை நிறுவும் சொற்கள் சொற்றொடர்களைச் சரளமாகப் பயன்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். குறிப்பாக இலக்கியம் இலக்கணம் (கவிதை) என்பவற்றைக் கற்பி க்கும் போது இத்தன்மைகளைக் கூடுதலாகக் காணமுடியும். இவ்வகை யில் பெண்ணின் மார்பு, விழி. தொடை, இடை, என்ற பல்வேறு அங்க

வருணிப்புகள் சரளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக 'கொடியிடை மடமயில்...' 'திருந்தி ழைக்கொடி மடவியர்...'. 'கொவ்வைவாய்..', 'செவ்விபூத்திருந்த பொன்மடந்தை...'என்பவற்றைக் கூறலாம்

இவை தமிழ் ஆண்டு-11 ஆசாரக்கோவையில் வருவன. க.பொ.த உயர்தரத்திற்குரிய செய்யுட்பகுதியில் குறிப்பாகக் கலித் தொகைப் பாடல்கள் இன்னும் சிறந்த உதாரணங்களாகும். இவை முழுக்கப் பெண்வருணிப்பாகவே உள்ளன.

''முதிர் கோங்கின்... உணராயோ'' (22-25)

என்ற பாடலின் பொருள், நேரிதான மயிர் வரிகளையுடைய முன்கையையும் இளமையையும் கொண்ட நல்லவளே. நினது முலைகள் முற்றிய கோங்க மரத்தினது இளைய முகைகள் போன்றன அடிபெருத்துக் கண்ணுக்குத் தெரியும் படியாகப் பருத்த தென்னங் குரும்பை போன்றன; மழைத்துளியாலுண்டான நீர்க்குமிழி போன்றன; இவ்வாறு பெருத்த நினது இளமுலைகள் நின்னைக் கண்டவர்களுடைய உயிரை வாங்கிக் கொள்ளும் என்பதை நீ உணர்வாயா? அல்லது உணரமாட்டாயா?

பெண்ணின் மார்பகத்தை அப்பட்டமாகவே வருணிக்கும் இப்பாடலை வகுப்பறையில் ஆசிரியர் விளங்கப்படுத்தும் போது ஆசிரியர், ஆண் பிள்ளைகள், பெண்பிள்ளைகள் ஆகியோரின் உளப்பாங்கின் வேறுபாடு இங்கு முக்கியமானது. பொதுவாக இவ்வகை வருணிப்பில் ஆசிரியரும் (ஆண்) ஆண்பிள்ளைகளும் விருப்பார்வத்தையும் மகிழ்வையும் அடைவதுடன் மாணவியரை ஒருவித கேலிமனப் போக்குடனே இவ்விடத்தில் நோக்க முயல்கின்றனர். அதேவேளை மாணவியர் பெரும் உளவியல் பாதிப்புக்கு உட்படுகின்றனர் என்பதை அவர்கள் எண்ணத்தவறிவிடுகின்றனர். இத்தகைய பாடலை ஆசிரியை ஒருவர் பொருள் விளக்கம் செய்ய வேண்டிய நிலையில் பெரும் அவதிக்குட்படவே வேண்டியுள்ளது.

எனவே இத்தகைய அப்பட்ட அங்க வருணிப்புப்பாடல்களை மாணவர் போதனைக்காக பாடவிதானத்தில் இணைத்தல் என்பது ஆணாதிக்க மனோபாவமே என்பதில் ஐயமில்லை. மற்றொரு விதத்தில் இவ்வருணிப்புக்கள் பெண் ஒரு அழகுச்சாதனமாக அல்லது ஆண்களின் பாலியல் தீனிகளாக நோக்கப்பட்டுவரும் பாரம்பரியச்

சமூகப் பிற்போக்குவாதக் கருத்தோட்டங்களை மாணவர்களிடம் ஒப்புவித்து ஆணதிகாரத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தும் பணியை ஆசிரியரும் பாடவிதானமும் நன்கு திட்டமிட்டு நிறைவேற்றி வருவதைத் தெளிவுபடுத்துகின்றன.

காரைக்காலம்மையார் பற்றிய புராணக்கதையில் காரைக் காலம்மையார் (புனிதவதியார்) தன் குடும்பவாழ்வை முடிக்கும் விளிம்பில்,

"இனிஇவனுக்காகத்தாங்கிய அழகு பெருந்திய இத்தசைப்பொதியை...
(தமிழ்-7)

என்று கூறும் அவரது கூற்று பெண்ணின் உடல் (அழகு) ஆணுக்கான பாலியல் தேவையை நிறைவேற்றுவதற்கான உருவாக்கமாகவுள்ளது.

பாலியல் பற்றிய சமூகநோக்கில் பெண்ணின் பாலியல் கட்டுப்படுத்துதல், எல்லைப்படுத்துதல் ஆனால் ஆணின் பாலியலை விரிவாக்கம் செய்தல் என்ற இரு தளத்திலிருந்தும். இயங்கும் வகையிலேயே பாட நூல்கள் திட்டமிடப்பட்டுள்ளன. பெண்ணின் பாலியல் கட்டுப்பாடு என்பதில் அவளது தூய்மை, நிறை அல்லது கற்புப் பற்றிய ஒரு சார்பு அழுத்தம் பெறுகிறது. கலாசாரத்தை உயர்த்திப் பிடிப்பவர்களாகவும் அதன் குறியீடாகவும் பெண் கட்டமைக்கப்பட்டு பாடநூல்களில் வெளிப்படையாகவே இடம் பெறுகின்றன.

இவ்வாறு பெண்பாலியல் கட்டுப்படுத்தல் பற்றி கரிசனை காட்டும் பாடநூல்கள் மாறாக ஆண்பாலியல் பரவலாக்கம், சுதந்திரம் என்ற சார்பு நிலையை அடித்தளமாகக் கொண்டவையாகவுள்ளன. சைவநெறி பாட நூல்கள் சிவன், முருகன், பிள்ளையார், போன்ற கடவுளர்கள் பலதாரங்களைக் கொண்டவர்கள் என்பதையும் சில போது பல மணநிகழ்வு பற்றியும் கூறுகின்றன. இது உலகியல் பலதார மணமுறைக்கான சமூக அங்கீகார அடையாளமாகவேயுள்ளது. காரைக்காலம்மையார் (சைவநெறி-7) சுந்தரர் (சைவநெறி-7) மற்றும் ஐவரானோம் (தமிழ்-6), இராமன் (தமிழ்-5) போன்ற பல பாட அலகுகளும் பலதாரமணமுறையை ஆதரிப்பனவாகவுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் எமது பாடநூல்கள் ஆணதிகாரத்துவதையும் பெண்களுக்குப் பாதகமான மனப்பாங்குகள், மரபுக்கருத்தியல்கள், கடமைக்கூறுகளையும் பிரசாரப்படுத்தும் சாதனங்களாகவே

செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது உறுதி. எனவே இத்தகு சமூக அநீதிப்பாட்டை உடைக்கும் முயற்சியின் முன்னெடுப்பு இன்றைய நவீன சூழலில் அவசியமானது. ஆகவே நாம் எத்தகைய முன்னெடுப்புகளை மேற்கொள்ளலாம்?

முதலில் கல்வியின் அரசியல் பின்புலம் பற்றி அறிதல் அவசியம். எமது நாட்டில் பெண்ணியச் சித்தாந்தம் அரசியல் ரீதியாக கருத்திற் கொள்ளப்படாத நிலையிலேயே கல்விநிருவாகம் அரசகட்டுப் பாட்டில் இயங்குகின்றது. கொள்கைவிருப்பு, பாடவிதான ஏற்பாடு என்பனவெல்லாம் அரச நலன் பேணுவதாகவும் அரச பிரதிநிதிக ளான பாடவிதான அமைப்பாளரின் ஆணாதிக்க மனோபாவத்து க்கேற்பவுமே திட்டமிடப்படும் போது அங்கு பால் சமத்துவத்தை எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் பெண்களின் விடுதலைப் போராட்டம் அரசியல் அழுத்தங்களை உக்கிரப்படுத்துவதாக அமைய வேண்டும். அப்போ ராட்டம் என்பது புரட்சிகர அரசியல் போராட்ட வடிவத்தினைப் பெறவேண்டும். இவற்றின் மூலம் அரச கொள்கையிலும், கல்விக் கொள்கையிலும் பால் சமத்துவ வரைபுகளை முக்கியப்படுத்தலாம். அல்லது கல்வி நிருவாகம் அரசியல் பிடியிலிருந்து விடுபட்டு அது பெண்களும் உரியமுறையில் பிரதிநிதித்துவம் பெறும் முற்போக்குச் சிந்தனாவதிகள் குழாத்தினரைக் கொண்ட ஒரு சுதந்திரமான கல்வி அமைப்பிடம் கையளிக்கப்பட்டு பால் சமத்தவம் குறித்த அம்சங்கள் சமூக அமைப்பை மாற்றத்தக்க வகையில் வரையப்பட வேண்டும்.

கல்விக் கொள்கையில் மாத்திரம் பால் சமத்துவம் பிரதிபலிக்கப் பட்டால் மட்டும் போதாது. பாட ஏற்பாட்டாளர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் மனப்பாங்குகளில் மாற்றங்களைக் கொணர்வதன் மூலமே காத்திரமான பலனை அடைய முடியும். அதற்காக அவர்களு க்கான பயிற்சிகள், கருத்தரங்குகளில் பெண்ணிலைவாதம், பால் சமத்துவம் பற்றிய பயிற்சிகள் வழங்கலாம். மேலும் இவை தொடர்பான ஆசிரியர் கையேடுகளைத் தயாரித்தல் அல்லது ஆசிரியர் கையே டுகளில் இவற்றை முக்கிய பகுதிகளாக இணைக்கலாம்.

பாடசாலைகளில் இடையிடையே பால் சமத்துவம், பெண்ணு ரிமை பற்றிய கருத்தரங்குகள் பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தலாம். இதற்குப் பெண்ணிலைவாதிகள், சமூகமுற்போக்

காளர்களை அழைக்கலாம். இவற்றோடு பெண்ணியச் சித்தாந்தம் தொடர்பான தனியான பாடத்தை அனைத்துப்பாடசாலைகளிலும் கட்டாய பாடமாக்கல் அவசியம். மற்றும் கல்விக் கொள்கையிலும் பாடவிதானங்களிலும் நவீன சிந்தனை முறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

இவற்றைவிட கல்விக் கொள்கையில் முக்கியம் பெறும் கலா சாரம், பண்பாடு, மரபுகளைப் பாதுகாத்தல், வளர்த்தல் ஆகிய அம் சங்களில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். பண்பாட்டினுள் ஆழச் சென்று புதிய பார்வைகளைப் பெறும் நோக்கில் கொள்கை, பாடவிதானங்களை அமைத்தல் வேண்டும். மரபு, கலாசாரம் ஆகிய தொகுதிகளில் உள்ள ஜனநாயகத்து ரோகமான புனிதங்களில் உடை வை ஏற்படுத்துவது மிக அவசியம். அதிகாரத்தைத் தம்பிடிக்குள் வைத்திருக்கும் இப்புனைவுகளை மீள்பரிசீலனை செய்வதாக பாட ஏற்பாடு அமையுமெனின் அது பெரும்மாற்றத்தையே விளைவிக்கும்.

மொத்தத்தில் கல்வி முதலாளிததுவக் கல்வியாக அமையாது விடுதலைக்கான கல்வியாக அமையவேண்டும்.



*1999 மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி மட்டக்களப்பில் சூ.பெ.அ.நி. ஆல் நடத்தப்பட்ட ஊர்வலத்தின் ஒரு பகுதி*

# வருடாந்தச் சந்தா - பெண்

| | | |
|---|---|---|
| ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரலியா | : | US $ 20/= |
| இந்தியா | : | US $ 10/= |
| இலங்கை | : | ரூபாய் 150/= |

**சந்தா விண்ணப்பம் 199................**

**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் :..........................................................................

விலாசம் :..........................................................................

திகதி :..........................................................................


இத்துடன் காசோலை / மணி ஓடரை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்


## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

46/2, பழைய வாடிவீட்டுத் தெரு,
மட்டக்களப்பு,
இலங்கை.

## *Suriya Women's Development Centre*

*46/2, Old Rest House Road,*
*Batticaloa,*
*Sri Lanka.*



எப்படி நான் நினைப்பேன்?
எப்படி நான் மறப்பேன்?

எவரோ சிலர் வந்து
துடிதுடிக்க என் தாயை
கடித்துக் குதறி
கதறியழச் செய்ததனை............

எதனாலோ என் தந்தை
என்னருமைத் தங்கையினை
வேதனைப்படுத்தி
வீறிட்டழ வைத்ததனை....

எப்படி நான் நினைப்பேன்?
எப்படி நான் மறப்பேன்?

இனந்தெரியாத சிலராலே
இழுத்துச் செல்லப்பட்டு
இன்றுவரை திரும்பாத
என் அன்பு அண்ணனை.........

தாயையும் மகளையும்
ஆஸ்பத்திரியில் பார்த்துவிட்டு
அவசரமாய் திரும்புகையில்
அத்தானுக்கு நேர்ந்ததனை.........

எப்படி நான் நினைப்பேன்?
எப்படி நான் மறப்பேன்?

கடன்பட்டுக் கட்டிய
எம் வீட்டின் குவியல்களை.......
குவியல்களுள் உறைந்திருக்கும்
குருதித் துளிகளை..........

அழகாக நான் வளர்த்த
ரோஜாச் செடிகளை
செடிநடுவே பறந்திருந்த
சிட்டுக் குருவிகளை..........

எப்படி நான் நினைப்பேன்?
எப்படி நான் மறப்பேன்?